
கோகுலம்

GOKULAM

ஜூன் '89 ரூ. 3/—





MAGGI® கிளப் கேளிக்கையும், உல்லாசமும் நிறைந்த 1989

எல்லா மேகி பிரியர்களுக்கும் இந்த ஆண்டு விதவிதமான புதிய பரிசுகளை மேகி கிளப் வழங்குகிறது.

உங்கள் இலவசப் பரிசை உடனே பெறுங்கள்!

5 மேகி நூடுல்ஸின் காலி பேக்குகளிலிருந்து அதன் முன்பக்கம் அச்சிடப்பட்டுள்ள இந்த MAGGI முத்திரையை வெட்டியெடுத்து எமக்கு அனுப்பினால், நீங்கள் விரும்பும் ஒரு இலவசப் பரிசு உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். 6 முதல் 8 வாரங்களுக்குள் மேகி கிளப்பில் இருந்து கேளிக்கைகள் நிறைந்த பரவசமூட்டும் பரிசு உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.


மறவாதீர்:

நீங்கள் மேகி கிளப் உறுப்பினர் எனில் ஒவ்வொரு முறையும் எமக்கு எழுதும்போது உங்கள் பெயர், முகவரி மற்றும் உறுப்பினர் எண்ணுடன் நீங்கள் விரும்பும் பரிசின் பெயரையும் குறிப்பிட்டு எழுதவும்.

நீங்கள் மேகி கிளப் உறுப்பினர் இல்லையெனினும் கூட எமக்கு எழுதும் போது உங்கள் பெயர், முகவரியுடன் நீங்கள் விரும்பும் பரிசின் பெயரையும் குறிப்பிடவும்.

எங்கள் முகவரி: மேகி கிளப், அஞ்சல் பெட்டி எண்: 3788, புது தில்லி 110055

HTA 6320 TAM



1989 ஜூன் மாத இதழ்
மலர் 7 இதழ் 5

கோகுலம்

அன்புத் தம்பி தங்கைகளே!

உளம் கனிந்த ஆசிகள். உயர்வடைய வாழ்த்துக்கள்.

நடந்தவை நல்லவையாக இருந்தன. இனி நடப்பவை மேலும் நல்லவையாக இருக்க வேண்டும்.

முத்தண்ணன் அழ. வள்ளியப்பா அவர்கள் அடி நாள் தொட்டு என்னிடம் மாறாத அன்பு கொண்டிருந்தார்கள். அவர் விட்டுச் சென்ற பணியை இட்டு நிரப்ப, அவர் அமர்ந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும் எனக்கு, அண்ணாரின் அன்பும் ஆசியும் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அவர் வழிநின்று உங்களையெல்லாம் சிந்திக்க வைத்து, சிரிக்க வைப்பதுடன் சற்றே சிலிர்க்க வைக்கவும் விரும்புகிறேன். எது செய்தாலும், அது உங்கள் உயர்வுக்கும் உற்சாகத்துக்கும், படிப்பினைக்கும் பண்பாட்டுக்கும், அறிவுக்கும் பரிவுக்கும் உரமிடுவதாய், உங்களை உயர்த்துவதாய்த்தான் இருக்கும் என்ற அளவில், உங்கள் சார்பில் நின்று உங்கள் பெரியவர்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

கோகுலம் உங்கள் குடியிருப்பு. பிருந்தாவனம் உங்கள் நந்தவனம். உங்களை வரவேற்கப் பூத்து மணம் பரப்பிக் காத்திருக்கிறது, எப்போதும். இதில் நுழைய எந்தக் கட்டுப்பாடும் நிபந்தனையும் கிடையாது. இதைச் செழிக்க வைக்க நீங்கள் கதை நீர் பாய்ச்சலாம்; துணுக்கு உரமிடலாம்; சிரிப்பால் களை(ப்பு) எடுத்துச் செம்மைப்படுத்தலாம். தேவை: சுவை புதிது, பொருள் புதிது என்ற தரம்தான். ஜமாயுங்கள்!

நீங்கள் ஏக்கத்துடன் கேட்டிருந்த சித்திரத் தொடர், ஓவியர் ஜெயராஜ் கைவண்ணத்தில் இந்த இதழில் ஆரம்பமாகியிருக்கிறது. உங்களைப் பட்டிமன்றத்தில் ஏற்றிவிட்டால் உங்களால் எப்படியெல்லாம் பின்னி எடுக்கமுடியும் என்பதற்கு முன் மாதிரியாய் ஒரு விவாத மேடை கட்டிவிடப்பட்டிருக்கிறது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் அல்லவா? அதனால்தான் அவர்களை வைத்தே முதல் பட்டி மன்றம். மற்றப் 'புதுசு'களை நீங்களே கண்டுகொள்ளுங்கள்.

'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற எண்ணம் வேண்டாமா, உங்களுக்கு? கோகுலத்துக்கு உங்கள் கூட்டாளிகள் பெருக வேண்டும். பெரியவர்களிடமும் காட்டி, அவர்களது விமரிசனங்களைக் கேட்டு எழுதுங்கள்.

நீக்க வேண்டியதை நீக்கி, சேர்க்க வேண்டியதைச் சேர்த்து, என்றும் உங்கள் நலனுக்காகச் செயல்படக் காத்திருக்கும் —

உங்கள் அண்ணன்,

கௌரவ ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்புவேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

அம்மா உசத்தியா?

ஆர். விஜய்



நமக்கு சக்தியே கிடைக்குது!

வெங்கடகிருஷ்ணன்: சம்பாதிக்கிறது அப்பாவின் கடமை. சமைக்கிறது அம்மாவின் கடமை. வீட்டு நிர்வாகத்திலே, பிள்ளைகளை வளர்க்கிறதிலே யார் ரொம்ப உதவியாக இருக்கிறாங்களோ அவங்கதான் உசத்தி. அப்படியும் பார்த்தால் அப்பாதான் உசத்தி. ஆபீஸ்லேயும் வேலை செய்துட்டு வந்து, வீட்டுக்கு

எம். ஹேமா



இந்தப் பட்டிமன்ற விவாதத்திலே கலந்து கொள்கிறவர்கள் எட்டாம் வகுப்புக்கு மேல் எட்டாதவர்கள்தான். இருந்தாலும் என்ன போடு போட்டிருக்கிறார்கள்!

இந்த விவாதத்தின் முடிவு எப்படி இருந்தாலும் அப்பா — அம்மா இருவரில் யாரும் வருத்தப்படப் போவதில்லை. அப்பாதான் உசத்தி என்றால் அம்மாவுக்குச் சந்தோஷம். அம்மாதான் உசத்தி என்றால் அப்பாவுக்கு மகிச்சி ஏற்படும் இல்லையா?

(பங்குபெறும் அங்கத்தினர் எம். ஹேமா, எஸ். அபர்ணா, ஆர். விஜய், ஆர். வெங்கடகிருஷ்ணன்)

அப்பா உசத்தியா?

எஸ். அபர்ணா



ஆர். வெங்கட கிருஷ்ணன்



அபர்ணா: இதில் என்ன சந்தேகம்? அப்பாதான் உசத்தி. எதுக்குப் பணம் வேணும்னாலும் அதுக்குச் சம்பாதித்துக் கொடுக்கிறவரே அப்பாதானே?

ஹேமா: ஹ்ம். பணம் வந்துட்டால் போதுமா? பசிக்கிறதுன்னா, ரூபாயைச் சாப்பிட முடியுமா? சமைக்க வேண்டாமா? அம்மாதான் உசத்தி. ருசியா சமைச்சுப் போட்டால்தானே

காஸ் சிலிண்டர் இப்படி எல்லாவற்றையும் வாங்கி வர்றது அப்பா தானே?

விஜய்: பள்ளி போகிற குழந்தைகளைச் சிக்கிரமே எழுப்பி, சூடாப் பானம் கொடுத்து, யூனிஃபார்ம் ட்ரெஸ் மாட்டி விட்டு, ஷூ லேசு கூடப் போட்டு விடறது அம்மாதான்!

ஹேமா: வெல் ஸெட் விஜய்! காலையிலே சாப்பிடறதுக்கும் சரி, மத்தியான டிபனுக்கும் சரி, சுவையா உணவு, டிபன் தர்ற அம்மாவுக்கு ஈடு உண்டோ?

அபர்ணா: அதெல்லாம் சும்மா.

பாதி வீடுகளிலே காலையிலே அம்மா சமையல் அறையிலேயே குடியிருப்பாங்க! அப்பாதான் குழந்தைகளைக் குளிப்பாட்டி, ட்ரெஸ் பண்ணி, தயார் பண்றது. அதிலேயும் அழற குழந்தைகளைச் சமாதானம் பண்ணி, அடிக்காமல், அன்போடு செய்யறது அப்பாதான்!

வெங்கடேஷ்: ரொம்பக் கரெக்ட்! என் ஃப்ரண்ட்ஸ் வீட்லேயும் பார்த்திருக்கேன். அப்பாதான் வீட்டுவேலைகளையும் செய்வாராம்! கிணற்றிலே தண்ணி இழுப்பது, துணி துவைப்பது — ஏன், சமையலுக்குக் காய்கறி கூட நறுக்குவாராம்...! (சிரிக்கிறான்)

விஜய்: நீ சொல்ற மாதிரி ஏதோ ஓரிரண்டு வீட்லேதான் இருக்கும். ரொம்பப் பேர் வீட்லே, அப்பா படுக்கையில் படுத்துட்டே பெட் காப்பி குடிச்சிட்டு, பேப்பர் படிப்பார். அம்மாதான் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டுச் செய்யறாங்க. அம்மாதான் மளிகை லிஸ்ட் போடறாங்க, காஸ் ஆயிடுச்சுன்னா டெலிபோன் பண்றாங்க...

ஹேமா: இரு... இரு, நானும் சொல்றேன். அப்பாவுக்கு ஆபீஸ் போறதுக்கு இன்ன ட்ரெஸ்ன்னு எடுத்து வைச்சு, சமயத்துலே ஷூக்களுக்குப் பாலீஷ் போட்டு வைக்கறதும் உண்டு. வண்டியிலே போய் ஆபீஸிலே ஜம்னு உட்கார்ந்திடுவார் அப்பா. இங்கே அம்மாதான் விடியற் காலையிலேயே எழுந்து, பால் வாங்கி, காப்பி போட்டு, சமைச்சு... அப்பப்பா!

அபர்ணா: சும்மா அளக்காதே. பல பேர் வீட்லே அப்பா நைட் ஷிப்ட்னு வேலைக்குப் போய்ட்டு காலையிலேதான் வருவாரு. கொஞ்ச நேரம் கண்மூடித் தூங்க விட மாட்டாங்களே! சோப் இல்லே, தேங்காய் இல்லே... குழாய் ரிப்பேர்.. ரேடியோ பாடலியே... டீ.வி.யிலே வெளிச்சம் வருது, பாட்டு வரல்லேன்னு தொண தொணன்னு பேசி... ஓ காட்! இந்த மாதிரி அம்மாக்களும் நிறையவே இருக்காங்க.

ஹேமா: நோ. நோ... அம்மாதான் எப்பவுமே ரொம்பப் பொறுமை. அப்பா திடீர்னு, நாலு ப்ரெண்ட்ஸை அழைச்சுட்டு வந்துடுவாரு. டிபன், காப்பி, சாப்பாடுன்னு அதிகாரம் வேற! சிரிச்ச முகத்தோடு அம்மா வேலை செய்யற போது, அம்மாவுக்கு மிஞ்சி உலகத்திலே யாருமே இல்லைன்னு ஆயிடும்.

வெங்கடேஷ்: ஹூக்கும்... ஃப்ரெண்ட்ஸ் கூட்டிட்டு வந்தால் என்ன? அம்மா வேலை செய்யக் கூடாதா? அந்த ஃப்ரெண்ட்ஸுக்கு உபசாரம் பண்ணினால் அப்பாவுக்கு எவ்வளவோ விஷயத்திலே உபயோகமா இருக்கும். வருமானமும் கூடி வரும். நிறையப் பணம் வந்தால் வீட்டுக்குத்தானே ஃபிரிட்ஜ், கலர் டீ.வி., கட்டில், ட்ரெஸ்னு வாங்கப் போறாரு!

விஜய்: பணம் பணம்னு அதிலேயே இருக்கே! குழந்தைகளுக்கு அன்பும், பாசமும் ரொம்பத் தேவை. பள்ளிக்குப் போய்விட்டு வந்து அங்கே நடக்கிற சமாசாரங்களை, தமாஷ்களைப் பொறுமையாக, ஆசையாகக் கேட்கிறது அம்மாதானே? நமக்கு த்ரில்லிங்கா இருக்குல்லே?

ஹேமா: பலே பலே! விஜய்... தூள் கிளப்பிட்டே! பல நாள் ராத்திரியிலே தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தால், 'ஏண்டா கண்ணு, கால் வலிக்குதா, கை வலிக்



குதா?'ன்னு கையைக் காலை அமுக்கிப் பிடித்துவிட்டு, ஜோராகக் கதை சொல்லி, தூங்க வைக்கிறது அம்மா தான்! அப்பா கிட்டவே வரமாட்டாரு. அவருதான் ஆபீஸ்லேர்ந்து லேட்டா வர்றாரே! கேட்டால் ஆடிட் வந்துடுச்சு, ஓவர்டைம் அப்படி, இப்படின்னு ஏதாவது சாக்குச் சொல்றாரு!

அபர்ணா: ஸ்டாப் இட்! ஆபீஸ்லே போய் வேலை செய்துட்டு வர்றது எவ்வளவு கிரேட் விஷயம் தெரியுமா? பரீட்சை முடிஞ்சு, லீவு விட்டால் ஜாலியா டூர் போறது, பொருட்காட்சி போறது, இதெல்லாம் அப்பா தானே ப்ளான் போட்டு அழைச்சுண்டு போறார்?

ஹேமா: கிழிஞ்சுது போ! அப்படியே போனாலும் அம்மாதான் லிஸ்ட் போட்டு, பெட்டியிலே பாக் பண்ணணும். கடைசி நிமிஷத்திலே அப்பா வந்து, 'ஸாரி டியர்... ஹெட் ஆபீஸ்லேயிருந்து எம். டி. வந்துட்டார்... அவரோட நான் வெளியே போகணும்'னு சொல்லி அழ வைச்சுடுவாரு!

வெங்கடேஷ்: அப்பவும் பாரு! அம்மாவுக்கு ஜாலியா நாலைஞ்சு நாள் வீட்டு வேலைகளிலிருந்து ரெஸ்ட் கொடுக்கத்தான் அப்பா அது மாதிரி செய்யறாரு! அப்பா ஈஸ் ஆல்வேஸ் க்ரேட்!

விஜய்: சும்மா பேசாதே, வருஷம் முழுதுமா ஒர்க் பண்ற அம்மாவுக்கு இப்படி நாலைஞ்சு நாள்னு ரெஸ்ட் கொடுத்துட்டு, டூர் போயிட்டு வந்தவுடனே மூட்டைத் துணியைத் தூக்கிப் போட்டுத் துவைச்சுப் போடுமேன்னு வைச்சுட்டு, சோ பா வி லே ஹாஹான்னு காலை நீட்டிடுவாரு. அம்மாதான் எப்போதுமே டாப்!

அபர்ணா: காலையிலே ஸ்கூலுக்கு லேட்டாயிடுச்சின்னா, அப்பாதான் ஸ்கூட்டர்லே, இல்லாட்டா சைக்கிள்லே கொண்டு போய் விடறார். அம்மா புஸ்ஃபுஸ்ஃன்னு திட்டிக்கிட்டே தலையைப் பின்னி விடறதும், முகத்திலே பவுடரைத் திட்டுத் திட்டா போட்டு அனுப்பறதும்... ஹ்ஃம்...

ஹேமா: நீ கேட்டா எழுந்திட்டிருப்பே! அம்மாதான் பூஜையறையிலே அழைச்சுட்டுப் போய் ஸ்லோகம், பாட்டு சொல்லித் தர்றாங்க...

விஜய்: அதுமட்டுமல்ல! ஹோம் ஒர்க் செய்யறதிலேயும் அம்மா விசேஷமாக் கவனிச்சு, திட்டாமல் சொல்லித் தருவாங்க.

வெங்கடேஷ்: ஹ்ஃம்... எப்பப் பார்த்தாலும் படிப்பு, படிப்பு... இந்த அம்மா புலம்பல் ஜாஸ்தி! அப்பா தான், போய் விளையாடுடா, கொஞ்ச நேரம்னு அனுப்புவார்!

ஹேமா: ஆமா... போய் விளையாடிட்டு வர்றபோது அடிபட்டுக்கிட்டு வருவே... அப்போ மருந்து போடறதுக்கு அப்பா அம்பேல்! அம்மாதான் ஓடிப் போய் பிளாஸ்திரி, அயோடெக்ஸ்ஃன்னு எடுத்து வருவாள். இல்லேன்னா, ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டு ஓடுவாள்!

விஜய்: டக்கரா அடிச்சுட்டே, ஹேமா!

ஹேமா: அதுமட்டுமில்லே. எனக்குப் பிடிச்ச உருளைக்கிழங்கு கறியை டிபன் பாக்ஸிலேயும் வைச்சுத் தருவா... ஏம்மா, உனக்கு இல்லையேன்னு கேட்டால், 'நீ சாப்பிட்டால் நான் சாப்பிட்ட மாதிரி'ன்னு அன்பா சொல்றபோது வயிறு நிறைஞ்சுடும், தெரியுமா? (கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.)



சார் தபால்!

வருக தேசபந்து வருக!

* எங்களை வழிநடத்திச் செல்ல வரும் தேசத் தொண்டரே! தேச-பந்து அவர்களே! உங்களை அகம் மகிழ, 'வருக! வருக!' என வரவேற்கிறோம்.

வந்தவாசி, சா. இரா. மணி.

* கவிஞர் இருந்திருந்தால், இந்தக் 'கண்ணீர் காணிக்கை,' 'என்னுடைய சின்ன வயதிலே,' கட்டுரை, இந்த 'தலையங்கம்'— இவை இடம் பெற்றிருக்க மாட்டா. மற்றப்படி இந்தக் கோகுலம் அமைப்பு, பொருள் சிறப்பு எல்லாவற்றிலும் தனித்தும், உயர்ந்தும், சிறந்தும் (வழக்கப்படியே) நிற்கிறது.

புதிய ஆசிரியர் தேச பந்துவின் பொறுப்பில் இன்னும் இன்னும் புதுமையும் இனிமையும் பெற்றுக் கோகுலம் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது அனைவருக்கும் பயன் தரும் என்று நம்புகிறோம்.

முத்துராமலிங்கபுரம், ரா. பொன்ராசன்.

* 'சாணக்கியர் சபதம்' வண்ணப்படக் கதையைப் படித்து முடித்தவுடன், ஏழெட்டு லட்டுகளை ஒன்றாகச் சாப்பிட்ட திருப்தி ஏற்பட்டது. தேங்க் யு சார்!

திருவண்ணாமலை — 1,
வெ. சங்கரநாராயணன்.

* வியர்க்குருவைத் தடுக்க வழிமுறைகள் சொன்ன டாக்டர் கு. கணேசனையும், அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷின் வாழ்க்கை வரலாற்றைத் தந்த ஜானகி மணாளனையும் பாராட்ட வார்த்தைகளைத் தேடிக் கொண்டு இருக்கிறேன்.

மாசிலாபாளையம், பி. கோகுலகிருஷ்ணன்.

* ஆழி வே. ராமசாமி அவர்களின் 'கை நிழலில் உருவங்கள்' நல்ல பொழுது போக்காக அமைந்தது.

அலங்கியம், ஜே. கமர் நீசா.

* குழந்தைக் கவிஞரின் 'என்னுடைய சின்ன வயதிலே' அருமையாக இருந்தது. அவரின் எட்டுக் கோழிக் குஞ்சுகள் பாடல் அருமையிலும் அருமை.

மூஞ்சூர்பட்டு, மு. பூபாலன்.

* எங்களை ஏன் வாட்டுகிறீர்? ஒரிழப்புத் தான் கடவுளாய்க் கொடுத்தது. 'கேளுங்கள் சொல்லுகிறோம்' பகுதியையும் நிறுத்தி எங்களைப் பெரிய இழப்புக்குள்ளாக்காதீர் என்று பணிவுடன் வேண்டுகிறேன்.

ஏம்பலம், சீ. இராஜகோபாலன்.

* 'எதற்கும் ஒரு நேரமுண்டு' படக்கதை ரியலி சூப்பர். மாதாமாதம் தொடர் சித்திரக் கதை போடுவதை எதிர்பார்க்கிறேன்.

அம்பல், எஸ். சித்ரா.

* கணித ஆசிரியரின் மகளான என்னை... ''எட்டு மேல் எட்டு வை'' — என்று நடக்கப் பழக்கினார். 'கோகுலம்' என்னைப் படிக்கப் பழக்கவிருப்பது ''எட்டுக்கு எட்டு'' சித்திரத் தொடர்கதை!

ஸ்ரீவில்லிபுத்தூர், வள்ளிமயில் மணியம்.

* தங்களின் தலையங்கம் எங்களுக்கு 'ஊட்டச் சத்தாக' அமைந்திருந்தது. புதிய ஆசிரியரை அன்புடன், ஆவலுடன் எதிர் பார்க்கும் நெஞ்சம்,

திருவண்ணாமலை,
வெ. சங்கரநாராயணன்.

ஹேமா: 'ஸ்கூல்லே பேரண்ட்ஸ் டே'ன்னு சொன்னால், அம்மா மட்டும்தான் வருவாள். அப்பா டபாய்ச்சுடுவாரு.

விஜய்: நம்ம ப்ராக்ரஸ் ரிப்போர்ட்லே... (சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொள்கிறான்.)

அபர்ணா: மாட்டிக்கிட்டே! ப்ராக்ரஸ் ரிப்போர்ட்லே அப்பாதானே கையெழுத்துப் போடறார்! அப்பா தான் உசத்தி.

ஹேமா (சட்டென்று): ரொம்ப சந்தோஷப்படாதே! அப்பா கையெழுத்துப் போட அம்மாதானே சிபாரிசு செய்ய வேண்டியிருக்கு! ஹ... ஹா...! எப்படி விஜய்?

(எல்லோருமே சிரிக்கிறார்கள்.)


தொகுப்பு: 'பிரகலாதன்'

படங்கள்: பிரபுசங்கர்.


அட்டை வண்ணப்படம்: ஸ்ரீஹரி.



எட்டுக்கு எட்டு
1
ஒகேனக்கல் ஆடிப்பெருக்கு விழா
கோலாகலமாக நடைபெற்றுக்
கொண்டிருந்தது. திரளான
மக்கள். சுவர்ண பூபதி தன்
மனைவி பத்மாவதி,
பிள்ளைகள்
காமேஷ், ரஜனியுடன்
வந்திருந்தார்—
கதை: தேசபந்து
படம்:



இரவு. பயணிகள் விடுதியில் சசிவர்ணம் குடும்பத்தினர்.
போதுமே உங்க ஜமீன் பாரம்பரைப் பிரதாபம்
ஹும் ஜனங்கள் யார் எவர்னு எங்கே மதிக்கிறாங்க? இதுவே எங்க தாத்தா காலமா இருந்தா...
இந்த அம்மா அறுவை போர். நீங்க சொல்லுங்கப்பா தாத்தாவைப் பற்றி.
ஜமீன்தார் தாத்தா ஜகவீர பாண்டியனின் பெருமையைக் கேட்கக் கேட்க குழந்தைகளுக்குப் புல்லரித்தது -
அப்படி ஒரு கிராமம் இந்தப் பக்கத்தில் சொந்தமாயிருந்தது.. வேட்டை நாயெல்லாம் இருந்தது...
சரி சரி அப்பாவும் பிள்ளைகளும் கதை பேச ஆரம்பிச்சிட்டா விடியறதுகூடத் தெரியாது. மணி பத்தாச்சு. படுங்க.


சின்ன ராஜுக்கு உடம்பு எப்படி இருக்கோ... அவனை விட்டுட்டு வந்ததிலேலே, எப்போ போய்ப் பார்ப்போம்னு மனசு அடிச்சுக்குது...
எனக்கு மாத்திரம் கட்டில் இல்லையே..
அண்ணா பக்கத்திலே படுத்துக்கோ. சமர்த்தில்லே..
நள்ளிரவு. திடீரென்று ஓர் ஆந்தையின் அலறல்—
ஐயோ, அம்மா! பயமா இருக்கு நான் அங்கே வந்துடறேன்.
இன்னும் கொஞ்ச நேரத்திலே விடிஞ்சிடும் புறப்படலாம். பயப்படாமெ தூங்கு..


ஐந்து மணிக்கு அலாரம் அடித்தது—
என்னாங்க.. உங்களைத்தானே.. எழுந்திருங்க
ஹூம்.. முதல்லே குழந்தைகளை எழுப்பு.. நீங்க ரெடியாகிறதுக் குள்ளே... கொஞ்சம் விடேன்...
என்னாங்க... ஐயோ.. பிள்ளை களைக் காணோமே.. ரஜனி, காமேஷ்!
தொடரும்.

குருவி, பறு பறு!

வானத்திலே பறக்கும் பட்சிகளை எண்ணிச் சொல்லுங்கள் என்றால் சாத்தியமில்லைதான். அவற்றை அப்படியே கூட்டமாய் உறைய வைத்து இங்கே படம் பண்ணியிருக்கிறது. பத்து நிமிட அவகாசம். எங்கே, சரியாய் எண்ணிச் சொல்ல முடியுமா, உங்களால்? முடிந்தால், எந்த வயதிலும் உங்களுக்குக் கண்ணாடி போட வேண்டிய அவசியமிருக்காது. இப்போதே போட்டிருப்பவர்கள், பவர் மாற்ற வேண்டியிருக்காது!




(சரிபார்க்க: 16 — ஆம் பக்கம்.)

சப்த கன்னி

அதிகமாகப் பேசுகிறவர்கள் பெண்கள்தாம் என்பார்கள். அதிலும் 'மார்க்கடா' என்னும் ஜப்பானியப் பெண்தான் உலகிலேயே அதிகமாக உரக்கச் சப்தம் எழுப்புகிற பெண் என்று தேர்ந்தெடுத்து, அவளுக்குப் பரிசும் கொடுத்திருக்கிறார்கள். ஜப்பானிய டோக்கியோவில் இந்த விசித்திரப் போட்டி நடந்தது!





எக்ஸ்—ரே கண்!

'ஜென் சைங் கங்' என்னும் சீன லேடி டாக்டருக்கு எக்ஸ்—ரே கண்! எதிரே ஒரு மனிதனைப் பார்க்கும் போது, அவனது உடலின் எலும்புக்கூடு, இதயம், நுரையீரல்கள் முதலியவை எக்ஸ்—ரே எடுத்துப் பார்ப்பது போல இவரது சாதாரணக் கண்களுக்குத் தெரிகிறதாம்! ஆனால், 5 அல்லது 6 வயது முதலே இந்த எக்ஸ்—ரே சக்தி பெற்ற இந்த லேடி டாக்டருக்கு இப்போது வயது 24. இந்த விசித்திரச் சக்தியைப் பயன்படுத்தி நோயாளியின் உடல்நிலையை எக்ஸ்—ரே கருவி இல்லாமலேயே கவனித்து விடுகிறார் டாக்டர் ஜென்சைங் கங்!

விநோதப் பொழுதுபோக்கு!

தெற்கு வேல்ஸில் அம்மான் பள்ளத்தாக்கில், ஜோனா மோரிஸ் என்பவர் விநோதமான ஒரு பொழுதுபோக்கு வைத்துக் கொண்டிருக்கிறார். அழைப்பு இருக்கிறதோ, இல்லையோ; மரண ஊர்வலத்தில் கலந்து கொள்ளுவதுதான் அவரது பொழுதுபோக்கு. இதுவரை சுமார் 3,500 மரண ஊர்வலங்களில் கலந்து கொண்டிருக்கிறார் அவர். ஒரு நாளைக்கு 6 மரண ஊர்வலங்களில் கூடக் கலந்து கொண்டிருந்திருக்கிறார். ''களைப்பாகவும் சிரமமாகவும் இருந்தாலும், மனதுக்குத் திருப்தியாக இருக்கிறது.'' என்கிறார் அவர்.



செய்திகள்!



ஒரு மனிதரும் 500 பாம்புகளும்!

புதுடில்லி, கோழிக்கோடு, கல்கத்தா ஆகிய நகரங்களில் 500 பாம்புகளுடன் தங்கி, கண்காட்சி நடத்துகிறார் 42 வயது பேராசிரியர் வேலாயுதம். பல பாம்புகளைக் கழுத்திலும் உடலிலும் மாலை போல் சுற்றிக் கொண்டு காட்சி தருகிறார். அத்தனையும் விஷப் பாம்புகள்! பாம்பு கடிக்கும்போது பெரும்பாலும் அந்த அதிர்ச்சியிலேயே இரத்தம் விரைவாக இதயத்துக்குப் போய் மக்கள் இறக்கிறார்கள் என்பது இந்தப் பேராசிரியர் வேலாயுதத்தின் கணிப்பு.

ஸ்கூட்டருக்குப் பதில் கழுதை!

பீகார் மாநிலத்தில், தார்பாத் என்ற ஊரில், புதிதாக மணமான ஒரு பையனுக்கு வரதட்சிணைச் சீராக ஒரு ஸ்கூட்டர் கொடுக்க வேண்டும் என்று மாப்பிள்ளை வீட்டார் வற்புறுத்தினார்கள். என்ன சொல்லியும் கேட்கவில்லை. பெண் வீட்டுக்காரர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? மணமகன், அவனுடைய தகப்பனார், தாய், சகோதரன் ஆகிய நால்வருக்கும் மொட்டை அடித்து, அவர்களைக் கழுதை மேல் ஏற்றி ஊர்வலம் விட்டார்களே பார்க்க வேண்டும்!





நான்கு சிறு நீரகங்கள்!

எல்லோருக்கும் இரண்டு சிறு நீரகங்கள்தானே இருக்கும்! ஆனால் மத்திய துருக்கியில், மெஹ்மெட் ஒஸாரியன் என்னும் 25 வயது இளைஞனுக்குச் சமீபத்தில்தான் தெரிந்தது, தனக்கு 4 சிறுநீரகங்கள் இருக்கிற விஷயம்! மருத்துவமனையில் வேறு ஏதோ சிகிச்சை பெறச் சென்றிருந்த போது கண்டுபிடித்துச் சொன்னார்களாம்!

— ஆழி.

வலியார்

சிற்பி சோமு

சுவரில் அடித்த ஆணியைப் போல நெஞ்சில் வந்து விழுந்து, காயப்படுத்திய செய்திகளைக் கேட்டுப் பதறிப் போய்ச் சுவரோடு சுவராகக் கலங்கிய கண்களுடன் நின்றாள் மீனாட்சி.

தன் மகன் வடிவேலுவின் குறும்புத்தனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, நேற்று விசுவரூபமெடுத்து விட்டது.

பலூனில் அதிகக் காற்று புகுந்தால் என்ன ஆகும்? 'பட்'டென்று உடைந்து விடும்! அதைப் போலாகி விட்டது. வடிவேலுவைப் பள்ளியிலிருந்தே விலக்கி விடும் அளவுக்குப் போய் விட்டது — அவனது பொல்லாத குறும்புத்தனங்கள்!

பெற்ற மனம் துடிதுடித்தது.

தலைமையாசிரியர் தங்கையா சற்று முன் கூறிச் சென்ற வார்த்தைகள் அவளை அந்த நிலைக்கு உள்ளாக்கியிருந்தது.

"இதோ பாரு மீனாட்சி, இனியும் நாங்க பொறுமையாக இருக்கப் போற தில்லை. வடிவேலுவைப் பள்ளியிலிருந்து நீக்கி விடுவது என்று தீர்மானித்து விட்டோம். ஒவ்வொரு நாளும் அவன் செய்யும் குறும்புகள், கொடூரமான செயல்கள் எங்கள் பள்ளியின் நல்லபெயரைப் போக்கிவிடும்போலிருக்கிறது. சக மாணவர்களிடம் அவன் நடந்து கொள்ளும் முறை, கொஞ்சமும் நல்லாவேயில்லை.

"உன் நிலையறிந்து நாங்களும் முடிந்தவரை பொறுமையாயிருந்தோம். தினசரி அவன்மேல் ஏதாவது ஒரு புகார், குற்றச்சாட்டு வந்து கொண்டேயிருக்கிறது.

"பாடங்களைச் சரிவர நடத்தவே எங்களுக்கு நேரம் போதவில்லை. அதில் இப்படிப்பட்ட தொல்லைகள் வேறு. இதை இப்படியே வளரவிட்டால்... எங்கே போய் முடியுமோ என்ற அச்சத்தில்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.

"ரெண்டு நாளைக்கு முன் சக மாணவன் ஒருவனின் மண்டையை உடைத்துவிட்டான். அதற்காக வடிவேலுவை அழைத்துக் கண்டித்தேன். 'இதுவே கடைசித் தடவை. இனி ஒரு முறை இப்படிச் செய்தால் வீட்டுக்கு அனுப்பிவிடுவேன்,' என்று எச்சரித்தான். இதுக்காக அவன் என்ன செய்து இருக்கிறான் தெரியுமா? சொல்லவே நா.... கூசுதும்மா... என்னையும் சக டீச்சர் ஒருவரையும் இணைத்து..... அதற்குமேலே நான் சொல்லவிரும்பலே....

"ஓர் ஏழைப் பையனின் படிப்பு வீணாகி விடுமே என்றுதான் இது நாள் வரை பொறுமையாகக் கண்டும் காணாதது போல மன்னித்து வந்தேன். ஆனால் அவன்.... என்மீதே கூறிய பழிச் சொல்.... சிறுபிள்ளைத் தனமாக இல்லை. அதனால்தான் தாங்கிக் கொள்ள முடிய வில்லை," மூச்சு விடாமல் ஆவேசத்துடன் மொழிந்து வீசிய வார்த்தை அம்புகள் அவளது செவிப்பறையையும் நெஞ்சையும் புண்ணாக்கியிருந்தன.

என்ன செய்வாள் மீனாட்சி,...?

வடிவேலு கைக்குழந்தையாக இருந்தபோதே கணவனை இழந்தாள். அந்தத் துயரத்திலிருந்து மீண்டு தன்னம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்த ஏழ்மையை விரட்டிவிட அவள் வீடுவீடாக ஏறி இறங்கினாள். அவள் கஷ்டங்களுக்கு அளவேயில்லை. அதையெல்லாம் ஒரு பொருட்டாகவே எண்ணாமல் தன் மகனை வளர்த்து பெரிய நிலைக்கு கொண்டு வர அரும்பாடுபட்டாள்.

தான் எவ்வளவு துன்பப்பட்டாலும் மகனுக்கு அது தெரியக் கூடாது என்பதற்காக வடிவேலுவைக் கொஞ்சம் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டாள். வறுமையின் நிறம் அவன் கண்ணில் படாமல் பசுமையை ஊட்டி

...முன் தன்னை நினைக்க...

விட்டிருந்ததால் அது அவனிடம் பெரிய மனிதர்கள் வீட்டுப் பிள்ளையைப் போல முரட்டுச் சுபாவங்களை உண்டு பண்ணி விட்டது. அதன் விளைவு?

நெடுந்தூரப் பிரயாணத்துக்குத் தயாரான வண்டி பாதியிலேயே குடை சாய்ந்து கிடக்கிறது!

வடிவேலுவைப் பள்ளிக் கூடத்திலிருந்து நிறுத்தி ஒரு மாதமாகி விட்டது. அதைப்பற்றி அவன் கொஞ்சமும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. புத்தகங்களை மூலையில் தூக்கிப் போட்டு விட்டு விளையாட்டே கதி என்று போய்விட்டான்.

ஒருநாள் —

காலை வேளையில் பெருமாள் கோவிலில் பூஜையை முடித்துக் கொண்டு திரும்புகையில் வழியில் மீனாட்சியைப் பார்த்தார் தங்கையா.

''என்னமீனாட்சி,வடிவேலுபோக்கில் ஏதேனும் மாற்றம் தெரியுதா?'' என்றார்.

''எவ்வளவோ மாறிப் போயிட்டான் அய்யா! வெளியே எந்த வம்பு தும்புக்கும் போறதில்லை. வீட்டிலேயும் அப்படியே. இப்படி மாறிப்



போவான்னு நான் கொஞ்சமும் நினைக்கலேங்க.''

''அய்யா....அவனெ.....'' மீனாட்சி கைகளைக் குவித்து வணங்கிய வண்ணம் ஏக்கம் கலந்த பார்வையில் தலைமை ஆசிரியரை நோக்கினாள்.

''மீனாட்சி, உன் தாயுள்ளம் நான் அறிந்ததே. பள்ளிக்கூட நிர்வாகியைக் கலந்து, தகவல் சொல்லி அனுப்பு கிறேன். எப்படியும் வடிவேலுவை மீண்டும் படிக்க ஏற்பாடு செய்றேன்,'' என்று கூறி விடை பெற்றார் தங் கையா.

சொல்லிச் சென்றபடி வடி வேலுவைப் பள்ளியில் சேர்த்து விட் டார் — தலைமை ஆசிரியர் தங்கையா.

இப்போது —

மீண்டும் வடிவேலு பள்ளிக்குப் போகிறான்.

பழைய ஆர்ப்பாட்டம், அடா வடித்தனம், குறும்புகள் ஒன்றுகூட இப்போது அவனிடம் இல்லை.

வடிவேலு எப்படி மாறினான்....?

அந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந் தார் தலைமையாசிரியர்:

ஒரு நாள் —

வழக்கம் போல, மணிக் கூண்டு பூங்கா வழியாக வாக்கிங் சென்று திரும்புகையில் அங்குள்ள பிள்ளை யார் கோயில் மரத்தடியில் ஐந்தாறு சிறுவர்கள் கோலி விளையாடிக் கொண்டிருந்தனர். அதில் ஒருவனாக வடிவேலுவும் இருந்தான். இருந்தான். இதைக் கண்டும் காணாதவர் போல தங்கையா, பூங்காவில் ஓர் இடத்தில் அமர்ந்து கையில் இருந்த நாவலில் மூழ்கினார்.

சற்று நேரத்தில் அவர்களுக்குள் ஏதோ தகராறு வர, ஐந்தாறு சிறு வர்களும் ஒன்று திரண்டு வடி வேலுவைக் கீழே தள்ளி நையப் புடைத்தனர். சத்தம் கேட்டுத் தங்கை யா பதறியவராக அவ்விடம் போவ, தற்குள், அந்தச் சிறுவர்கள் ஓடி விட் டனர். கோவிலில் அமர்ந்திருந்த சாமியார் ஒருவர் ஓடிச் சென்று வடி வேலுவைத் தூக்கினார். தூக்கிநிறுத் திக் கை கால்களை நீவிவிட்ட அந்தச் சாமியார் கூறினார். 'தம்பி! உன்னைப் பார்த்தால் நல்லவனைப் போல தெரி கிறது. நீயேன் இந்தப் போக்கிரிப் பசங்களோடு விளையாட வந்தே...? நான் மட்டும் வரவில்லையானால் அந்தத் துஷ்டர்கள் மேலும் உன்னை அடித்து ரணப்படுத்தியிருப்பார் களே.....'' என்றார்

வடிவேலு மௌனமாகக் கண் ணைக் கசக்கினான்.

மேலும், ''தம்பி, உன்கூடப் படிக் கும் மாணவர்களோடு விளையாடா மல் இங்கு ஏன் வந்தே? அவர்களா னால் இப்படி உன்னை அடிப்பார் களா? இனி இந்தமாதிரிப் பசங்க ளோடு சேர்ந்து விளையாட எங்கும் போகாதே,'' என்று கூறிச் சென்றார் சாமியார்.

மற்றவர்களிடம் தான் அடிபட்ட துன்பம் என்னவென்று உணர்ந்த தால், தன்னிடம் மற்ற மாணவர்கள் அடிபட்ட போது இப்படித்தானே துடிதுடித்திருப்பார்கள் என்பதை வடி வேலு உணர்ந்ததால் அவன் திருந்தி விட்டான் என்று நினைத்தார் தங்கையா.


அவருக்கு வள்ளுவரின் குறள் நினைவுக்கு வந்தது. 'வலியார் முன் தன்னை நினைக்க, தான் தன்னின் மெலியார் மேல் செல்லுமிடத்து.' — 'அட பையா, உன்னை விட இளைத் தவனிடம் நீ உன் பலத்தைக் காட்டு கிற போது, உன்னைவிட பலவா னிடம் நீ மாட்டிக் கொண்ட சந்தர்ப் பத்தை நினைத்துப்பார். அந்தவேளை யில் என்ன பாடுபட்டாயோ, அதை ஞாபகப்படுத்திக் கொள்!' — இப் படித்தான் சொல்கிறார் வள்ளுவர்!

தெரிந்தோ தெரியாமலோ இந்த அறிவுரை மனசிலே உறுத்தியிருக் கிறது. அதுதான் வடிவேலு மாறி விட்டான் என்று தலைமையாசிரிய ருக்குத் தோன்றியது.


11ம் பக்கப் புதிர் விடை:




ஆழி——



1 நீர்மூழ்கிக் கப்பலின் நீளம் அதிகமா? அல்லது அதன் மேல் உள்ள 'பெரிஸ்கோப்' கண்ணாடியின் உயரம் அதிகமா?



2 இது எந்தப் பிராணியின் மண்டை ஓடு?



3 இது எந்தநாட்டின் தேசியக்கொடி?



4 இது எந்த நாட்டு நாணயம்?

அ. ஜப்பான்,
ஆ. சிங்கப்பூர்
இ. பர்மா. [எது சரி?]




5 இது எந்த நாட்டு நடனம்?


அ. நேபாளம், ஆ. திபேத், இ. அரேபியா.

விடை: 81'ம் பக்கம்

சொன்னபடி நடந்தால்...

கருத்து: எஸ்.டி.அரசு
படம்: செல்லம்





என்னா வெய்யில் தெரியுமா? உடம்பெல்லாம்...
டிரைவர், சீக்கிரம் காரை....
அலங்கார் தானே? அதோ எல்ஐசியைத்...

சீறிப்பாயும் சீசர்!

"சித்தப்பா, இன்றைக்கும் அந்தப் புலி ஒரு குழந்தையைக் கௌவி இழுத்துக் கொண்டு போய் விட்டதாம்' இன்றைக்குப் புலி வேட்டைக்கு நீங்க கிளம்பித்தான் ஆகணும். இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது,'' என்று பதட்டத்தோடு கூறினான் சங்கர்.

சங்கரின் சித்தப்பா, ஒரு தலை சிறந்த வேட்டைக்காரர். அவர்




வேணு சீனுவாசன்

கோரப் பிடியில் சிறுத்தை!

சொன்னார், "பத்து நாட்களுக்கு முன்னே ஊருக்குள் நுழைந்த சிறுத்தைப் புலி ஒன்று இதுவரை மூன்று மனிதர்களையும், இருபதுக்கும் மேற்பட்ட ஆடு, மாடுகளையும் அடித்துக் கொன்று விட்டது. இன்று குழந்தையைத் தூக்கிச் சென்று இருப்பதால் நம் ஊரை அடுத்த காட்டுக்குள்ளே தான் அது பதுங்கி இருக்கணும். அதை வேட்டையாட வேண்டிய நேரம் வந்தாச்சு. இத்தனை நாளாக அது இருக்கும் இடம் தெரியாமல் விட்டு வைத்தேன்," என்று வேட்டையுடுப்பும் துப்பாக்கியுமாய்க் கிளம்பினார்.

சங்கரும் அவருடன் புறப்பட்டான். சிறுத்தை வேட்டையில் சிறுவன் சங்





கருக்கு இருந்த ஆர்வத்தைப் பார்த்து அவனைப் பாராட்டினார் சித்தப்பா. சங்கருக்கு முன்னால் அவனது நாய் சீசர் குதித்துக் கொண்டு நின்றது. வேட்டைக்கென்றே அசு__பழக்கப் பட்டு இருந்தது:

ஜீப்பில் அவர்கள் சென்று கொண்டு இருந்தனர். காட்டின் உட்பகுதிகளை நன்றாக அறிந்த மலைவாசி ஒருவனை, சித்தப்பா துணைக்கு அழைத்து வந்திருந்தார். அவன் பெயர் காடன்.

சித்தப்பாவிடம் சங்கர், ''காட்டு மிருகங்கள் மான், ஆடு இவற்றை விட்டு விட்டு ஏன் மனிதனைக் கொல்லுகின்றன?'' என்று கேட்டான்.

''ஒரு புலியோ, அல்லது சிங்கமோ வேகமாக ஓடிப் பாய்ந்து தன் இரையைத் துரத்திப் பிடிக்க முடியாமல் போகும் நிலையில்தான் மனிதனைத் தாக்குகின்றன,'' என்றார் சித்தப்பா.

''ஏன் அந்த நிலைக்கு வருகின்றன?''


''ஒரு புலிக்குக் காலில் முள் குத்தி, காயம் ஏற்பட்டுப் புண்ணாகி நடக்க முடியாமல் போய் விடக் கூடும். மற்ற மிருகங்களுடன் சண்டை போடும் போது கண்களோ பற்களோ பழுது பட்டு அதனால் வேட்டையாடவும் முடியாமல், கடினமான தோலை உடைய விலங்குகளைக் கிழித்துத் தின்னவும் முடியாமல் போகலாம்.''

''ஆச்சரியமா இருக்கு சித்தப்பா!''

''உண்மைதான். இப்படி உடல் உறுப்புக்கள் பழுதுபட்ட நிலையில் தான் தனக்கு எளிதாக இரை கிடைக்காமல், சிறுத்தைப் புலி ஊருக்குள் நுழைந்திருக்கிறது. எதிர்ப்பட்ட ஆட்களை அடித்து, ருசிக்கப் போய் மனித ரத்தச் சுவை மிகவும் பிடித்து விட்டதால் 'ஆட் கொல்லி' யாக மாறி விட்டது,'' என்றார் சித்தப்பா.

காட்டின் ஆரம்பத்தில் ஜீப்பை நிறுத்தி விட்டனர்.

மூன்று பேரும் காட்டின் உள்ளே நடக்க ஆரம்பித்தனர். மரங்கள் அடர்ந்து நெருக்கமாக வளர்ந்திருந்தன. காட்டுப் பூக்களின் கலவையான மணம் மூக்கைத் துளைத்தது. வண்டுகளின் ரீங்காரம் பயத்தை



உண்டாக்கியது. மரக் கிளையில் இருந்த குரங்குகள் இவர்களைப் பார்த்துக் கிறீச்சிட்டுக் கத்திக் கொண்டே பயத்தோடு தாவி ஓடி மறைந்தன.

உள்ளே போகப் போக, பாதை குண்டும் குழியுமாக இருந்தது. நீரோடைகள் காணப்பட்டன. எப்போதோ இடி விழுந்ததனால் பாதி கருகிப் போன மரங்கள் கன்னங்கரேல் என்று கரடிகளைப் போல் நின்றன.


மலைவாசி காடன் மருட்சியுடன் எச்சரித்தான்: ''இனிமேல் யாரும் அதிகம் பேச வேண்டாம். சத்தம் போடாமல் நடந்து வாருங்கள். சிறுத்தை இங்குதான் இருக்க வேண்டும்.''

''எப்படி அறிந்து கொண்டாய்?'' என்றான் சங்கர்.

''வழியில் அங்கும் இங்கும் மிருகங்களின் எலும்புக் கூடுகள் உள்ளன. துர்நாற்றம் வீசுகிறது. ஆடு, மாடுகளின் அழுகிய உடல்கள் காணப் படுகின்றன. அதனால்தான் சொன்னேன்,'' என்றான் காடன்.

முன்னால் ஓடிக் கொண்டு இருந்த சீசர் காதுகளை உயர்த்திக் கொண்டு நின்றது. தரையில் குனிந்து மோப்பம் பிடித்துக் கொண்டது. பின்னர் அவர்கள் மூன்று பேரையும் சுற்றிச் சுற்றி வந்தது.

''காடன் சொன்னது உண்மை. சிறுத்தை நமக்கு மிக அருகிலேயே



தான் இருக்கிறது. சீசர் அதனால் தான் நம்மை இங்கேயே நிற்கச் சொல்கிறது. சித்தப்பா, துப்பாக்கியைத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்,'' என்றான் சங்கர் மெதுவான குரலில்.

அவர்களுக்கு இருபது அடி தூரத்தில் மெதுவாக நகர்ந்து சென்று கொண்டிருந்த சீசர், திடீரென்று மேலே நகராமல் உட்கார்ந்து விட்டது. அதன் பார்வை நிலையாக ஒரே இடத்தில் பதிந்து இருந்தது.

சித்தப்பா ரகசியக் குரலில் சொன்னார், ''புலிக்கு நேர் எதிரே நாம் நின்று கொண்டு இருக்கிறோம். புலி நம் கண்ணுக்குத் தெரியாதபடி எதிரே இருக்கும் புதர் மறைத்துக் கொண்டு இருக்கிறது. சீசரின் கண்ணுக்குப் புலி தென்பட்டிருக்கிறது. அதனால்தான் அது இப்படி உட்கார்ந்து விட்டது.''

இரண்டடி பக்கவாட்டில் நடந்த போது அவர்கள் புலியைக் கண்டனர். பயமும், ஆர்வமும் இதயத்தை உறைய வைக்கச் சங்கர் பார்த்த போது, பெரிதாக வளர்ந்திருந்த ஆண் சிறுத்தையின் முதுகுப் புறம் தெரிந்தது. கறுப்பான நிறத்தில் சூரிய ஒளி பட்டுப் பளபளப்போடு மின்னியது அதன் உடல். 'ஐயோ, இந்தப் பயங்கரமான சிறுத்தை நம்மைப் பார்த்துத் திரும்பினால்...' நினைத்த போதே அவன் உடல் நடுங்கியது.

சித்தப்பா, வானத்தை நோக்கித் திடீரென்று சுட்டார். வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல சீசர் குபீரென்று பாய்ந்தது. அதே நேரத்தில் குண்டு சத்தம் கேட்டுச் சிறுத்தை அவர்களை நோக்கித் திரும்பியது. அவ்வளவுதான், பாய்ந்து சென்ற சீசர், சிறுத்தையின் தொண்டையைக் கவ்விப் பிடித்து விட்டது. கண் இமைக்கும் நேரத்தில் நடந்து விட்ட தாக்குதலால் சிறுத்தை நிலைகுலைந்தது. சீசரின் பிடி தொண்டைக் குழியில் பலமாக அழுத்தியதால் மூச்சு விடத் திணறிப் போராடியது. அந்த நேரத்தில் சித்தப்பாவின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட குண்டு சிறுத்தையின் தலையில் நுழைந்தது. புலி இறந்து வீழ்ந்தது. புலி இறந்ததை அறிந்து கொண்ட பின்பே சீசர் தன் பிடியை விட்டது.

இவ்வளவும் ஐந்து நிமிடத்துக்குள் முடிந்து விட்டது. எத்தனையோ உயிர்களைப் பலி கொண்ட சிறுத்தையின் வாழ்வு முடிந்து விட்டது! சங்கர் புலியின் அருகே சென்று ஆராய்ந்தான். அதன் வலது முன்னங்காலில் சீழ் கோத்து வீங்கி இருந்தது. நீண்ட கம்பியைப் போன்ற முள் குறுக்காகக் குத்திக் கொண்டு இருந்தது.

சித்தப்பா சொன்னார்: ''முள்ளம் பன்றியோடு இந்தச் சிறுத்தை சண்டை போட்டிருக்கிறது. அப்போது, ஒரு முள் இதன் காலில் ஏறியிருக்கிறது பாவம். புலியால் அதை வெளியே எடுக்க முடியவில்லை. முள் உடைந்து உள்ளே போய் விட்டது. இதனால் ஏற்பட்ட ரணத்தால், சீழ் கட்டி, அழுகி வலது கால் வலிமை இழந்திருக்கிறது. அதனால் தான் சிறுத்தை ஆட்கொல்லியாக மாறி விட்டது.''

காட்டு மிருகங்களைப் பற்றிய சித்தப்பாவின் அனுபவ அறிவு சங்கரை வியப்பில் ஆழ்த்தியது.

தன் உயிரைப் பற்றிக் கவலைப் படாமல் ஈடுபட்டு, சிறுத்தையை வேட்டையாடி வெற்றி பெறக் காரணமான சீசரை அன்போடு தடவிக் கொடுத்தபடியே மூவரும் ஊரை நோக்கி நடந்தனர். ✻

பிருந்தாவனக்




அன்னை கங்கை யமுனையுடன்
அன்பாய் சரஸ்வதி ஒன்றாகும்!
இன்னலைத் தீர்த்த தனித் தலைவன்
இங்கே நேரு பிறந்தாராம்!

நாட்டின் நலத்தைக் காத்தவராம்
நன்மை எங்கும் சேர்த்தவராம்
விட்டை நாட்டுக் கீந்தவராம்
"ரம் நமக்கே தந்தவராம்!

லகா பாத்தெனச் சொன்னாலே
அமரர் நேரு நினைவு வரும்!
லமாய்ச் சிறுவரின் நெஞ்சினிலே
நாளும் ஜவகர் வாழ்கின்றார்

— டி. ஆர். செல்வகுமார் (10,244).



சிக்கனமாக இரு ஆனால்
கருமியாக இருக்காதே!
சுறுசுறுப்பாக இரு; ஆனால்
படபடப்பாக இருக்காதே!
அன்பாக இரு; ஆனால்
அடிமையாக இருக்காதே!
ஆனந்தமாயிரு; ஆனால்
உல்லாசமாக இருக்காதே!

— பா. க. நித்யகல்யாணி (4260), கடையம்.

ரோஜா மலரே ராஜா



ரோஜா அழகோ கொள்ளை — அதன்
அடியில் பாரு முள்ளை.
அழகைப் பார்க்க நில்லு — அது
வளரும் இடமோ கல்லு;
அழகை வியந்து சொல்லு — அதன்
அழகை ரசிக்கச் சொல்லு.
அருகில் சென்று கிள்ளு — அதை
தலையில் சூடிக் கொள்ளு.

— ந. பழனிவேல், ஒன்பதாம் நிலை, ஏம்பல்.

கவிதைகள்





ஊட்டிப் பயணம் சென்றோமே
உல்லாசப் பயணம் சென்றோமே?

கோடையில் ஊட்டிக்குச் சென்றாலே
கொளுத்தும் வெய்யில் தெரியாதே!

பாத்திப் பாத்தியாய்த் தேயிலையும்
பச்சைப் பசேலென்(று) இருக்குதே!


மேகக் கூட்டம் பலவாறாய்
மெதுவாக உரசிச் செல்லுமே?

பூக்கள் பலவும் பூரித்தே
புன்னகை சிந்திச் சிரிக்குதே?

சீழ்க்கை அடிக்கும் காற்றினிலே
சில்லென்ற உணர்வும் வந்திடுமே?

ஏரியின் மேலே ஓடமே
எக்காள மிட்டே ஓடுமே!

— பா. சீதா (15,214), வலிவல



கோடைகாலம்



கோடை காலம் வந்தாச்சு
குதூ கலமும் வந்தாச்சு

ஆடிப் பாடி விளையாட
ஆனந்த வேளை வந்தாச்சு


கனிகள் எல்லாம் கனிஞ்சாச்சு
கவிதை பாட முனைஞ்சாச்சு


குட்டி குட்டி பொம்மைகளைக்
குழந்தை வைத்தே விளையாடும்

நேரங் காலம் தெரியாமல்
நேர்த்தியோடு விளையாடும்.

— கி. கலைச் செல்வி (11,391),
தேவணாம் பாளையம்.

புத்தாண்டு





சித்திரைத் திங்கள் சிர்முதல் நாளில்
சிறப்புடன் பிறந்தது புத்தாண்டு வாழ்க!
நித்திரை நீங்கி நிமிர்ந்தது போல
நிலங்கள் யாவும் செழித்திட வேண்டும்!

உத்திர வேதம் திருக்குறள் போல
உயரிய நூல்கள் தோன்றிட வேண்டும்.
முத்திரை பொறிக்க வந்திட வேண்டும்
மோகன மான சுக்கில ஆண்டு!

புதுமை எங்கும் பிறக்க வேண்டும்!
புலமை நலன்கள் சிறக்க வேண்டும்!
பதுமை போல வாழ்வோ ரெல்லாம்
பணிவாய் உழைத்து உயர வேண்டும்!
முதுமை வாய்ந்த விபவ ஆண்டு
முற்றுப் பெறும் இந்த நாளில்,
சுயமை, பகைமை, துரோதம், சூதை
கட்டியே இழுத்துச் செல்லல் வேண்டும்!

உயரிய இந்தப் புதிய ஆண்டில்
உண்மைகள் எங்கும் உயர வேண்டும்!
அரிய, பெரிய செயல்கள் எல்லாம்
அறிவால் நடந்து முடிய வேண்டும்!
உரிய செயல்களை ஒவ்வொரு பேரும்
ஒன்றாய்ச் செய்தே முடித்திட வேண்டும்!
அறிய வேண்டும் அனைவருமேநம்
அன்னை நாடே சிறந்தது என்று!

— சு. மனோகர் (15,959), திருநெல்வேலி.

இனிய மழை இன்பமே





கருப்பு வண்ண மேகங்கள்
கலந்து சேரப் போகுது:
நெருப்புப் போன்ற மின்னலும்
நெளிந்து வானைப் பிளக்குது.

இரண்டு முகில்கள் இணைந்ததால்,
இடியும் காதைத் துளைக்குது:
வெருண்டு மறைந்த கதிரவன்
வெளியே வரவே மறுக்குது.

கான மயில்கள் ஆடின:
காட்டு மலர்கள் பூத்தன:
வானம் குளிர்ந்து நீரினை
வாரிப் புவியில் தெளித்தது.

மனிதர் பலரும் மகிழ்ந்திட,
மலர்கள் மலர்ந்து சிரித்திட
இனிதே மழையும் பொழிந்தது!
இன்பம் நிறையப் பெருகுது!

— கோவி. மகுடேசுவரன் (21,549),
திருப்பூர் — 5.

புதையலுக்குள் ஒரு புதையல்

தணிகை உலகநாதன்

முன் காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்துத் தச்சநல்லூரில் அழகிய சொக்கநாதப் பிள்ளை என்று ஒரு புலவர் இருந்தார். பெயருக்கேற்ப அவர் அழகிய பாடல்களைப் பாடிக் கேட்பவரைச் சொக்க வைக்கும் ஆற்றல் உடையவர். அவரை ஆதரித்தவர் முத்துசாமிப்பிள்ளை என்னும் வள்ளல். சொக்கநாதப்பிள்ளை வேடிக்கையாகப் பாடுவதிலும் வல்லவர்.

ஒருநாள் புலவர் வள்ளலைப் பார்த்து, "நான் ஒரு விடுகதை சொல்கிறேன். நீர் விளக்கம் தர முடியுமா?" என்று கேட்டார்.

"சொல்லுங்கள், பார்ப்போம்," என்று வள்ளல் பதில் கூறினார்.

புலவர் தம் விடுகதையை ஒரு பாட்டாகப் பாடினார்.

முற்பாதி போய்விட்டால் இருட்டே ஆகும்;
முன் எழுத்தில் லாவிட்டால் பெண்ணே ஆகும்;
பிற்பாதி போய்விட்டால் ஏவல் சொல்லாம்;
பிற்பாதி யுடன் முன்எழுத்(து) இருந்தால் மேகம்;
சொற்பாகக் கடைதலைசின் மிருகத் தீனி;
தொடர் இரண்டாம் எழுத்துமாதத்தில் ஒன்றாம்;
பொற்பார்தின் புறமுத்துச் சாமி மன்னா
புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே.



பாட்டைக் கேட்ட முத்துசாமி வள்ளல் விடைகூற முடியாமல் தயங்கினார். அதுகண்ட புலவர் தாமே அந்த விடுகதைக்கு விளக்கம் கூறத் தொடங்கினார்:

''இதற்கு விடை புதையல் என்ற சொல்லே ஆகும். புதையல் என்னும் சொல்லில் முன் இரண்டு எழுத்துக்களை நீக்கிவிட்டால் மீதி இருப்பது அல். (புதை + அல் = புதையல்) இருட்டு என்னும் பொருளைக் கொடுக்கும். முதல் எழுத்தை மட்டும் நீக்கினால் பெண் (தையல்) என்ற பொருளைத் தரும். பின் உள்ள இரண்டு எழுத்துக்களை நீக்கினால் ஏவல் (புதை) என்னும் கட்டளையைக் காட்டும். பின் இரண்டு எழுத்துக்கள் முதல் எழுத்துடன் சேருமானால் அது பெருங்காற்றுடன் கூடிய மேகத்தைக் (புயல்) குறிக்கும். முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்தால், சில விலங்குகள் தின்னும் தீனியைக் (புல்) காட்டும். இரண்டாம் எழுத்து பன்னிரண்டு மாதங்களில் ஒன்றைக் (தை) குறிக்கும். நான் பாடிய பாட்டின் கடைசி அடியில் உள்ள புதையல் என்னும் சொல்லைக் கொண்ட இந்த விடுகதைக்கு விளக்கம் கூறி இருக்கலாமே!'' என்று புலவர் சிரித்துக் கொண்டே கூறினார். விளக்கம் கேட்ட வள்ளலும் சிரித்தார்.

புலவரின் விளக்கத்தைக் கேட்ட வள்ளல், வியப்படைந்தார்; இன்பம் கொண்டார்; புலவர், 'போதும்' 'போதும்' என்று சொல்லும் அளவுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்தனுப்பினார்.

1. **புதையல்** — அல் — இருட்டு
2. **புதையல்** — தையல் — பெண்
3. **புதையல்** — புதை — புதைப்பாயாக! — ஏவல் சொல்.
4. **புதையல்** — புயல் — பெருங்காற்றோடு கூடிய மேகம்.
5. **புதையல்** — புல் — வீட்டு விலங்குகளின் தீனி.
6. **புதையல்** — தை — பன்னிரண்டு மாதங்களில் ஒன்று.

இந்த விடுகதைப் பாடலுக்குரிய விடையைப் பாட்டின் இறுதியில் **புதையல்** என்ற சொல்லைச் சமர்த்தாக வைத்துப் பாடியதைப் பாருங்கள்.

பூந்தாவனம்



மிக மிக எடை குறைவான, மடக்கி வைக்கக்கூடிய விமானம் ஒன்றை மாஸ்கோ பொதுப் பரிசோதனை புனைவரைவு அலுவலகம் வடிவமைத்துள்ளது.

இருவர் பயணம் செய்யக்கூடிய இந்த விமானத்தை 30 நிமிடங்களில் கோத்து இணைத்து விடலாம். வானில் எழும்பிச் செல்வதற்கு 50 மீட்டர் நீள ஓடுபாதையே போதுமானது. இது முதன் முறையாகப் பார்த்த போது மணிக்கு 100 கிலோ மீட்டர் பதிவு செய்தது.

— ஆ. கணேஷ் (9532),
அட்டகட்டி.

இளம் மேதைகள்

* சரோஜினி நாயுடு தனது பதின் மூன்றாவது வயதிலே 1300 வரிகள் அடங்கிய நீண்ட ஆங்கிலக் கவிதையை எழுதினார்.

* சத்ரபதி சிவாஜி தன் பதின் மூன்றாவது வயதில் பகைவரின் வேதாரண் என்ற கோட்டையைக் கைப்பற்றினார்.

* ஆதி சங்கரர் பாரதமெங்கும் பாத யாத்திரை செய்து பல மாபெரும் வித்வான்களை வாதத்தில் வென்ற போது அவருக்கு வயது பதினாறு.

* பக்த கவி ஞானேஸ்வரர் தன் பனிரெண்டாவது வயதில் பகவத் கீதைக்கு மராட்டிய மொழியில் அரிய உரையாக ஞானேஸ்வர் என்ற நூலை எழுதினார்.



* ரவீந்திர நாத் தாகூர் தன் பதினான்காவது வயதில் ஷேக்ஸ்பியரின் மாக்பாத் நாடகத்தை வங்காளியில் மொழிபெயர்த்தார்.

— எஸ். மாதவன் (204), திருச்சி.




இன்று பிரபலமாக விற்பனையாகும் குழந்தைகள் உணவு அமுல் மில்க் பவுடர் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும். இதில் அமுல் என்ற சொல் எப்படி உருவாயிற்று, தெரியுமா?

இந்த மில்க் 'பவுடர் குஜராத் மாநிலத்தில் ஆனந் என்ற ஊரில் பால் உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படுகிறது. இந்தப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு 'ஆனந் மில்க் யூனியன் லிமிடெட்' (Anand Milk Union Limited) என்று பேர். இதன் சுருக்கமே 'அமுல்' (AMUL) ஆகும்.

A – Anand
M – Milk
U – Union
L – Limited.

— இரா. உதயமூர்த்தி (21,326), வல்லம்.

* இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் – சுசேதா கிருபளானி.
* இந்தியாவின் முதல் பெண் பிரதம



மந்திரி – இந்திரா காந்தி.
* சுதந்திர இந்தியாவின் முதல் பெண் கவர்னர் – சரோஜினி நாயுடு.
* ஐ. நா. சபையின் உறுப்பினராக இருந்த முதல் இந்தியப் பெண்மணி – விஜயலெட்சுமி பண்டிட்.
* இந்தியாவின் முதல் பெண் தூதர்

வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தைச் சேர்ந்தவை. ஆனால் அவை கிரகங்கள் போல அல்லாததால், மிகவும் நீள்வட்டப் பாதையில் சுற்றுவதால், அவை நீண்ட காலத்திற்கு ஒருமுறை பூமியின் அருகில் வருகின்றன. சூரிய மண்டலம் தோன்றிய காலத்தில் கிரகங்களாக உருவாகாமல் எஞ்சிய சொச்சங்களே வால் நட்சத்திரங்களாக தோன்றி உள்ளன



வால் நட்சத்திரம் தலை, உட்கரு, வால் என மூன்று பகுதிகளை உடையது. உட்கரு நியூக்ளியர் என்பது பனிக்கட்டியாலும், தூசி போன்ற பொருள்களாலும் ஆனது. இதைச் சுற்றி வாயு வளையம் போல் இருக்கும். அது பல இலட்சம் மைல்கள் பரப்பளவு உடையது. முதலில் வால் நட்சத்திரத்தின் உட்கரு மட்டுமே சூரியனிடமிருந்து வெகுதொலைவில் இருக்கும். அது சூரியனை நெருங்க நெருங்க, உட்கருவில் உறைந்து கிடக்கும் பொருள்கள் ஆவியாகி, பின்னர் தலையையும் வாலையும் தோற்றுவிக்கிறது. வால் கோடிக்கணக்கான மைல்கள் நீளமுடையது.

வால் நட்சத்திரங்களில் மிகவும் புகழ்பெற்றது ஹாலி.

எட்மண் ஹாலி என்ற

சி. பி. முத்தம்மா.

* இந்தியாவின் முதல் ஐ. பி. எஸ். பெண் அதிகாரி — கிரன்பேடி.
* இந்தியாவின் முதல் பெண் எதிர்க் கட்சித் தலைவர் — ஜெயலலிதா.


— எஸ். பி. ஆர். இராமகிருஷ்ணன் (22,704), திருவாடானை.



நாம் எதுவொன்றையும் எழுதுவதற்கு முன், 'உ' என்று சுழியிட்டு, பின்பு ஆரம்பிக்கிறோம். இப்பழக்கம் எப்படி வந்தது? அக் காலத்தில் புலவர்கள் பாடல்கள் எழுதுவதற்கு முன் ஓலையை எடுத்து அது எழுதுவதற்குச் சரியான நிலையில் இருக்கிறதா என்பதை அறிவதற்காக எழுத்தாணியால் சோதித்துப் பார்ப்பார்களாம். அவ்வாறு அவர்கள் சோதித்துப் பார்க்கையில் இடப்பட்ட குறியைத்தான் நாம் இப்பொழுது 'பிள்ளையார் சுழி' என்கிறோம்.

— எஸ். கோகுலகிருஷ்ணன் (7,755), திருக்கோகர்ணம்.

* நீளமான சாலை—கிராண்ட் டிரங்க் சாலை.
* மிகப் பெரிய நகரம் — கல்கத்தா.
* நீளமான நதி — கங்கா.
* மிகப் பெரிய கோட்டை — ஆக்ரா கோட்டை.
* மிகப் பெரிய காட்டுப் பகுதி — அஸாம்.



பிரிட்டிஷ் விஞ்ஞானி இதன் பாதையைக் கணக்கிட்டு 76 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் என்று கூறினார். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்து இரு 76 ஆண்டுகளுக்கு ஒரு முறை தோன்றுகிறது என வரலாற்றுக் குறிப்பில் ஆதாரமுள்ளது.

நாம் வாழும் பூமி இரண்டு முறை வால் நட்சத்திரத்தின் வால் பகுதியைத் துளைத்துக் கொண்டு சென்றிருக்கிறது. 1910 ஆம் ஆண்டு ஹாலியின் வால் பகுதியில் சென்ற போது — அவ் வால் பகுதி வாயுவால் ஆனதால் — சேதம் ஏற்படவில்லை.

பூமியில் உயிரினங்கள் தோன்றவும் நோய்கள் பரவவும் வால் நட்சத்திரங்கள் காரணமாக இருக்கும் என அறிஞர்கள் கருதுகிறார்கள். வால் நட்சத்திரங்களில் மிகவும் நீண்ட பாதை உடையது 1914 ஆம் ஆண்டு தோன்றிய டெலவன் எனும் வால் நட்சத்திரம். இது பூமியின் அருகில் இரண்டரை கோடி ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும். வால் நட்சத்திரங்களில் மிகப் பெரியது கிரேட் தாமஸ் என்ற வால் நட்சத்திரம். இதன் நீளம் இருபது கோடி மைல்கள்.

வால் நட்சத்திரங்கள் இலட்சக் கணக்கில் உள்ளன. வானில் தொலைநோக்கி கொண்டு பார்த்தால் எந்நேரமும் குறைந்தது இரண்டு வால் நட்சத்திரங்களையாவது காணலாம். வால் நட்சத்திரங்களுக்கு யார் அவற்றை முதன் முதலில் கண்டு பிடிக்கிறார்களோ, அவரது பெயரே இடப்பட்டு வருகிறது.

— என். ஸ்ரீவித்யா (11,205),
தகவல்: பி. பி. சி. (தமிழோசை)

* பரப்பளவில் பெரிய மாநிலம் — மத்தியப்பிரதேசம்.
* மக்கள் தொகையில் பெரிய மாநிலம் — உத்தரப்பிரதேசம்.
* மிகப் பெரிய மசூதி — ஜும்மா மசூதி.
* மிகப் பெரிய குகைக் கோயில் — எல்லோரா.
* மிகப் பெரிய கண்காட்சி — கல் — கல்கத்தா இந்தியக் கண்காட்சி.

— கா. சவிதா (22,746), காருகுடி



* குறைந்த ஆசையே சந்தோஷ வாழ்க்கை. — துருக்கி.
* போட்டியிடு, பொறாமைப் படாதே! — ஆப்பிரிக்கா.
* தன்னை அறிவது அறிவு, தன்னை மறப்பது மடமை. — ஜெர்மனி.
* நொண்டியை விட பொய்யன் சீக்கிரம் வீழ்வான். — அமெரிக்கா.
* உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டம். — அராபியா.
* மனிதனுக்கு வரும் துன்பங்கள் அனைத்தும் அவன் நாவிலிருந்து வருகின்றன. — அராபியா.
* பூமியில் ஒரு குடிசை கட்டச் சக்தியற்ற பலர் ஆகாயத்தில் அரண்மனைகள் கட்டுகிறார்கள். — ஜெர்மனி.
* அழுது கொண்டு பிறக்கிறோம், குறை கூறிக் கொண்டு வாழ்கிறோம், ஏமாற்றத்தோடு சாகிறோம்! — இங்கிலாந்து.
* பணமிருந்தால் உன்னை உனக்குத் தெரியாது; பணமில்லா விட்டால் உன்னை யாருக்கும் தெரியாது! ஸ்பெயின்.
* ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று நினைக்கிறான்; அதனால்தான் உலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கின்றனர் — ஹங்கேரி.
* ஒவ்வொரு பொய்யும், ஒவ்வொரு பல்லைத் தட்டி விடுவதாக இருந்தால், அநேகமானவர்களுக்குப் பல்லே இருக்காது. — ஸ்வீடன்.
* நண்பனைக் கஷ்ட காலத்தில் தெரிந்து கொள்ளலாம்; வீரனைப் போர்க்களத்தில் தெரிந்துகொள்ளலாம்; நேர்மையானவனைக் கடன் கொடுத்துத் தெரிந்து கொள்ளலாம்; மனைவியை வறுமையில் தெரிந்து கொள்ளலாம்; சுற்றத்தானைத் துன்ப காலத்தில் தெரிந்து கொள்ளலாம்! — இந்தியா.


ராமு: நேற்று ராத்திரி திருடன் வந்து உங்க வீட்டில் திருடிட்டுப் போயும் உன் டாமி குரைக்கவேயில்லியாமே ஏன்?

சோமு: வந்த திருடன் பலே ஆசாமி. என் டாமிக்கு பெவிகோல் தடவிய பிஸ்கெட்டைப் போட்டுட்டு காரியத்தைச் சாதிச்சிக்கிட்டான்.


— ச. மாணிக்கைராஜ்.



சிரிக்காவிட்டால் விடமாட்டேன்



—பா.முத்துகிருஷ்ணன்



மனோகர் தினசரி பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு வரும் போது, 'இன்று பேனா திருடு போய் விட்டது...' 'பென்சில் காணோம்...' 'இன்று நோட்டு காணோம்' என்று அழுதபடியே அம்மா — அப்பாவிடம் கூறுவான்.

''என்னடா தொலைத்து விட்டாயா?'' என்று கேட்டால், ''நானா தொலைப்பேன்? செல்வம் பேனாவைத் திருடி விட்டான்.''

''இன்று மாதவன் பென்சிலைத் திருடினான்.''

''அப்பா நேற்று என் பையிலிருந்து விவேக் நோட்டைத் திருடி விட்டான்,'' என்பான்.

அவன் பெற்றோர் அவன் தினசரி ஏதாவது பொருளைத் தொலைத்து விட்டு மற்றவர்கள் மீது பழி சுமத்துகிறான் என்பதை உணர்ந்தனர்.

ஒரு நாள் அவன் அப்பா மனோகரின் பள்ளிக்குச் சென்றார். அவன் படிக்கும் ஏழாம் வகுப்பு மாணவர்கள் அவன் முதல் நாள் பள்ளிக் கூட கிரவுண்டில் விளையாடும்போது

கண்ணும் கண்ணாடியும்

அவன் பையிலிருந்து விழுந்த பென்சில், பேனா, ரப்பர் எனப் பொருட்களை அவனிடம் தந்தனர்.

மனோகரின் அப்பாவுக்கு இப்போது விவரம் புரிந்தது.

மாலை பள்ளிக்கூடம் விட்டு வந்தவுடன், ''மனோகர்... உன் பொருட்களை எவரும் திருடுவதில்லை... நீயே தொலைத்து விடுகிறாய்... இனி கவனமாக இரு,'' என்று அறிவுரை கூறினார்.

தகப்பனாரின் குற்றச்சாட்டை மனோகர் ஒப்புக் கொள்வதாக இல்லை.

''இல்லை அப்பா... எல்லாரும் திருடி விட்டு என்னைக் கண்டதும் நான் தொலைத்து விட்டதாகக் கூறுகிறார்கள்,'' என்று மீண்டும் மீண்டும் கூறினான்.

டாக்டரிடம் மனோகரை அழைத்துப் போனார் அவன் அப்பா.

அவனைப் பரிசோதித்து விட்டு, ''மற்றவர்களைக் குறை சொல்லும் மனோபாவம் உள்ளது. போகப் போகச் சரியாகி விடும்,'' என்றார் டாக்டர்.

ஒரு திருவிழாவுக்கு மனோகரை அழைத்துச் சென்றார் அவன் அப்பா. அங்கு விளையாட்டுப் பொருட்கள் விற்பவரிடம் பச்சை, சிவப்பு, மஞ்சள் என்று கலர் பேப்பர்கள் ஒட்டிய விளையாட்டு மூக்குக் கண்ணாடி நாலைந்து வாங்கினார்.

''எதற்கு இவ்வளவு கண்ணாடிகள்?'' என்று கேட்டான் மனோகர்.

கோயிலை விட்டுத் திடல் போன்ற இடத்திற்கு வந்தவுடன் அவன் அப்பா, ''மனோகர், இந்தா, இந்தக் கண்ணாடியைப் போட்டுக் கொள்'' என்று மஞ்சள் நிறக் கண்ணாடியைக் கொடுத்தார்.

அதை அணிந்து கொண்ட மனோகர், ''எல்லாம் மஞ்சளாய்த் தெரியுது அப்பா,'' என்றான்.

''சரி, அதைக் கழற்றி விடு... இதைப் போட்டுப் பார்,'' என்றார்.

அடுத்த கண்ணாடியைப் போட்ட மனோகர், ''எல்லாம் பச்சையாய்த் தெரியுது அப்பா,'' என்றான்.

''சரி, இதைப் போடு.''

போட்டான். ''எல்லாம் சிவப்பாய்த் தெரியுது அப்பா.''

மனோகரைப் பார்த்துச் சிரித்தார் அப்பா.

''பார்த்தியா மனோகர்? உன் கண்கள் எப்பவும் ஒரே மாதிரிதான் உள்ளன. ஆனால் நீ மஞ்சள் கலர் கண்ணாடி போடும்போது உலகமே மஞ்சளாகவும், பச்சைக் கண்ணாடி போடும்போது பச்சையாகவும், சிவப்புக் கண்ணாடி போடும்போது சிவப்பாகவும் தெரிகிறது. அது மாதிரிதான் நாம் எதை எப்படி நினைத்து மற்றவர்களைப் பார்க்கிறோமோ அப்படியே மற்றவர்கள் நமக்குத் தெரிகிறார்கள்.

''என்னப்பா சொல்கிறீர்கள்?''

''ஆம் மனோகர். மற்றவர்கள் உன் பொருட்களைத் திருடுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டே அவர்களைப் பார்க்கிறாய். அவர்கள் திருடுபவர்களாகத் தெரிகிறார்கள். எண்ணம் போலவே பார்வை அமைகிறது. உன் எண்ணத்தை மாற்றிக் கொள்,'' என்றார் அப்பா.

மனோகருக்கும் தன் தவறு கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்தது.

இப்போதெல்லாம் அவன் மற்றவர்களைக் குறை சொல்வதில்லை!

பி.ஆர். பார்த்தசாரதி



இனி காலைப் பொழுது இனிக்குமா?

குந்தவை

"கிரிஜா, மணி எட்டு அடிக்கப் போகிறது. ஸ்கூலுக்கு நேரமாச்சு. இன்னும் கொஞ்ச நேரத்தில் ரிக்ஷாக் காரன் வந்து விடுவான். எழுந்திரு," என்று அம்மா பானு அவளை ஐந்தாம் தடவையாக எழுப்பிய போது, அவள் சொல்வதை ஆமோ திப்பது போல் கடிகாரம் எட்டு முறை ஒலித்தது.

திடுக்கிட்டு எழுந்த கிரிஜா, "ஏம்மா, மணி எட்டாச்சா? நான் மாத்ஸ் ஹோம்வொர்க் முடிக்கவே இல்லையே! என்னைச் சீக்கிரம் எழுப்பு என்று நேத்து ராத்திரியே சொன்னேன் இல்லையா?" என்று கத்தியவாறே எழுந்தவள், தாய் சொன்ன சமாதானத்தைக் காதில் வாங்காமல் பாத்ரூமுக்குச் சென்று பல் தேய்த்து விட்டுத் தன் அறைக்கு வந்து, மேஜையில் பரத்தியிருந்த நோட்டுப் புத்தகங்களிலிருந்து — அட்டையை இழந்து, மடிந்து கிடந்த கணக்குப் புத்தகத்தை எடுத்துக் கணக்கைப் போட ஆரம்பித்தவள், "அம்மா, இந்தக் கணக்கைச் சொல் லித் தா," என்று கத்தினாள்.

ரசத்துக்குத் தாளித்துக் கொண் டிருந்த பானு, "உனக்கு எத்தனை தரம் சொல்றது கிரிஜா, ஹோம் வொர்க்கை முதல் நாளே போட்டு முடித்து விடு என்று? நான் சொல் வதைக் காதில் வாங்கவே மாட்டே னென்கிறாய். இப்போ கணக்குச் சொல்லிக் கொடுக்க உட்கார்ந்தால் சமையல் எப்போ முடிகிறது? நான் ஆபீசுக்கு லேட்டாகப் போக வேண்டியதுதான். உங்க அப்பா கிட்டே கேள்," என்றாள்.

ஷேவ் பண்ணிக் கொண்டிருந்த கிரிஜாவின் தந்தை, "ஐயோ, இவளுக்குப் புரியும்படியாச் சொல்ல எனக்கு வராது... நீயே சொல்லிக் கொடு. எனக்கு ஆபீசுக்கு நேர மாச்சு. உனக்கு நேரமில்லையென் றால் கழுதையை விடு. ஒரு நாள் ஹோம்வொர்க் செய்யாமல் வாத்தி யாரிடம் வாங்கிக் கட்டிக் கொண் டால்தான் புத்தி வரும்," என்று உறுமினார்.

கிரிஜாவின் கண்களில் நீர் சுரந் தது. பென்சிலை விட்டெறிந்தாள். "யாரும் சொல்லித் தர வேண்டாம். வாத்தியார்கிட்டே அடி வாங்கறேன். சரிதானே?"

புடலங்காயை வதக்கிக் கொண் டிருந்த பானு, காஸை ஸிம்மில் வைத்து விட்டுக் கிரிஜாவிடம் வந் தாள். "உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் புரியவே மாட்டேங் கிறது, கிரிஜா, காலை வேளையில் எல்லோருக்கும் டென்ஷன். அதனால் தான் இந்த ஹோம்வொர்க்கை முதல் நாளே முடி என்கிறேன். நீ தினம் ஒரு நாளைப் போல காலை யில்தான் போடறே," என்று அலுத் துக் கொண்டபடி கணக்கைச் சொல் லித் தர உட்கார்ந்தாள்.

நாலு கணக்குகளையும் முடிக்கும் போது மணி எட்டரை அடித்தது.

"கிரிஜா, இன்னும் பத்து நிமிஷத் தில ரிக்ஷாக்காரன் வந்து விடுவான். சீக்கிரம் குளித்து விட்டு வாடி. சாதத்தைப் பிசைந்து ஃபேனுக்கடியில் ஆற்றி வைக்கிறேன்" என்று பானு கூவினாள்.

அம்மா சொன்னதை லட்சியம் செய்யாமல் பாத்ரூமிற்குள் ஓடிய கிரிஜா, சில நிமிடங்களில், "அம்மா, துண்டு..." என்று கூவினாள்.

டிபன் பாக்ஸில் வைப்பதற்காகச் சாதம் பிசைந்து கொண்டிருந்த பானு, "குளிக்கும்போதே, டவலை எடுத்துக் கொரண்டு போகக் கூடாதா?" என்று அலுத்தபடி எழுந்து டவலை இடது கையில் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தாள்

அரையும் குறையுமாக உடம்பைத் துடைத்தபடி ஓடி வந்த கிரிஜா, "அம்மா... என் யூனிஃபார்ம் எங்கே?



பீரோவில் காணோமே!'' என்று கத்தினாள்.

''பட்டன் போய் விட்டதே என்று நேற்று ராத்திரி தைத்தேன். டேபிளில் இருக்கிறது. சீக்கிரம் போட்டுக் கொண்டு வா. சாப்பாடு ஆறுகிறது'' என்றாள் அம்மா.

தலையை 'வாரியதாகப் பேர் செய்து கொண்டு பூஜை அறைக்குள் சென்று விபூதி இட்டுக் கொண்டு வந்த கிரிஜா சாப்பிட உட்கார்ந்த போது, ''ஏன் கிரிஜா, டைம் டேபிள் படி எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு விட்டாயா?'' என்று பானு கேட்டாள்.

''ஐயய்யோ! இல்லேம்மா,'' என்று அலறிய கிரிஜா, சாதத்தை இரண்டே வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டு தட்டிலேயே கையைக் கழுவி விட்டு அறைக்கு ஓடி, டைம் டேபிள்படி எடுத்து வைக்கலானாள். ''அம்மா, என் ஜாக்பிரஃபி டெஸ்ட் நோட்டைக் காணோமே, பார்த்தியா?''

''நான் உன் டெஸ்ட் நோட்டை எதுக்குடி எடுக்கறேன்? அங்கேதான் இருக்கும், பாரு.''

இதற்குள் டிங் டிங் என மணி அடித்தபடி ரிக்ஷாக்காரன் வந்து விட்டான். காஸை அணைத்துவிட்டுப் பானு வெளியே வந்து புத்தக அலமாரியில் தாறுமாறாகக் கலைந்திருந்த நோட்டுக் குவியலிலிருந்து ஜாக்ரஃபி டெஸ்ட் நோட்டை எடுத்துத் தந்து, ''நீ போய் ஷூ போட்டுக் கொள். மீதி நோட்டுக்களை நான் பார்த்து வைக்கிறேன்,'' என்றாள்.

மின்னல் வேகத்தில் சாக்ஸையும், ஷூவையும் போட்டுக் கொண்ட கிரிஜா, தாய் அடுக்கி வைத்திருந்த புத்தகங்களையும், நோட்டையும் பையினுள் திணித்தபடி, ''அம்மா ஸ்கூலுக்குப் போய் வருகிறேன்,'' என்றபடி கிளம்பினாள்.

அவள் பள்ளி கிளம்பிச் சென்றதும் புயலடித்து ஓய்ந்தது போல இருந்தது பானுவிற்கு. தினமும் நடக்கிற கதைதான் இது.

அன்று கிரிஜா பள்ளியிலிருந்து திரும்பியபோது பானு முகமலர்ச்சி



யோடு சொன்னாள். ''கிரிஜா உங்க பெரியப்பாவுக்குப் பஞ்சாபிலிருந்து மதராஸுக்கு மாற்றலாகி விட்டதாம். அதனால் நீ இந்த லீவில் உன் பெரியப்பா வீட்டுக்குப் போகலாம்'' என்றாள்.

கிரிஜாவுக்கு ரொம்பச் சந்தோஷமாய் இருந்தது. பெரியப்பாவுக்கு அவள் வயதில் ஒரு மகள் இருக்கிறாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் கோடை விடுமுறையில் இங்கு அவர்கள் வந்திருந்தபோது அவளுடன் ஒரு வாரம் தங்கி, இருவரும் சிநேகமாகி விட்டனர்.

கிரிஜாவுக்கு மார்ச் இறுதியிலேயே அவர்களது பள்ளியை மூடி விட்டார்கள். அடுத்த நாளே சென்னைக்கு, பெரியப்பா வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள். அவள் தந்தை இரண்டு நாட்கள் லீவ் போட்டு விட்டு அவளைக் கொண்டு விட வந்தார்.

ஸ்டேஷனில் பெரியப்பா பெண் அருணாவைப்பார்த்ததும்கிரிஜாவின் மகிழ்ச்சி கரை புரண்டது. ஓடி வந்து அவள் கையைப் பற்றிக் குலுக்கினாள். அனைவரும் டாக்ஸி வைத்துக் கொண்டு வீடு வரும்போது இரவு ஏழாகி விட்டது.

ஹாலில் அனைவரும் பொதுப் படையாகப் பேசிக் கொண்டிருந்த போது கிரிஜாவின் பெரியம்மா, ''மணி எட்டாகப் போகிறதே, எல்லோரும் சாப்பிடலாமே!'' என்றதும் அனைவரும் எழுந்தனர்.

அதற்குள் உள்ளே முதலில் ஓடிய அருணா, டைனிங் டேபிளில் அனைவருக்கும் தட்டுக்களை வைத்து ஃபிரிஜ்ஜிலிருந்து குடிக்கும் நீரை எடுத்துத் தட்டுக்களின் அருகே டம்ளர்களை வைத்து ஊற்றினாள்.

''பரவாயில்லையே! அம்மாவுக்கு ஒத்தாசை செய்கிறாளே! குட்!'' என்று கிரியின் அப்பா அவளைப்

ஒரு நாட்டின் முக்கியத் தலைவர் இறந்தால் அந்த நாட்டின் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடுவதுதான் சர்வதேச மரபு. ஆனால், சவூதி அரேபியாவின் கொடி மட்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கீழே இறக்கப்படுவது கிடையாது! என்ன காரணம்? அந்தக் கொடியில் இஸ்லாத்தின் மூல மந்திரமான 'கலிமா' பொறிக்கப்பட்டிருப்பதே!

— ஆ. ரமேஷ் (13,226),
அட்டகட்டி.

பாராட்டியபோது, ''தினமும் அவள் தான் சாப்பிடத் தட்டு எடுத்து, குடிக்கத் தண்ணீரும் வைப்பாள். எல்லோரும் சாப்பிட்டதும் தட்டையெல்லாம் தேய்க்கப் போட்டு, டம்ளர்களை க்ளீன் செய்து விடுவாள்,'' என்று பெருமையோடு பெரியப்பா சொன்னார்.

அருணாவைக் கண்கள் அகல விரியப் பார்த்த கிரிஜா கேட்டாள்:

''கிளீனர், பையனைப் போல ஏண்டி, நீ இந்த வேலையைச் செய்யறே? உங்கம்மா செய்ய மாட்டாங்களா?''

''எங்கம்மா எதுக்காகச் செய்யணும்? பாவம் எங்கம்மா! ஆபீஸிலிருந்து வந்ததும் ரெஸ்ட் கூட எடுத்துக் கொள்ளாமல் ராத்திரி சமையலுக்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்து விடறாங்க. அட்லீஸ்ட் இந்த வேலையாவது செஞ்சி அவங்களுக்குக் கொஞ்சம் ரெஸ்ட் கொடுக்கலாம் இல்லையா? நம் வீட்டு டேபிளை நாம் துடைக்கிறோம். இதிலே என்னடி தப்பு?'' என்றவள், ''வா, என் ரூமுக்குப் போகலாம்,'' என்று அவளைத் தன் அறைக்குக் கூட்டிச் சென்றாள்.

அவளது அறையைப் பார்த்த கிரிஜா, பிரமித்துப் போனாள். புத்தக அலமாரியில் அவளது பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் மேலட்டைகளை அணிந்து கொண்டு ஒன்றின் மீது ஒன்றாக வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. அடுத்திருந்த மற்றோர் அலமாரியில் அவளது விளையாட்டுச் சாமான்கள் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன.

''கிரிஜா, கொஞ்ச நேரம் இந்த மாதப் பத்திரிகை பார்த்துக் கொண்டிரு. ஹோம்வொர்க் இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கு. முடித்து விட்டு வரேன்,'' என்ற அருணா, அலமாரியில் இருந்த நோட்டு அடுக்குக் கலையாமல் பத்திரமாக ஒன்றை உருவி மேஜையில் வைத்து எழுதலானாள்.

''ஏன் அருணா, உன் ஸ்கூல் பக்கத்துத் தெருவில்தானே இருக்கு? ஒன்பது மணிக்குக் கிளம்பினால் போதும் என்று பெரியம்மா சொன்னாங்களே! அதனாலே நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். இப்போ விளையாடலாம் வா,'' என்றாள் கிரிஜா.

''ஸாரிடி, கிரிஜா. டுமாரோ நெவர் கம்ஸ் என்று என் ரூம் வாசலிலே எழுதி வைத்திருக்கிறேன் பார்த்தாயோ? எங்கம்மா எனக்குச் சொல்லிக் கொடுத்தது என்ன தெரியுமா? 'நாளை செய்ய வேண்டியதை இன்று செய்; இன்று செய்ய வேண்டியதை இப்பொழுது செய்,' என்பதுதான். அதனால் இப்பொழுதே முடித்து விடுகிறேன்,'' என்றவாறு மடமடவென ஹோம்வொர்க்கைச் செய்யலானாள்.

சிறிது நேரத்தில் ஹோம்வொர்க் முடிந்ததும் இருவரும் விளையாடத் துவங்கினார்கள். இரவு டி.வி.யில் இங்கிலீஷ் நியூஸ் முடிந்ததும் அருணா சட்டென ஆட்டத்தை நிறுத்தினாள்.

''ஏன் அருணா, ஆட்டத்தை நிறுத்தி விட்டாய்? இன்னும் பத்து நிமிஷத்தில் முடிந்து விடும்.''

''ஸாரி கிரிஜா, பத்து மணிக்குப் படுத்தால்தான் ஐந்தரை மணிக்கு எழுந்திருக்கலாம்.''

''அத்தனை சீக்கிரம் எழுந்து என்ன பண்ணப் போறே?''

''நாளை என்னோடு எழுந்திரேன் தெரியும்.''

இருவரும் படுக்க வந்தனர். அருணாவின் கட்டிலில் மெத்தையும் தலையணையும் புதிய விரிப்புக்களுடன் பளிச்சென இருந்தன.

''தினமும் ஞாயிறன்றுதான் நான் விரிப்புக்களைத் துவைக்கப் போட்டு மாற்றுவேன். ஆனால் நீங்கள் வருவதால் இன்றே துவைக்கப் போட்டு வேறு மாற்றி விட்டேன்.''

''என்னது, நீதான் தலையணை மெத்தை விரிப்புக்களை மாற்றுவாயா?''

''பின்னே இந்தச் சின்ன வேலையைச் செய்ய எங்க அம்மா வரணுமா?''

கிரிஜாவின் பிரமிப்புக் கூடிக் கொண்டே போயிற்று. தன்னோடு அருணாவை ஒப்பிட்டுப் பார்த்தவாறே தூங்கிப் போய் விட்டாள். ஏனோ மறுநாள் அவளுக்குச் சீக்கிரமே விழிப்பு வந்து விட்டது. தலையைத் தூக்கிப் பார்த்தாள். மணி 6.25 தான்! ஏனோ படுக்கப் பிடிக்கவில்லை. எழுந்து உட்கார்ந்தாள்.

அப்பொழுது உள்ளே நுழைந்த அருணா, ''என்ன கிரிஜா, எழுந்து விட்டாயா? குட்மார்னிங்,'' என்றாள்.

''குட்மார்னிங். நீ இன்னும் சீக்கிரமே எழுந்து விட்டாயா?''

''ஓ! நான்தான் நேற்றே சொன்னேனே! ஐந்தரைக்கு எழுந்து பல் தேய்த்து விட்டு, பூத்துக்குப் போய்ப் பால் வாங்கி வருவேன். விவா குடித்ததும் தொட்டியிலே தண்ணீர் நிரப்பி விட்டுப் படிக்க வந்து விடுவேன். எட்டு மணி வரை படிப்பேன். அப்புறம் டைம் டேபிளை எடுத்து வைத்துக் கொண்டு, குளித்து டிரெஸ் செய்து சாப்பிட்டால், ஒன்பது மணிக்கு நிதானமாய்க் கிளம்பலாம்,'' என்றாள்.

கிரிஜா பிரமிப்புடன் அருணாவின் செயல்களைக் கவனித்தவாறு இருந்தாள். எட்டு மணி வரை படித்த அருணா, படித்து முடித்ததும் எந்த விதப் பரபரப்பும் இல்லாமல் பள்ளி செல்லப் புத்தகங்களை அடுக்கி வைத்து விட்டு ஹாலில் மடித்து வைத்திருந்த துணிகளிலிருந்து அவளது துணிகளை எடுத்துக் கொண்டு குளிக்கச் சென்றாள். குளித்து விட்டு வந்ததும் ஸ்கூல் யூனிஃபார்மை அணிந்து கொண்டு பூஜை அறைக்குச் சென்று மெல்லிய தாய் விபூதி இட்டுக் கொண்டு கடவுளை வணங்கி விட்டு, தன் வாட்டர் பாக்கில் குடிக்க நீரை நிரப்பிக் கொண்டு, தட்டை எடுத்து வைத்துச் சாப்பிட உட்கார்ந்தாள். கிரிஜாவைப் போலச் சாதத்தை அள்ளி வாயில் போட்டு விழுங்காமல், மெதுவாகச் சாப்பிட்டு முடித்து, பளபளவென மின்னிய ஷூவைப் போட்டுக் கொண்டு ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஸ்கூல் பாக்கை மாட்டிக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பிய அருணாவை அதிசயத்துடன் பார்த்தவாறு இருந்தாள் கிரிஜா.


அவள் தாய் பானுவைப் போல பெரியம்மா சமையலறைக்கும் அருணாவின் அறைக்குமாக அலையவே இல்லை. காலையில் அவள் வீட்டில் உருவாகும் டென்ஷன் இங்கு அறவே இல்லை. அதற்குக் காரணம் யார்? கிரிஜாவுக்கு நன்றாகப் புரிந்தது.

வியர்க்க விறுவிறுக்கத் தனக்குப் பரிமாறி, தனக்குக் குற்றேவல் செய்து, தன்னைப் பள்ளிக்கு வழியனுப்பும் தாயை நினைத்துப் பார்த்தாள் கிரிஜா. அவள் கண்களில் நீர் பெருகியது. அந்தக் கண்ணீர் அவளது பொறுப்பற்ற தன்மையை அழித்தது.

ஆம். கிரிஜா பொறுப்பை அறிந்து கொண்ட பெண்ணாகி விட்டாள். இனி அவளது வேலைகளை அவளே செய்து கொண்டு தன் பெற்றோருக்கு ஏற்படும் காலை நேர டென்ஷனைக் குறைப்பாள். ஹோம்வொர்க் செய்வது, டைம் டேபிளை முதல் நாளே எடுத்து வைத்துக் கொள்வது, காலையில் சீக்கிரமே எழுந்திருப்பது — இவை மூன்றையும் கடைப்பிடித்தால் போதுமே! காலைப் பொழுது இனிமையாக மலருமே!

இதைக் கிரிஜா அறிந்து கொண்டு விட்டாள். இந்த விடுமுறை முடிந்ததும் இனி வரும் இனிக்கும் காலைப் பொழுதுகளை வரவேற்கத் தயாராகி விட்டாள்.



பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்கத் தேவர்களுக்கு அசுரர்களும் உதவினர்.
மோகினி அவதாரம் எடுத்த மகாவிஷ்ணு அமிர்தத்தை தேவர்களுக்கு மட்டும் கொடுத்தார்....
விண்ணை அளந்த வாமனர்
கதை: ஆனந்தி
படம்: வினு
அசுரர்களைத் தேவர்கள் கேலி செய்தனர்...
எங்களிடம் இனி வாலாட்டாதீர்கள்!
நாங்கள் சாகாவரம் பெற்று விட்டோம்!
அசுரர்கள் அரசனான மகாபலிக்குக் கோபம் வந்தது......
நம்மில் ஒருவருக்குக் கூட அமிர்தம் கிடைக்கவில்லை...
மோகினியை நம்பி மோசம் போனோம்!


நம்மை ஏமாற்றிய தேவர்களின் கர்வத்தை அடக்குவோம்! மாயா யுத்தம் செய்வோம்!
அசுரர்கள் மந்திர தந்திரங்களைப் பிரயோகித்தார்கள்.
ஐயோ! பாம்புப் பட்டாளம்! ஓடு! ஓடு!
இன்னொரு மாயைத் தோற்றம்...
ஐயோ! பேய் பிசாசுகள்!
இவ்வாறான பல விதமாயைகளில் சிக்குண்டு தேவர்கள்...
ஓடி ஓடி, களைத்துப் போனோம். பாம்பையும் பிசாசையும் எதிர்த்துப் போரிடவும் முடியவில்லை...
தேவர்கள் வைகுண்டம் சென்று...
நாராயணா! சரணம்!
விஷ்ணு தேவர்களுக்கு உதவ வந்ததும்...
எல்லா மாயைகளும் மறைந்து விட்டனவே!


அசுரர் உலகில்....
மகாவிஷ்ணு குறுக்கிட்டதால் நமது மாயைகள் பயனற்றுப் போயின...
இனி நேருக்கு நேர் யுத்தம்தான்!
யுத்தம் தொடர்ந்தது...
மகாபலி அடிபட்டு விழுந்தார்...
ஆ!
ஐயோ!
அசுரர்கள் பின் வாங்கினார்கள்...
சுக்கிராச்சாரியார் வந்தார்...
குருவே! அரசர் மயக்கமடைந்திருக்கிறார்...
கவலை வேண்டாம்...
மிருதசஞ்சீவினி மந்திரம் இருக்கிறது....


சுக்கிராச்சாரியார் மந்திரம் பிரயோகித்து மகாபலியை மட்டு மின்றி எல்லா அசுரர்களையும் குணப்படுத்தினார்.
உங்களுக்கு அசுரர் குலமே கடமைப் பட்டிருக்கிறது...
சுக்கிராச் சாரியாரின் ஆசி...
இந்திர பதவி அடைவாய்.
குருவே உங்கள் ஆசி மட்டும் பலிக்குமானால்...
நிச்சயம் பலிக்கும்! உன் ஆசை நிறைவேறும்!
மகாபலியின் ஆசை நிறைவேற சுக்கிராச்சாரியார் 'விச்வஜித்' யாகம் செய்தார்...
அக்னியிலிருந்து ஒரு வில், இரு அம்புராத்தூணிகள், ஒரு கவசம், இரு பச்சை நிறக் குதிரைகள் தோன்றின..



அவற்றை சுக்கிராச்சாரியார் மகாபலிக்குக் கொடுத்தார்.
இந்த அற்புதமான தேரில் ஏறிச் செல்! இந்தச் சங்கை முழங்கு!
நான் இந்திரனை வெல்ல ஆசி கூறுங்கள்.
ஜய விஜயீ பவ!
அமராவதி நகரவாசலில் மகாபலி சங்கை ஊதினான்...
தேவர்கள் நடுங்கினர். பிருஹஸ்பதியிடம் சென்று....
குருவே! தோற்று ஓடிய மகாபலி மீண்டும் வந்திருக்கிறானே!



சுக்கிராச்சாரி-யாரின் தவ வலிமையினால் மகாபலி புதிய பலம் பெற்றிருக்கிறான். நீங்களோ அமிர்தம் உண்டதால் கர்வமுற்று, அதனால் பலவீனமடைந்திருக்கிறீர்கள்......
...நல்ல காலம் வரும் வரை மறைந்திருங்கள்; பொறுத்திருங்கள்.
தேவர்கள் உருமாறி வெவ்வேறு இடங்களில் மறைந்து வாழ்ந்தார்கள்...
மகாபலி இந்திரனுடைய அமராவதி பட்டினத்தில்...
இனி நான்தான் இந்திரன்!
சுக்கிராச்சாரியார் மகாபலியின் மேன்மைக்காக நூறு அசுவமேத யாகங்கள் செய்ய ஆரம்பித்தார்....




யாகக் குதிரை திக் விஜயம் செய்ய அசுரர்கள் பின் தொடர்ந்தனர்...
தேவர்களின் தாய் அதிதி, மனம் வருந்தினாள். காசியபரிடம்...
மகாபலி சுவர்க்கத்தை ஆள்கிறான்...என் புதல்வர்களோ ஒளிந்து வாழ்கிறார்கள்... அவர்களைக் காணாமல்......
காசியபர் மனைவிக்கு ஆறுதல் சொன்னார்...
பகவானுடைய செயல்கள் நமக்குச் சில சமயம் புரிவதில்லை. நீ திருமாலை எண்ணி பயோ விரதம் இரு!
அதிதி, பல காலம் விரதமிருந்து திருமாலைப் பூஜித்தாள்....
ஒரு நாள்
அன்னையே! உன் தவம் வீணாகாது. உனக்கு நானே மகனாகப் பிறந்து, இந்திரனைக் காப்பேன்!


அதிதிக்குக் குழந்தை பிறந்து வளர்ந்தது...
என் செல்வமே வா!
இந்திரனின் சகோதரனான உபேந்திரனுக்கு ஐந்து வயதான போது... பிருகஸ்பதியிடம் சென்ற காசியபர்...
குருவே!
...வாமனனாகப் பிறந்துள்ள உப. இந்திரனுக்குப் பூணூல் அணிவித்து காயத்ரீமந்திரம் உபதேசிக்க வேணும்...
அப்படியே, ஆகட்டும்!
வாமனனுக்கு உபநயனம் நடந்தது...
பூமாதேவி - மான் தோலும் சந்திரன் தண்டமும் வாமனனுக்கு அளித்தார்கள்...



குபேரனும் சரஸ்வதி தேவியும் வாமனருக்குப் பரிசுகள் வழங்கினர்...
ஜபமாலை...
இதோ பிக்ஷா பாத்திரம்!
'அன்னையே! பிச்சை யிடுங்கள்' என்று யாசித்தார், வாமனராக அவதரித்த மகாவிஷ்ணு!
பவதி பிக்ஷாந்தேஹி!
பிரும்மச்சாரிகள் அடக்கத்தைப் பெற, யாசித்து உண்பார்கள்... பார்வதி தேவி...
பிக்ஷையுடன் ஆசியும் வழங்குகிறேன்! மூவுலகையும் வெல்வாயாக!
பெற்றோரை வணங்கினார் வாமனர்...
உன் சகோதரர்களான தேவர்கள் உன்னால் மேன்மை அடையட்டும்!
சில காலம் சென்று...
அப்பா! அம்மா! விடை கொடுங்கள். நான் வந்த காரியம் நிறைவேற, நர்மதை நதிக்கரைக்குச் செல்ல வேண்டும்...


வாமனரின் அவதார மகிமை தெரிந்திருந்தும் பாசத்தால் பெற்றோர் கலங்கினர்...
அசுரர்கள் பயங்கரமான-வர்கள்! நீயோ குழந்தை...
அசுரகுரு சுக்கிராச்சாரியார் மகாதபஸ்வி! அவரால் அசுரர்கள் அசாத்திய பலம் பெற்றுள்ளார்கள்....
கவலைப் பட வேண்டாம்; போய் வருகிறேன்...
நர்மதை நதிக் கரையில் பிருகு குசசம் என்ற இடத்தில், பலி சக்கரவர்த்தி...
அதோ அசுவமேதயாக குதிரை திரும்பி விட்டது!
யாக மண்டபத்தில் சுக்கிராச்சாரியார்...
அசுரர் தலைவனே! இந்த ஒரு யாகம் பூர்த்தியாகி விட்டால், நீ இந்திர பதவியில் என்றும் நிலைப்பாய்! உன்னை வெல்ல யாராலும் முடியாது.....



அப்போது காவலன் வந்து...
அரசே! ஓர் அந்தணச் சிறுவன் வந்திருக்கிறான்.. ..குள்ளன் ...
அழைத்து வா!
சுக்கிராச்சாரியாருக்கு சந்தேகம் எழுந்தது...
மகாபலி! யாகம் முடியும் தருவாயில் எதற்கு?... முடிந்த பிறகு அழைத்து உபசரிக்கலாம்....
ஆனால் மகாபலி...
குருவே! என்னைத்தேடி வந்தவர்களை உபசரிப்பது என் முதல் கடமை...
மகாபலி வாமனரை வரவேற்றான்....
அந்தணரே! நீங்கள் யாகத்துக்கு வந்தது என் பாக்கியம்....
என் குருவின் ஆசியினால் இந்திர பதவி பெற்றேன். நீங்கள் எதைக் கேட்டாலும் தருவேன்...




மகாபலியே! யாசித்து உண்பவன் நான். தேவைக்கு அதிகமாகக் கேட்பது திருட்டுக்குச் சமானமானது.. அதனால்..
கேளுங்கள், சுவாமி!
எனக்கு என் காலால் அளந்து மூன்று அடி நிலம் வேண்டும்..!
கேவலம், மூன்று அடி மண்தானா? தயங்காமல் வேண்டியதைக் கேளுங்கள்.. தருகிறேன்!
அரசனே! மூன்று அடி மண்ணினால் திருப்தி அடையாதவன் உலகம் முழுவதும் கிடைத்தாலும் மகிழ்ச்சி அடைய மாட்டான். நான் கேட்டதைத் தந்தால் போதும்!
அப்போது சுக்கிராச்சாரியார்...
மகாபலி! ஒரு அடியால் பூமியையும் இன்னொரு அடியால் வானையும் அளந்து விடக்கூடியவர் இவர்! ஏமாந்து போகாதே!



குருவே! நீங்கள் கூறுவது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் நான் கொடுத்த வாக்கை மீற முடியாது!
மகாபலி! உன்னை எச்சரிக்கிறேன்! இவர் நம் விரோதிகளுக்காக வந்திருப்பவர்! வாமனனாக வந்திருக்கிறார் மகாவிஷ்ணு!
அப்படியானால் திருமாலே என்னிடம் யாசித்தார் என்ற பெருமையை நான் அடைந்து விட்டேன்! இந்திரபதவி கூட அதைவிடப் பெரியதல்ல!
நீ குருவையே அவமதிக்கிறாய்! எல்லாவற்றையும் இழப்பாய்!
சுக்கிராச்சாரியாரின் சாபத்தை ஏற்றுக்கொண்ட மகாபலி...
வாமனரே! தாங்கள் கேட்டதைத் தானம் செய்தேன்... இது சத்தியம்!
அப்போது ஓர் ஆச்சர்யம் நடந்தது... வாமனர் வளர ஆரம்பித்தார்!
ஆகா!


திரிவிக்கிரம ராக உருமாறி மேலும் வளர்ந்தார்...
அற்புதம்!
பூவுலகம் முழுவதையும் ஓரடியால் அளந்தார்...
ஆகாச லோகம் முழுவதையும் இன்னொரு அடியால் அளந்தார்...
மகாபலி! மூன்றாவது அடி எங்கே?



இதுவரை திகைத்திருந்த அசுரர்கள்....
ஆ! இவன் மாயாவி! நம் மன்னரின் ராஜ்யத்தைக் கவர்ந்து விடுவான்! தாக்குங்கள்!
அசுரர்களைத் தடுத்தான் மகாபலி....
பகவானை நாம் எதிர்க்க வேண்டாம்! இப்போது தேவர்களுக்கு நல்லகாலம். காத்திருங்கள், காலம் மாறும்!
வாமனராக வந்த மாயனே! மூன்றாவது அடியை என் தலையில் வைத்து அளந்து கொள்ளுங்கள்!
என்பாட்டனார் பிரஹலாத னைப்போல் நானும் உமது பக்தனாக இருக்கவே ஆசைப்படு கிறேன்!
மகாபலி! நீ சத்தியம் தவறவில்லை. அதனால் உன்னைப் பூமிக்குக் கீழே உள்ள அதலலோகத்துக்கு அனுப்புகிறேன்!


அங்கு சோம்பல் கவலை, துயரம் போன்ற எதுவும் இல்லை. உன் சிரத்தில் நான் கால் வைத்ததால் உன் அசுரகுணம் நீங்கி விட்டது.
பலி, தன் பரிவாரங்களுடன் சுதல உலகம் சென்று அதனை ஆண்டு வந்தான். இந்திரன் வந்து . . .
என் தம்பி யாகப் பிறந்து என்னைக் காத்து அருளினீர்கள்.
சுவர்க்கத்தை இந்திரனுக்குத் திரும்ப அளித்தார் திருமால்...
ஜெய விஜயீ பவ!
வாழ்க! வாழ்க!
தேவர்களே! உங்கள் கடமைகளைச் சரியாகச் செய்து வாருங்கள்!
தேவர்கள் மகாவிஷ்ணுவை வணங்கினர்.
எங்களுக்குப் பதவிகளைத் திரும்பப் பெற்றுத் தந்து நமது தாய் அதிதிக்கு மகிழ்ச்சி அளித்தீர்கள்!
நாராயணா! நாராயணா!


இப்படியும் சில பிராணிகள்!

கோடை காலத்தில் புலிகள்
வெப்பத்தைச் சமாளிக்கக்
குட்டை களில்
படுத்துக் கிடக்கும்....







மலேஷியாவில் வாழ்ந்துவரும்
'செவ்ரோடைன்' என்கிற
மான் இனத்தின் உயரம்
25 செ.மீ. தான்.!



ஒட்டகம் மனிதனை
வெறுக்கும் பிராணி.
தன்னைக் காண
வருபவர்களைக் கடிக்கும்;
உதைக்கும், காறித் துப்பும்!

அமெரிக்காவில் அமேசான்
காடுகளில் வாழும்
'மார்மே செட்' குரங்கு
இனம் உருவில் மிகச் சிறியது...
நம் கை சுண்டுவிரலின் அளவுதான்!





சைபீரியா காடுகளில்
பறக்கும் அணில் இனம்
வாழ்கின்றன!



முள்ளம்பன்றியின் உடலில்
சுமார் 25,000 முட்கள் உண்டு..

தொகுப்பு: விஜயா சீனிவாசன் படங்கள்: கலா



என் உள்ளம் கவர்ந்த அன்புக் குழந்தைகளே, எனது குழந்தைப் பருவத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

என் சின்னஞ் சிறு பருவத்தை எண்ணி எண்ணிப் பூரிக்கிறேன்.

'என்னுடைய முதல் துன்பம் மனிதனாகப் பிறந்துதான்,' என்று மேல்நாட்டு அறிஞர் ரூசோ வருத்தப் பட்டாராம்!

ஆனால் நம் அவ்வைப் பாட்டி என்ன சொன்னாள் தெரியுமா?

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது.' மனிதப் பிறவியின் பெருமை பற்றி அவ்வையார் துள்ளிக் குதிக்கிறார்.

'மனிதப் பிறவியும் அவசியம் வேண்டியதுதான்" என்பது அப்பர் அடிகளின் வாக்கு. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது அவர் வாக்கு.

மனிதனாகப் பிறந்ததில் நானும் உண்மையில் பெருமைப்படுகிறேன். அதிலும் தமிழனாகப் பிறந்ததால் என் பெருமை இரு மடங்கு ஆகிறது.

நஞ்சை வளம் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தில் நான் பிறந்தேன். இந்த மாவட்டத்தில் அழகான சிற்றூர்களில் ஒன்று திருக்கோளிலி. திருக்குவளை என்றும் அதை அழைப்பார்கள்.

திருவாரூரிலிருந்து பதினைந்தாவது மைலில் உள்ள கிராமம். எழில் நிறைந்த திருக்குளம். குளத்தைச்

கலைஞர் மு.கருணாநிதி

என் பிள்ளைப் பருவம்

சுற்றிப் பசுமையான சோலை. எதிரே சிவன் கோயில். மேற்கு எல்லையில் முனியன் கோயில். தெற்கு எல்லையில் ஐயனார் கோயில். இவை எல்லாம் நான் குழந்தைப் பருவத்தில் கண்ட அழகிய திருக்குவளை. இப்போது அந்த அழகில் முக்கால் பகுதி குறைந்து விட்டது.

என் தந்தையார் பெயர் முத்துவேலர், தாயார் அஞ்சுகம் அம்மையார்.

என் தந்தை நல்ல விவசாயி; சிறந்த வித்வான்; கவி எழுதும் ஆற்றல் பெற்ற புலவர்; வட மொழியிலும் தேர்ச்சி பெற்றவர். பாரதக் கதைகளையும் இராமாயணக் கதைகளையும் பண்டிதரை விட மிக அழகாகச் சொல்லுவார் என் தந்தை.

கிராமத்து நிகழ்ச்சிகளை வைத்து உண்மைக் கதைகள் பல இயற்றியுள்ளார். கிராமிய மெட்டுகளில் அவர் இயற்றிய கேலிப் பாடல்களை இன்றைக்கும் திருக்குவளையில் பாடக் கேட்கலாமே!

என் தந்தை பழுத்த கடவுள் பக்தர். விடிவதற்குள் அவர் நெற்றியில் விபூதி ஏறி விடும். சிறந்த மந்திரவாதி என்று கூட அவரை நம்பிப் பலர் வந்து கொண்டிருந்தனர்.

பாம்புக் கடி, தேள் கடி, பெரிய ரணங்கள் இவைகளுக்கு எல்லாம் மந்திரமும் ஜெபித்து, மருந்தும் கட்டி அனுப்புவார். அதற்காக யாரிடமும் காணிக்கை வாங்க மாட்டார்.

அன்னை அஞ்சுகம் அம்மையார், எங்கள் அன்புத் தெய்வம். எங்களைப் பெற்று வளர்த்த பெருமாட்டி: எறும்பு போல உழைத்து எங்களை ஆளாக்கி விட்ட தங்கம்.

என் பெற்றோர் நெடு நாட்கள் குழந்தை இல்லாத கவலையால் வாடினார்கள். அவர்களின் கவலையைத் தீர்ப்பது போல், பெரிய நாயகம், சண்முக சுந்தரம் என்ற இரு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள்.


ஆனாலும் மன நிறைவு இல்லை. ஆண் குழந்தை இல்லையே என்ற ஆழ்ந்த கவலையால் திருத்தலங்கள் சென்றனர். தீர்த்தங்கள் ஆடினர். கடுமையான விரதங்கள் மேற்கொண்டார்கள்.

அவர்களின் தவம் பலித்தது போல நான் 1924 ஜூன் மாதம் மூன்றாம் நாள் பிறந்தேன்.

நான் பிறந்த 1924—ஆம் ஆண்டுக்கு எத்தனையோ சிறப்புக்கள் உண்டு. அவற்றில் முக்கியமாக நான் இரண்டை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

காங்கிரஸ் பேரவையின் தலைவராக, காந்தியடிகள் தலைமை ஏற்ற சிறப்பு 1924—க்கு மட்டுமே உண்டு.

இரண்டாவது நான் குறிப்பிட் விரும்புவது, மைசூர் அரசாங்கத்திற்கும் நமது சென்னை மாநிலத்திற்கும் இடையே காவிரி நதி நீர் ஒப்பந்தம் ஏற்பட்டதும் 1924—ல்தான். தஞ்சை



* காதணி விழா மிகச் சிறப்பாக...

மாவட்டம் காவிரி நதியால் வளம் பெறுவதற்கு நான் பிறந்த ஆண்டிலே தான் ஒப்பந்தம் ஏற்பட்டது பெருமைக்கு உரியதுதானே?

வழக்கமான வைதீகப் பெற்றோர் செய்யும் சடங்குகள் அனைத்தையும் என் பெற்றோர் எனக்கும் செய்தார்கள். காதிலே கடுக்கன் போடும் காதணி விழா மிகவும் சிறப்பாக எனக்கு நடத்தப்பட்டது. என்னைப் பள்ளிக்கு அனுப்பும் விழாவும் மிகவும் ஆடம்பரமாகச் செய்யப்பட்டது.

முடி இறக்குதல் பிரார்த்தனை என்ற பெயரால் பல கோயில்களுக்கு என் தலைமுடி காணிக்கையாக்கப் பட்டது.

பள்ளிக்கு மட்டுமல்ல; இசைக் கல்விக்கும் என் தந்தை ஏற்பாடு செய்தார். ஆனால் இசைப் பயிற்சியில் எனக்கு நாட்டம் செல்லவில்லை. நாலு பெரிய மனிதர்கள் இருக்கும் இடத்தில் சட்டை போட்டுக் கொண்டு போக முடியாது! மேல் துண்டையும் எடுத்து இடுப்பிலே கட்டிக்கொள்ள வேண்டும்! செருப்பு அணிந்து கொள்வதும் தவறு!

இப்படியெல்லாம் கடுமையான அடிமைத்தனம்! தெய்வத்தின் பெயராலும், சாதி, மத, சாத்திர சம்பிரதாயங்களின் பெயராலும் சமுதாயக் கொடுமை கண்டு என் பிஞ்சு மனம் எதிர்த்தது. அதன் காரணமாகவே இசைப் பயிற்சியை வெறுத்தேன்!

ஆகையினால் பள்ளிப் படிப்பில் என் தந்தை தீவிரமாக ஈடுபடுத்தினார். தனியாகவும் எனக்கு ஆசிரியர் அமைத்துப் பாடம் போதிக்கப்பட்டது. அந்த ஆசிரியருக்குக் காலையிலும், மாலையிலும் ஒரு சேர் (படி) பசும்பால்; இடையிடையே காய்கறிகள் வழங்கப்பட்டன.



* காலையிலும் மாலையிலும் ஒரு சேர் பசும்பால்...

அவர்தான் எங்கள் கிராமப் பள்ளிக் கூடத்தின் தலைமை ஆசிரியர். படிக்கும்போது கிராமத்திலே நடிக்கவும் ஆரம்பித்தேன்.

பள்ளியில் விடுமுறை என்றால் போதும்; எங்கள் வீட்டு மாட்டுத் தொழுவத்தை நாடக மேடையாக்குவேன். பத்து வயதுப் பருவம். அந்த நாடகங்களில் அர்ச்சுனன், கிருஷ்ணன் வேடங்கள் போட்டுக் கொள்வதிலே தணியாத ஆசை. ஏனென்றால் அவர்களைப் பற்றித்தான் அப்பா பெருமையாகக் கதைகள் சொல்வார். நீலப் பவுடரை அள்ளி உடம்பிலே பூசிக் கொண்டு நடிப்பேன். ஊர் மக்கள் பார்த்து ரசிப்பார்கள்.



* கிருஷ்ணன் வேஷம் போட்டுக் கொள்வதில் தணியாத ஆசை...

திருக்குவளைக் கோயிலிலே அடிக்கடி உற்சவம் நடக்கும். அந்தத் திருவிழா முடிந்த மறுநாளே, அதே போல, மாதிரித் திருவிழா எங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் ஆரம்பமாகும்.

மண்ணால் 'சாமி' செய்வேன்! ஒரு வெண்கல ரிஷப வாகனப் பொம்மை எங்கள் வீட்டில் இருந்தது. களிமண் சாமியை அந்தப் பொம்மையின் மேல் தூக்கி வைத்து, வாயினால் மேள வாத்யங்கள் முழங்க சாமி ஊர்வலம் நடத்துவோம்.

திருவாரூரில் படிக்கும்போது, கச்சணம் என்ற ஊரில்தான் பஸ்ஸில் இறங்குவேன். அங்கிருந்து நாலைந்து மைல் தூரம் நடந்து விடுமுறை நாட்களில் என் கிராமத்துக்குச் செல்வேன்.

* வாயினால் மேள வாத்தியங்கள் முழங்க சாமி ஊர்வலம்...



கச்சணம் ஊரில் உள்ள காப்பி ஓட்டலில் ஓரணாவுக்கோ, இரண்டணாவுக்கோ காரா பூந்தி வாங்கித் தின்று கொண்டே போனால் நடந்து செல்லும் சிரமம் தெரியாது.

சில சமயம் இரவு நேரங்களில் தனியே செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். நெஞ்சிலே 'திக் திக்' கென்று பயம் கிளம்பும். அப்போது, என் தகப்பனாரும், சரவண சாமியார் என்ற பெரியவரும் எனக்கு ஒரு மந்திரம் சொல்லிக் கொடுத்தார்கள்.

'சிவாய நம! ஓம் நமசிவாய!' இதை முணுமுணுத்துக் கொண்டே நடப்பேன். பேய் பிசாசுகள் வராதாம் அந்த மந்திரத்தைக் கேட்டால்! என் இளம் உள்ளத்திலே அந்த நம்பிக்கை வேரூன்றி இருந்தது! இப்போதுதான் அந்த நம்பிக்கையின் வேர் அறுந்து போய் விட்டதே!

எங்கள் ஊருக்கு ஒரு மைல் தொலைவில் உள்ள ஊர் காருகுடி. எங்கள் வீட்டுக்குத் தயிர் வாங்க இந்த ஊருக்குத்தான் வருவேன்.

அருகில் மரங்கள் அடர்ந்த இடம். ஒரு காலத்தில் இந்த இடத்தைக் கண்டு எப்படிப் பயப்படுவோம் தெரியுமா?

'பட்டாணி' என்ற துஷ்ட தேவதையின் கோயில் அதற்குள்ளே உள்ளது. அந்தத் தேவதை இரவு நேரத்தில் தன் படைகளோடு தீவட்டி ஊர்வலமாக வயல்வெளிகளில் போகுமாம்!

அந்தக் காட்சியை நேரில் பார்த்தது போலவே பலர் கூறுவார்கள்! அவர்கள் பார்த்த தீவட்டி வெளிச்சங்கள் என்னவோ உண்மைதான். ஆனால் வயல் வெடிப்புக்களில் தோன்றும் ஒருவிதமான கந்தக வாயுவிலிருந்து கிளம்பும் தீச் சுடர்களின் வரிசைதான் அந்த வெளிச்சங்கள்! அதனைத் தேவதையின் தீவட்டி ஊர்வலம் என்று நம்ப வைத்தார்கள். அந்தக் காலத்தில் நான் கூட அவர்

எங்கே, நேர் செய்யுங்கள்...




கருவி	விஞ்ஞானியும் வருடமும்
1. மின்சார பல்பு	அ. ஆர்வில் ரைட் - வில்பர் ரைட் (1903)
2. லேசர் கதிர்	ஆ. ஹேரான்ஸ் லிப்பர்ஸே (1908)
3. லிப்ட்	இ. அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் (1876)
4. எந்திர துப்பாக்கி	ஈ. ஏ.ஜே. கார்னெரின் (1797)
5. பாராசூட்	உ. எலிஸா ஜி. ஓடிஸ் (1852)
6. குண்டூசி	ஊ. தாமஸ் ஆல்வா எடிசன் (1876)
7. தொலைநோக்கி	எ. டேவிட் புஸ்னெல் (1776)
8. விமானம்	ஏ. ஜேம்ஸ் பெக்லே (1718)
9. நீர்மூழ்கி கப்பல்	ஐ. சார்லஸ் ஹெச். டௌன்ஸ் (1960)
10. தொலை பேசி	ஒ. வால்டர் ஹண்ட் (1849)




K. மணிமாறன்

விடைகள்:
① ஊ; ② ஐ; ③ உ; ④ ஏ; ⑤ ஈ; ⑥ ஒ; ⑦ ஆ; ⑧ அ; ⑨ எ; ⑩ இ



கள் சொன்னதை நம்பித்தான் நடுங்கிக் கொண்டிருந்தேன். 'நமசிவாய' மந்திரம் சொல்லிக் கொண்டே அந்தப் பகுதிகளைக் கடந்து செல்வேன்!

முனீஸ்வரன் கோயிலைக் கண்டும் அந்தக் காலத்தில் பயப்படுவோம். ஊருக்கு ஏதாவது கேடு வந்தால் — அம்மை, காலரா, நோய் பரவினால்— வீரப்ப வேளார் என்பவர் மீது அந்த முனீஸ்வரன் ஆவேசமாக ஆடி ஆடி



• என் இளம் உள்ளத்தில் அந்த நம்பிக்கை வேரூன்றி இருந்தது....

ஊருக்கு ஆறுதல் சொல்லும்!


எங்கள் தெருக் கோடியில் இருப்பது அங்காளம்மன் கோயில். சிறு வயதில் என் தலை அடிக்கடி மொட்டை அடிக்கப்பட்ட கோயில்களில் இது தலைசிறந்த கோயிலாகும். எங்கள் குடும்பத்துக் குறைகளையெல்லாம் இந்தக் கோயிலுக்கு வந்து அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்போம்.

இந்தக் கோயிலை அடுத்து இருந்ததுதான் என்னை ஆளாக்கி விட்ட அறிவுக் கோயில். ஆம்; நான் படித்த பள்ளிக் கூடம். கை விரல் தேயத் தேய ''அரி நமோத்து சிந்தம்'' என்ற எழுத்துக்களை மணலில் எழுதி எழுதிக் கல்வி பயின்ற இடம் அது.

எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமோ, வாட்டமோ, கவலையோ இல்லாமல் விளையாட்டிலே ஈடுபட்டிருந்த பச்சிளம் பருவம் அது. அந்தப் பருவம் மனிதனால் மற்றொரு முறை சந்திக்கக் கூடிய பருவமா?

ஆதாரம்: கலைஞர் அவர்களின்
'நெஞ்சுக்கு நீதி'

தொகுப்பு: புத்தனேரி சுப்பிரமணியம்.



ஆடி வரும் யானை

ஆடி ஆடி அசைந்துவரும்
யானை அதோ யானை! — அதை
ஓடி ஓடிப் பார்த்திடவே
ஊரில் பெருங் கூட்டம்!

கோயில் சாமி புறப்படுங்கால்
குலவி வரும் யானை — பின்
வாயில் வரை வந்திருந்து
வணங்கித் தொழும் தானே!

மலைக் குகையைப் போலவுள்ள
வாயை யானை திறந்து — பசும்
இலை தழையை வாரி வாரி
இனிது தின்னும் விரைந்து!


ஊசி யையும் துதிக்கையினால்
உடனே தேடி எடுக்கும் — அதை
வீசி வீசிப் பகைவர்களை
வீழ்த்தி உயிர் முடிக்கும்.

காட்டில் கூட்டம் கூட்டமாகக்
கண்ட படி அலையும் — நாம்
நாட்டில் அதைப் பழக்கியபின்
நம் மனம் போல வளையும்.

ஆற்றில் அது குளிக்கையிலே
அமைதி யுரு வாகும்! — போர்ச்
சீற்றம் வந்தால் ஊரைநாசம்
செய்து விட்டே போகும்

காட்டுத் தேக்கு, பெரியமரம்
கடிதில் உடன் பேர்க்கும் — அதை
நாட்டில் உடன் சேர்த்திடென்றால்
நாழியிலே சேர்க்கும்!

— புலவர். தமிழ்முடி.


GOKULAM
ENGLISH
MONTHLY
MALA

பணம் பற்றும் செய்யும்



சோமுவுக்கு என்னவோ கண்ணனைக் கண்டாலே பிடிக்கவில்லை. சோமுவும், கண்ணனும் ஏழாம் வகுப்புப் படித்து வந்தார்கள். கண்ணன் இந்த வருடம்தான் அந்தப் பள்ளியில் வந்து சேர்ந்திருந்தான். சோமு ஆரம்பத்திலிருந்தே அந்தப் பள்ளிதான்.

கண்ணன் பெரிய பணக்காரர் வீட்டுப் பிள்ளை. பணக்காரனாய் இருந்தாலும் மிகவும் நல்ல பிள்ளை. தன் சக மாணவர்களுக்குப் பெரிதும் உதவுவான். ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இன்றி, எல்லோருடனும் அன்பாகப் பழகி வந்தான். கண்ணனுக்குச் சோமுவுடன் பழக மிகவும் ஆசைதான். ஆனால் சோமுதான் அவனை விட்டு ஒதுங்கி ஒதுங்கிச் சென்றதுமல்லாமல் கடுமையாகப் பேசியும் வந்தான். ஒருவேளை, தான் ஏழை என்ற எண்ணத்தினால் வந்த தாழ்வுணர்ச்சியோ? அல்லது பொறாமையோ?

அன்று எப்படியும் சோமுவிடம் பேசியே விடுவது என்ற தீர்மானத்துடன் கண்ணன் சோமுவிடம் வந்தான். ''என்ன சோமு, என்ன பாடம் படிக்கிறாய்? செய்யுள் நன்றாகப் படித்துவிட்டாயா?'' என்று அன்பொழுக வினவினான்.

சோமுவோ 'வள்'ளென்று விழுந்தான். ''இதோ பார் கண்ணா! எனக்கு உன்னைக் கண்டாலே பிடிக்கலை. உன்னைப் பார்க்கவும், பேசவும் எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை. நீ ஏன் வலுவில் வந்து பேசுகிறாய்? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ,'' என்று எரிந்து விழுந்தான்.

இதைக் கேட்ட கண்ணனின் முகம் வாடி விட்டது. அவ்விடத்தை விட்டு அகன்றான். கண்ணனின் நண்பர்கள் அவன் முகவாட்டத்திற்குக் காரணம் கேட்கவும், கண்ணன் நடந்ததைக் கூறினான்:

''போயும் போயும் இதற்கா வருந்துகிறாய்? விட்டுத் தள்ளுவியா? அவன் உன்கிட்டே பேசா விட்டால் என்ன? நாங்க எல்லாம் உனக்கு இருக்கோம். அவன் ஏழையா இருக்கும்போதே இத்தனை திமிர். அதுதான் கடவுள் அளந்துதான் வெச்சிருக்கார்,'' என்று பலவாறு கூறித் தேற்றினர்.

சில நாட்களுக்குப் பின், அரையாண்டுத் தேர்வு வந்தது. பரீட்சை எழுத ஆரம்பிக்கும் போதுதான் சோமு, தான் பேனா கொண்டு வராததை உணர்ந்தான். என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தபோது ஆசிரியர் கேட்டார், ''என்னடா சோமு, என்ன விஷயம்?''

''சார், பேனா கொண்டு வர மறந்துட்டேன்,'' பயத்துடன் பதில் சொன்னான்.

உடனே கண்ணன் எழுந்து, ''சார், நான் இரண்டு பேனா கொண்டு வந்து இருக்கேன். ஒண்ணு தரேன் சார்,'' என்று கூறியபடி ஒரு பேனாவை ஆசிரியரிடம் கொடுத்

தான்.

"நல்லது சோமு, இந்தா. நாளை மறக்காமல் பேனா கொண்டு வா," என்று அவனிடம் கொடுத்தார்.

சோமுவுக்கு எரிச்சலாய் வந்தது. 'பெரீய்ய இவன்! போயும் போயும் இவன் பேனாதானா கிடைக்கணும்? எல்லாம் தலைவிதி,' என்று மனசுக்குள் நினைத்தாலும் ஆசிரியரிடம் மறுக்க முடியாமல் வெறுப்புடன் வாங்கி, எழுதிவிட்டு ஆசிரியரிடமே திருப்பிக் கொண்டு போய்க் கொடுத்தான்.

அவர், "நீயே போய்க் கண்ணனிடம் நன்றி சொல்லி விட்டு, கொடுத்து விடு," என்று கூறினார்.

வேறு வழியில்லாமல் கண்ணனிடம் சென்று, "இந்தா உன் பேனா! நன்றி கின்றி எல்லாம் எதிர்பார்க்காதே. இதே சாக்கில் பேசலாம்னு நினைக்காதே," என்று அடிக்குரலில் ரகசியமாக உறுமி விட்டுப் போய் விட்டான்.

சோமுவின் குணம் தெரிந்து, கண்ணன் அதைப் பெரிதுபடுத்த வில்லை.

சில நாட்கள் நகர்ந்தன. அன்று பள்ளியில் இன்ஸ்பெக்ஷன். ஆசிரியர் நாலைந்து நாட்கள் முன்னாடியே கூறி விட்டார், எல்லோருடைய உடைகளும் பளிச்சென்று இருக்கவேண்டுமென்று. பாடங்களையும் நன்றாகப் படித்து வரும்படியும் கூறியிருந்தார்.

சோமுவும் தன் தாயிடம் கண்டிப்பாகக் கூறியிருந்தான். "அம்மா! நாளைக்குச் சட்டை, டிராயர் இரண்டும் பளிச்சுனு இருக்கணும். இல்லாட்டி ஆசிரியர் பள்ளியை விட்டே துரத்திடுவார்," என்று.

தாயும் அவன் உடுப்பைப் பளிச்சென்று துவைத்து, மடித்து வைத்திருந்தாள். சோமுவும் நன்றாக உடை உடுத்திப் பள்ளிக்குச் சென்றான்.

ஆனால் அந்தோ! பள்ளிக்கு அருகில் இருக்கும் மாடி வீட்டு வேலைக்காரி, இவன் வரும்போது தானா பழைய சாம்பாரை மேலேயிருந்து கீழே கொட்ட வேண்டும்! 'சொளக்'கென்று இவன் சட்டை மேல் விழுந்து, வெள்ளைச் சட்டை பார்க்கச் சகிக்காமல் அசிங்கமாகி விட்டது.

சோமு 'ஓ'வென்று அழவே ஆரம்பித்து விட்டான். மணி அடிக்கும் நேரம் வேறு ஆகி விட்டது. மறுபடி வீட்டுக்குப் போய் வேறு சட்டை போட்டுக் கொண்டு திரும்பினால் ரொம்ப நேரம் ஆகிவிடும். வீட்டில் வேறு சட்டையும் இல்லை. என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தான்.

அப்போது கண்ணனும், மற்ற நண்பர்களும் பள்ளிக்கு வந்து கொண்டிருந்தார்கள். வழியில் தவித்தபடி நிற்கும் சோமுவைப் பார்த்து விட்டனர். கண்ணன் பதறிய



படி, சோமுவிடம் நண்பனை அனுப்பி விஷயத்தைக் கேட்க, சோமு அழுதபடி நடந்ததைக் கூற, இதைக் கேட்ட கண்ணன், புத்தகப் பையைத் தன் நண்பனிடம் கொடுத்து விட்டு, "நீங்க ஸ்கூலுக்குப் போங்க. இதோ நான் நொடியில் வரேன்," என்று கூறிவிட்டுத் தன் வீடு நோக்கிச் சைக்கிளில் விரைந்தான்.

வீட்டில் நுழைந்ததும், "அம்மா, என்னோட வெள்ளைச் சட்டை

ஒண்ணு வேணும். விவரமெல்லாம் மாலை சொல்கிறேன்,'' எனக் கூற, அவனது தாயும் மறுப்பேதும் கூறாமல் அவனது சட்டையை எடுத்துக் கொடுத்தாள்.

மறுபடி சைக்கிளில் விரைந்த கண்ணன், பள்ளிக்குள் நுழைந்தான். ஆனால் அதற்குள் மாணவர்கள் இறைவணக்கம் முடிந்து வகுப்புக்குள் நுழைந்து கொண்டிருந்தனர். இரைக்க இரைக்கச் சென்ற கண்ணன் வகுப்பாசிரியரிடம், தாமதத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, சட்டையை ஆசிரியரிடம்



கொடுத்தான்.

ஆசிரியர் ஏற்கெனவே மற்றப் பையன்கள் மூலம் விஷயத்தைக் கேள்விப்பட்டிருந்தமையால், சட்டையைச் சோமுவிடம் கொடுத்து விட்டு, கண்ணனை அன்போடு வகுப்புக்கு அழைத்துப் போனார். சோமு கண்ணனின் சட்டையை அணிந்து கொண்டான். ஏறக்குறைய சரியாகவே இருந்தது.

கல்வி அதிகாரி சிறிது நேரம் கழித்துப் பள்ளிக்கு வந்தார். ஒவ்வொரு வகுப்பாகச் சென்று பார்வையிட்டார். கேள்விகள் கேட்டார். பையன்களும் நன்றாகவே பதிலளித்தனர்.

அதிகாரிக்குப் பரம திருப்தி. அவர் தலைமையாசிரியரிடம் பள்ளி மாணவர்கள் தூய்மையாக உடை அணிந்திருந்ததாகவும் வகுப்புக்களும் சுத்தமாக இருந்ததாகவும் பாராட்டிச் சென்றார்.

மாலை இறைவணக்கத்தின் போது மாணவர்கள் கூடியிருக்க, தலைமையாசிரியர் கண்ணனை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். அவனால் இன்று பள்ளிக்கே நல்ல பெயர் கிடைத்தது என்று கூறி, கண்ணனை அருகே அழைத்துத் தட்டிக் கொடுத்தார். சோமுவையும் அழைத்து, நன்றி சொல்லச் சொன்னார்.

கண்ணனோ அவசரமாக மறுத்தான். ''நன்றி எல்லாம் வேண்டாம் ஐயா. ஏதோ என் வீடு பக்கத்தில இருந்தது. கொண்டு வர முடிந்தது,'' என்றான் பணிவாக.


ஆனால் தலைமை ஆசிரியரோ, ''இல்லை, இல்லை. வீடு பக்கத்தில் இருந்தாலும், பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணம் எத்தனை பேருக்கு இருக்கிறது? உன்னிடம் அந்த எண்ணம் நிறைய இருக்கிறது. நல்ல எண்ணங்களைப் பாராட்டியே தீர வேண்டும்,' என்றார்.

சோமு கண் கலங்க, கண்ணனிடம் வந்தான். ''கண்ணா, என்னை மன்னிச்சிடு. பணக்காரங்க எல்லாரும் கெட்டவங்க; பெருமை புடிச்சவங்கன்னு நான் தப்புக் கணக்குப் போட்டுட்டேன். இன்னிக்குத்தான் எனக்கு உன் அருமை புரிஞ்சுது,'' என்று கண் கலங்கினான். கண்ணன் சோமுவை இறுக அணைத்துக் கொண்டான்.

''சோமு, பணம் பத்தும் செய்யும்னு சொல்லுவாங்க. அது பற்றும் பாசமும் கூடச் செய்யும், தெரியுமா?'' என்றான்.

''பணக்காரங்க எல்லாருமே கெட்டவங்களும் இல்லே. ஏழைங்க எல்லாருமே நல்லவங்களும் இல்லை,'' சோமுவின் வாய் முணுமுணுத்தது.

பிருந்தாவனக்



மகத நாட்டிலே மகேந்திரன் என்று ஓர் அரசன் அரசாண்டு வந்தான். அவனுடைய மந்திரி நந்தபாலர் மிகவும் அறிவாளி.

அரண்மனையில் அரசனுக்குத் தொண்டு செய்ய ஒரு நாவிதன் இருந்தான். அவன் அரசனிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான். அரசன் அவனுடைய வார்த்தைகளுக்கு மிகவும் மதிப்புக் கொடுத்து வந்தான்.

நாவிதனுக்கு அமைச்சர் நந்தபாலரிடம் பொறாமை. காரணம் ஊர் மக்களெல்லாம் நந்தபாலரைப் பாராட்டிப் பேசியதுதான். நாவிதன் மந்திரியை எப்படியாவது ஒழித்துக் கட்ட எண்ணினான். இதற்காக அவன் நல்ல தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அரசனிடம் அவன் சொன்னான், ''அரசே தாங்களோ இங்கு மிகவும் சுகமாக வாழ்ந்து வருகிறீர்கள். ஆனால் உங்களுடைய மூதாதையர்கள் மேலுலகத்தில் எத்தகைய கஷ்டத்தை அனுபவிக்கிறார்களோ தெரியவில்லை. ஆகையால் அவர்களுடைய உண்மை நிலை அறிய நம் அமைச்சரை மேலுலகத்திற்கு அனுப்பினால் நல்லது,'' என்றான்.

இதைக் கேட்ட அரசன், நாவிதனிடமே அதற்கான மார்க்கம் கூறக் கேட்டான். அவனது கூற்றுப்படி அமைச்சரை மேலுலகம் அனுப்பத் தயாரானான்.

அவன் நகரத்திற்கு வெளியில் ஒரு குழி வெட்டச் செய்தான். அதில் அமைச்சரைப் புதைக்கச் சொன்னான். காவலாளர்களும் அரசன் கட்டளைப்படி செய்தார்கள்.

நாவிதனின் சூழ்ச்சியை முன்கூட்டியே தெரிந்து கொண்டிருந்த அமைச்சர், அந்தக் குழியிலிருந்து ஒரு சுரங்கப்பாதை வெட்டச் செய்தார். அதிலிருந்து அவர் தப்பி வெளியேறிவிட்டார்.

பிறகு பொறுமையுடன் மூன்று மாதங்கள் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்திருந்தார். இதற்குள் அவருக்குத் தாடியும், மீசையும் வளர்ந்துவிட்டது. அதே கோலத்துடன் அவர் அரசனைப் பார்க்க வந்தார்.

அரசன் கேட்டான். ''மேலுலகத்தில் என் மூதாதையர்கள் நலமாக இருக்கிறார்களா?''

அமைச்சர் கூறினார். ''அரசே! அவர்கள் எல்லோரும் நலமுடன் இருக்கிறார்கள். ஆனால் அங்கு நாவிதன் இல்லாததால் அவர்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள். இதோ பாருங்கள், எனக்குத் தாடி வளர்ந்ததற்குக் காரணம் அங்கு நாவிதன் அகப்படாததுதான்.''


இதைக் கேட்ட அரசன், அமைச்

கதையரங்கம்

சரை அனுப்பியது போல் நாவிதனை யும் குழியில் புதைத்து மேலுலகம் அனுப்பக் கட்டளையிட்டான்

நாவிதன் தன் தவற்றை உணர்ந் தான். தான் செய்த சூழ்ச்சியைச் சொல்லி மன்னிப்புக் கோரினான். மன்னன் அவனுக்குச் சிறைத் தண் டனை அளித்து, அவனை நாட்டை விட்டு வெளியேறச் சொன்னான்.

— ஆர். மணிகண்டன், ஆதம்பாக் கம்.



அன்னமலைக் காட்டில் சில மிருகங்களும், பறவைகளும் வாழ்ந்து வந்தன. திடீரென்று அவற்றுக்குள் சண்டை வந்தது. பறவைகள் மிருகங் களிடம் தோற்று விட்டன.

அப்போது பறவைகளுடன் இருந்து வந்த வெளவால் மட்டும் மிருகங்களிடம் வந்து, "என்னை உங் களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள், நானும் உங்களைப் போல் குட்டி போட்டுப் பாலூட்டும் பழக்கம் உடையவன்தானே? நானும் உங்கள் இனம்," என்று வேண்டியது.

மிருகங்களும் சரி என்று சேர்த் துக் கொண்டன. கொஞ்ச காலம் ஆயிற்று. மறுபடியும் திடீர் என்று இரண்டு இனத்துக்கும் சண்டை வந்தது. இந்தத் தடவை பறவைகளி டம் மிருகங்கள் தோற்று விட்டன.

வெளவால் பார்த்தது. 'ஜெயித்த வர்களுடன் இருப்பதுதானே நல் லது? தோற்றுப் போன மிருகங்களி டம் இருப்பதை விட வெற்றி பெற்ற பறவையிடம் இனி நாம் சேர்ந்து கொள்ளலாம்,' என்று நினைத்துப் பறவைகளிடம் சென்று, "நானும் உங்களைப் போல் பறவையினம். இதோ பறந்து திரிகிறேன், பாருங் கள். என்னை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்," என்று கூறியது.

அதற்குப் பறவைகள், "உன்னைப் போல் ஒரு நம்பிக்கைத் துரோகி எங் களுடன் இருக்க வேண்டாம்," என்று கூறி விரட்டி விட்டது.

வேறு வழியின்றி வெளவால் மறு படியும் மிருகங்களிடம் வந்தது. இப் போது மிருகங்களும் அதைச் சேர்க்க மறுத்து விட்டன.


மனிதர்கள் வசிக்கும் வீட்டில் வந்து தஞ்சம் புகுந்தது. அதன் புத்தி தெரிந்து மனிதர்களும் அதை விரட்டி யடித்து விட்டார்கள்.

கடைசியில் இடிந்த பாழடைந்த கட்டிடங்களில், கோவில்களில், குகையிருட்டுப் பகுதிகளில் தன் இருப்பிடத்தை உண்டு பண்ணிக் கொண்டு தலைமறைவாய் வாழ்கி றது.

நல்லதோ கெட்டதோ எதுவாக இருப்பினும் ஒரே இடத்தில் இல்லாத

காரணத்தால் இப்படிக் கெட்டு அலைய வேண்டிய நிலைக்கு ஆளாக நேரும் என்பதை வௌவால் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிற தாம்!

— கே. வேல்முருகன் (22,822),
திருக்கோவிலூர்.



சுபாலி என்ற ஒரு மாணவன் ஒரு நேர்முக வாய்மொழித் தேர்வில் பங்கு கொள்ளச் சென்றான். தேர்வில் கேள்வி கேட்க இருக்கும் ஆசிரியர், மிகுந்த இரக்க குணம் உள்ளவர் எனக் கேள்விப்பட்டிருந்தான் அவன். அதனால் அவன் ஒரு சூழ்ச்சி செய்யத் திட்டமிட்டான்.

அவனது முறை வந்த போது அவன் ஆசிரியர் கேட்கும் எந்தக் கேள்விக்கும் பதில் கூறாமல் செவிடு போல் அமர்ந்திருந்தான். தான் செவிடு என நினைத்து ஆசிரியர் தனக்குத் தேர்வு நடத்தாமலே பாஸ் போட்டு விடுவார் என்பது அவனது திட்டம்.

ஆசிரியர் அவனை நோக்கி, "உன் நிலை கண்டு நான் இரக்கப்படுகிறேன். நீ செல்லலாம்," என மெதுவாகக் கூறினார்.

உடனே சுபாலி தன் திட்டம் வெற்றி பெற்றதென நினைத்து மகிழ்ச்சியுடன் வெளியேற எத்தனித்தான்.

அப்போது ஆசிரியர், "நீ உண்மையில் செவிடு அல்ல. அவ்வாறிருந்தால் நீ வெளியேறி இருக்க மாட்டாய். ஏனெனில் நான் கூறியது உனக்குக் கேட்டிருக்காது," எனக் கூறினாரே பார்க்கலாம்.

அப்போதுதான் சுபாலி, ஆசிரியர் இரக்க குணம் உள்ளவர், ஆனால் ஏமாளி அல்ல என்பதைப் புரிந்து கொண்டு அவரிடம் மன்னிப்புக் கோரி, நேர்முக வாய்மொழித் தேர்வில் பங்கு கொள்ளத் தன்னை ஆட்படுத்திக் கொண்டான்.

— கு.ம. மணிகண்டன் (15,308),
தேவகோட்டை.




சீடன் ஒருவன் தன் குருவைக் கண்டு வணங்குவதற்காகக் காணிக் கைப் பொருளுடன் சென்று கொண் டிருந்தான்.

அந்தக் குருவின் மீது ஏற்கெனவே பொறாமை கொண்டிருந்த யோகி ஒருவர், அந்தச் சீடனை வழிமறித் தார். அவனைப் பார்த்து, ''உன் குரு விற்கு எதுவுமே தெரியாது.. அவர் ஒரு முட்டாள். நீ அவரை விடப் பெரிய முட்டாள். அதனால்தான் நீ அவரைக் குருவாக ஏற்றுக் கொண் டுள்ளாய். உன் குருவால் ஏதேனும் அற்புதம் செய்து காட்ட முடியுமா? என்னைப் போல் அவரால் நீரில் நடக்க முடியுமா? வான்த்தில் பறக்க முடியுமா? அல்லது பூமியில்தான் புதைந்து கிடக்க முடியுமா? அவரால் எதுவுமே முடியாது. அப்படிப்பட்ட குருவிடம் சென்று ஏன் உன் நேரத்தை வீணாக்குகிறாய்?'' என்று தற்பெரு மையுடன் கேட்டார்.

அதற்கு அந்தச் சீடன், ''நான் ஏன் அவரைக் குருவாகக் கொண்டிருக் கிறேன், மதிக்கிறேன், வணங்கு கிறேன் தெரியுமா? அவர் எப்பொழு தும் பிறரைக் குறை சொல்ல மாட் டார், கோபப்பட மாட்டார். இவற் றைத்தான் நான் அற்புதங்களில் எல்லாம் மிகச் சிறந்த அற்புதம் என்று நினைக்கிறேன்,'' என் றான்

இதைக் கேட்ட யோகி, தலை கவிழ்ந்தபடி அவ்விடத்தை விட்டுச் சென்றார்.



ராஜு எப்போதும் ஏழைப் பையன்களுடனும், தாழ்ந்த இனத்தவ ருடனும்தான் விளையாடுவான். அத னால் அவனுடைய அம்மா அவனை திட்டிக் கொண்டிருந்தார்கள். அடித் தும் கூடப் பார்த்தாள்.

அவன் மசியவில்லை. ''சாதி, குல வேற்றுமைகள் எல்லாம் கிடையாது. எல்லாம் உங்கள் நினைப்புத்தான்,'' என்பான்.

''எனக்கே புத்தி சொல்கிறாயா?'' என்று திரும்ப அடிப்பாள் தாய்.

எந்தக் கொடுமைக்கும் ராஜு தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. ஏழைகளிடம் அன்புடனும், பண்புட னும் நடந்து கொண்டான். 'இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிள்ளையா?' என்று பார்த்தவர்கள் வியந்தார்கள்.

ஒரு நாள் அவன் பள்ளி சென்ற பொழுது, ஒரு கார் அவன் மீது மோதி அவன் பலத்த காயத்து டன் கீழே விழுந்தான்.

அப்பொழுது அவன் தினந்தோறும் அன்னமிடுவானே ஓர் ஏழைக்கு, அவன்தான் அங்கு இருந்தான். அவன் ராஜுவை ஒரு ரிக்‌ஷாவில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனையில் சேர்த்து விட்டு ராஜுவின் தாய் தந்தையரிடம் சொல்ல விரைந்தான்.

இப்பொழுது அவர்கள் ஆஸ்பத் திரியில் நின்று கொண்டிருந்தார்கள்.

டாக்டர் வந்து அவர்களிடம் சொன்னார்: ''உரிய நேரத்தில் சேர்க் காதிருந்தால் இந் நேரம் உங்கள்


(தன் உறுப்பினர் எண் 19,299 என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிறார் இந்தத் தம்பி. தயவு செய்து பெயர், முழு முகவரியுடன் எழுதுங்கள். அப்போது தான் உரிய அன்பளிப்பு உங்களை வந்தடையும். — ஆசிரியர்.)

பிள்ளை இறந்திருப்பான்," என்றார்.

அப்பொழுது ராஜுவைப் பெற்ற தாயின் கண்கள் அந்த ஏழையைத் தேடின. அந்த ஏழை எப்போழுதோ சென்று விட்டான். அந்தத் தாயின் பாராட்டையோ, பணத்தையோ எதிர்பார்க்காமலே.

'இப்பொழுது சாதி, குலம், ஏழை, பணக்காரன் எல்லாம் நினைப்புத் தானே ஒழிய, உண்மை அல்ல,' என்று ராஜு சொன்ன வார்த்தைகள் அந்தத் தாயின் செவிகளில் ஒலிக்க, கண் கலங்குகிறாள்.

— மு. ஜெய்சங்கர் (16,966),
மன்னார்குடி.



மாரியப்பனுக்கு மண்டையெல்லாம் மூளை. மூளை எல்லாம் அறிவு. அறிவெல்லாம் சிந்தனை. சிந்தனையெல்லாம் வஞ்சனை.

ஏமாளிகளும், கோமாளிகளும் இருக்கும் வரை தனக்கு வெற்றிதான் என்று எண்ணினான் மாரியப்பன்.

அதற்குப் பகுத்தறிவற்ற கிளியைத் துணைக்குப் பயன்படுத்தினான். அந்தக் கிளிக்கு, 'அதற்குச் சந்தேகம் இல்லை,' என்ற வாக்கியத்தை மற்றவர்கள் சந்தேகப்படாதவண்ணம்—சொல்லிக் கொடுத்தான்.

அக்கிளியும் அப்படியே சொல்லி வந்தது.

மாரியப்பன் தன் திட்டத்தைச் செயல் படுத்தத் தொடங்கினான். எப்படி?

பணக் குவியலை ஓரிடத்தில் ரகசியமாய்ப் புதைத்து வைப்பான். பிறகு மக்கள் கூடியிருக்கும்போது அந்தக் கிளியைப் பார்த்து, 'இந்த இடத்தில் புதையல் உள்ளதா?' என்பான்.

அதற்கு அந்தக் கிளி அவன் சொல்லிக்கொடுத்தபடியே, 'அதற்குச் சந்தேகமில்லை' என்று பதில் சொல்லும்.

மாரியப்பன் தோண்டுவான். புதையல் எடுப்பான். பார்ப்பவர்கள் அதிசயித்துப் போவார்கள். இப்படியே ஐந்தாறு முறை புதையல் எடுத்துக் காட்டிவிட்டான்.

அதைப்பற்றிக் கேள்விப்பட்ட பணக்கார முட்டாள் கோவிந்தன், 'என்ன விலையானாலும் சரி அந்தக் கிளியை வாங்கிவிட வேண்டும்' என எண்ணி, மாரியப்பனோடு பேசி, இரண்டாயிரம் வராகனுக்கு அந்தக் கிளியை வாங்கிச் சென்றான்.

அந்தக் கிளியோடு கொஞ்சலானான். பால், பழ வகைகளைக் கொடுத்து மகிழ்ந்தான்.

"எனதருமைப் பச்சைக் கிளியே! இவ்விடத்தில் புதையல் உண்டா?" என ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினான் கோவிந்தன்.

"அதற்குச் சந்தேகமில்லை," என்று கிளி மொழிந்தது.


அவ்விடத்தைத் தோண்டினான். ஒன்றுமே கிடைக்கவில்லை.

மற்றோர் இடத்தைக் காட்டிக் கேட்டான். அதற்கும் அதே பதில். ஒன்றும் கிடைக்கவில்லை. தோல்விக்கு மேல் தோல்வி. கடைசியில் கிளியைப் பார்த்து 'ஓ கிளியே! என் வாயில் மண்ணைப் போட்டாயா?" என்றான்.

அதற்கு அந்தக் கிளி வழக்கம் போல, 'அதற்குச் சந்தேகமில்லை' என்றே சொல்லிற்று.

— எம். சங்கரி (20,389).

மஞ்சள்காமாலை



இவள் பெயர் சீதா. எதிர்வீட்டில் வசிக்கிறாள், எட்டாம் வகுப்பில் தேர்வுபெற்று, ஒன்பதாம் வகுப்பிற்குச்செல்ல இருக்கிறாள். நல்லபெண்.

இந்தக் கோடை விடுமுறையில் தேனிக்கு அருகிலுள்ள சின்னமனூருக்குச் சென்றிருந்தாள் சீதா. அங்கு அவள் அத்தை இருக்கிறாள். விடுமுறை முடிந்து இன்று காலையில் தான் ஊருக்குத் திரும்பி இருந்தாள். என்ன அவசரமோ தெரியவில்லை, வந்ததும், வராத்துமாக என்னைச் சந்திக்க வந்துவிட்டாள்.

சீதா: வணக்கம், டாக்டர்!

நான்: வா, சீதா. உட்கார். விடுமுறை எப்படிப் போயிற்று?

சீதா: நாட்கள் போனதே தெரியவில்லை டாக்டர்! இந்த விடுமுறையில் நான் பல இடங்களுக்குச் சென்று வந்தேன்.

நான்: வெரி குட், சீதா! இந்த விடுமுறையில் பல புது அனுபவங்கள் கிடைத்திருக்குமே....!

சீதா: ஆமாம், டாக்டர்! புது அனுபவம் மட்டுமல்ல, இனிய அனுபவமாகவும் இருந்தது. அதே சமயம் சோகமான அனுபவமும் இவ்விடுமுறையில் எனக்குக் கிடைத்தது, டாக்டர்.

நான்: என்ன சொல்கிறாய், சீதா?

சீதா: நான் சென்றிருந்த சமயம் சின்னமனூரில் மஞ்சள் காமாலை நோய் அதிகமாகப் பரவியிருந்தது, டாக்டர். விடு தவறாமல் மஞ்சள் காமாலையால் மக்கள் அவதிப்பட்டார்கள். என் அத்தை பெண் கீதாவுக்கும் மஞ்சள் காமாலை வந்திருந்தது. அதனால் அவளோடு சிரித்துப் பேசி, விளையாட முடியவில்லையே என்ற வருத்தம்தான் டாக்டர் எனக்கு.

நான்: உனக்கு மஞ்சள் காமாலையைப் பற்றித் தெரியுமா, சீதா?

சீதா: தெரியாது டாக்டர். அந்நோயைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகத்தான் இத்தனை அவசரமாக உங்களைப் பார்க்க வந்தேன், டாக்டர்.

நான்: சரி, சீதா. உனக்குக் காமாலையைப் பற்றி விவரமாகச் சொல்கிறேன், கேள். முதலில் நீ நினைக்கிற மாதிரி மஞ்சள் காமாலை என்பது ஒரு நோயல்ல; ஒரு நோயின் அறிகுறி மட்டுமே. நம் வயிற்றில் உள்ள பித்தநீரில் 'பிலிருபின்' **(Bilirubin)** என்ற உப்பு இருக்கிறது. இது சில காரணங்களால் நம் இரத்தத்தில் அதிக அளவில் கலந்துவிடும். அப்போது கண், நாக்கு, உள்ளங்கை, ஆகியவை மஞ்சள் நிறத்தில் தெரியும். இதைத்தான் 'மஞ்சள் காமாலை' என்கிறார்கள். ஆங்கிலத்தில் **Jaundice** என்று அழைக்கிறார்கள். இந்த மஞ்சள் காமாலை என்ற அறிகுறி

பல நோய்களில் வருகிறது...

சீதா: அதைப் பற்றியும் எனக்குச் சொல்லுங்கள், டாக்டர்.

நான்: பாக்டீரியா, வைரஸ்போன்ற கிருமிகள் கல்லீரலைத் தாக்கும் போது மஞ்சள் காமாலை வரும். பித்தநீர் செல்லும் பாதையில் அடைப்பு ஏற்பட்டாலும் மஞ்சள் காமாலை வரும். வேறு பல காரணங்களினால் இரத்த அணுக்கள் சேதமடையும் போதும் மஞ்சள் காமாலை வரலாம். இம்மூன்றில் முதலில் சொன்ன கல்லீரல் தாக்குதலினால் தான் மஞ்சள் காமாலை அதிகம் பேருக்கு வரும். அதிக அளவிலும் பரவும். முக்கியமாக உன்னை மாதிரிச் சிறுமிகளையும் சிறுவர்களையும் பாதிக்கக்கூடியது இந்த முதல்வகைக் காமாலைதான்!

சீதா: அப்படியென்றால் அவ்வகைக் காமாலையைப் பற்றி நான் தெரிந்து கொள்கிறேனே, டாக்டர்.

நான்: நல்லது, சீதா. 'ஹெபடைட்டிஸ்-ஏ-வைரஸ்' (Hepatitis-A-Virus) என்ற ஒருவகை வைரஸ் கிருமிகள் கல்லீரலைத் தாக்கும்போது, கல்லீரல் வீக்கம் அடைந்து, செயலிழந்து, காமாலையை உண்டாக்கும். இதற்கு 'வைரஸ் ஹெபடைட்டிஸ்' (Viral Hepatitis) என்று தனிப்பட்ட பெயரே உண்டு.

சீதா: ஏன் டாக்டர், இந்த வைரஸ் கிருமிகள் எங்கிருந்து வந்தன? எப்படி நம் உடம்புக்குள் நுழைந்தன?

நான்: சீதா, அசுத்தமான இடங்களிலும் சுகாதாரமற்ற சூழ்நிலைகளிலும் இவ்வைரஸ் கிருமிகள் காணப்படும். குறிப்பாக, சாக்கடைத் தண்ணீரில் அதிகமாக இருக்கும். அஜாக்கிரதை காரணமாகச் சாக்கடை நீர் கலந்துவிடும்போது குடிநீருடன் இந்நோய்க் கிருமிகள் வேகமாகப் பரவும். அசுத்தமான நீரைக் குடிப்பதன் மூலமும், சுத்தமில்லாமல் தயாரிக்கும் உணவின் மூலமும் இக்கிருமிகள் நம் உடம்பிற்குள் நுழைந்து விடும். பின்பு இவை கல்லீரலைத் தாக்கிக் காமாலையை உண்டுபண்ணும்.

சீதா: இந்த வகைக் காமாலையை எப்படி டாக்டர் நாங்கள் தெரிந்து கொள்வது?

நான்: இதற்கென்று சில அறிகுறிகள் இருக்கின்றன. அதைப் பற்றியும் உனக்குச் சொல்கிறேன், கேள் சீதா. இந்நோயின் ஆரம்பத்தில் மூன்று நாட்களுக்குக் காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு ஆகியவை இருக்கும். நான்காம் நாள் வாந்தி வரும். அடுத்தடுத்த நாட்களில் உடல் சோர்வும் வாந்தியும் அதிகமாகும். அரைத்த மஞ்சள் நிறத்தில் சிறுநீர் செல்லும். கண் மஞ்சளாகக் காணப்படும். வயிற்றில் வலி இருக்கும். இம்மாதிரியான அறிகுறிகளை வைத்து



மஞ்சள் காமாலையை அறிந்து கொள்ளலாம். பொதுவாக, இவ்வகை மஞ்சள் காமாலையால் அதிக ஆபத்து இல்லை. இது தானாகவே மறைந்து விடக்கூடிய நோய். இரண்டிலிருந்து மூன்று வாரங்கள் வரைக்கும் தான் காமாலை இருக்கும். அதன் பின்பு வைரஸ் கிருமிகள் நோயாளியின் மலம் வழியாக வெளியேறி விடுவதால் நோயின் தீவிரம் குறைந்து, காமாலை முற்றிலும் குணமாகி விடும். எனவே இவ்வகைக் காமாலையைக் கண்டு நாம் பயப்படத் தேவையில்லை.

சீதா: ஏன் டாக்டர், மஞ்சள் காமாலைக்கு உங்கள் அல்லோபதி மருந்துவத்தில் மருந்துகள் கிடையாது என்று

என் அத்தை சொன்னார்கள். அது உண்மையா, டாக்டர்?

நான்: நாம் இது வரை பேசிக் கொண்ட 'வைரஸ் ஹெபடைட்டிஸ்' வகை மஞ்சள் காமாலைக்கு அல்லோபதியில் மருத்துவம் இல்லை என்பது ஒருபுறம் உண்மையென்றாலும், அதற்கு மருந்துகளோ, மாத்திரைகளோ தேவையில்லை என்பது தான் முற்றிலும் உண்மை. ஏனென்றால், இந்த வைரஸ் நோய்கள் எவ்வித மருந்துகளுக்கும் கட்டுப்படாதவை. அதே சமயம் தானாகவே



குணமாகக் கூடியவை. எனவேதான் மஞ்சள் காமாலை போன்ற வைரஸ் நோய்களுக்கு மருத்துவம் தேவையில்லை என்று சொல்கிறார்கள்.

சீதா: சரி டாக்டர், மஞ்சள் காமாலை வந்தவர்கள் என்ன செய்ய வேண்டும்?

நான்: ஒருவருக்கு மஞ்சள் காமாலை என்று சந்தேகம் வந்தால் உடனே மருத்துவரிடம் காண்பித்து அது எந்தவகை நோயினால் வந்தது என்று தெரிந்து கொண்டு மருத்துவம் பார்க்க வேண்டும். வைரஸ் காரணமாகக் காமாலை வந்திருந்தால், சுமார் நான்கு வாரகாலம் முழுமையாக ஓய்வெடுக்க வேண்டும். அதிகமாக நீர் ஆகாரங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இளநீர், குளுகோஸ், அரிசிக் கஞ்சி, கரும்புச் சாறு, தக்காளி, ஆப்பிள், ஆரஞ்சுப் பழச் சாறுகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். காமாலை உள்ளவர்கள் சுமார் ஒரு மாத காலத்திற்கு நெய், வெண்ணெய், எண்ணெய் போன்ற கொழுப்புப் பதார்த்தங்களை அறவே தவிர்க்க வேண்டும். குடிதண்ணீரைக் காய்ச்சி ஆற வைத்த பின்னரே சாப்பிட வேண்டும். காமாலை முழுமையாக நீங்கும் வரை மருத்துவர் ஆலோசனையின் பேரில் ஓய்வும், மேற்சொன்ன உணவு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

சீதா: நல்லது டாக்டர். இந்த மஞ்சள் காமாலையை வரவிடாமல் தவிர்க்க வழிமுறைகள் இருக்கிறதா? இருந்தால் அதைப்பற்றியும் எனக்குச் சொல்லுங்களேன்!

நான்: மஞ்சள் காமாலை பரவும் சமயங்களில் குடிதண்ணீரைக் கொதிக்கவைத்து ஆறவைத்துச் சாப்பிட்டாலே மஞ்சள் காமாலையை எளிதில் தவிர்த்துவிடலாம். அதே சமயம் நாம் சாப்பிடும் உணவுப் பொருட்களும் சுத்தமாக இருக்க வேண்டும். காய்கறிகளை நன்கு சூடாக்கிச் சமைக்க வேண்டும். சிறுவர், சிறுமிகள் ஈக்கள் மொய்த்த இனிப்புப்பண்டங்களைக்கடைகளில் வாங்கிச் சாப்பிடக்கூடாது. இது தவிர நம் வீட்டையும் பொது இடங்களையும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். இதில் குறிப்பாக, பொது இடங்களில் மல ஜலம் கழிப்பதைத் தவிர்த்து, கழிப்பறைகளில் கழிக்க வேண்டும். வீட்டைச் சுற்றிச் சாக்கடைத் தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும். சாக்கடை நீர் குடிநீருடன் கலந்து விடுவதைச் சுகாதாரப் பணியாளர்கள் தவிர்க்க வேண்டும். இதுபோன்ற தவிர்ப்பு முறைகள் மூலம் மஞ்சள் காமாலையை நம்மால் எளிதில் தவிர்க்க இயலும்.

சீதா: மிக்க மகிழ்ச்சி டாக்டர். உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. வருகிறேன், டாக்டர்.

நான்: குட்பை, சீதா!



மதம் பிடிக்காத யானை

"இவன் பெயர் ரமணன். குஜராத் தமிழன்," என்று என்னை அறிமுகப்படுத்தினான் பிரபு.

"என்னது, பர்மாத் தமிழன், இலங்கைத் தமிழன், மொரிஷியஸ் தமிழன்ங்கற மாதிரி குஜராத் தமிழனா? அப்படின்னா..." என்று நிஜமாகவே புரியாமல் அந்தத் தலைமையாசிரியர் கேட்டார்.

"இவன் பெற்றோர் தமிழ் நாட்டுக் காரங்க. இந்த ரமணன் பிறந்தது, வளர்ந்தது, வாழ்றது எல்லாமே பரோடாவிலே," என்று விளக்கம் சொன்னார் இன்ஜீனியரிங் மாணவர் ராமு — பிரபுவின் அண்ணன்.

என் பெற்றோருக்குச் சொந்த ஊர் ராயவரம். இரண்டு பேரும் தங்கள் பிறந்த ஊரைப் பற்றி வாய்க்கு வாய் பெருமை பேசிக் கொள்வார்கள். அதைக் கேட்கும்போதெல்லாம் நாமும் அந்த ஊரைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆசை, ஏக்கமாகவே வளர்ந்து விட்டது.

இந்தக் கோடை விடுமுறையில் தான் அப்பா அம்மாவுக்கும் லீவு கிடைத்து, சொந்த ஊரிலும் ஏதோ கல்யாண விசேஷம் வந்து, என்னைச் சொந்த ஊருக்குக் கூட்டி வந்தார்கள்.

பிரபுவுக்கு என் வயதுதான். ராமு கல்லூரி மாணவர். இருவரும் எனக்கு அண்ணா — தம்பி உறவாம். ஊரைச் சுற்றிக் காட்டுவதாய் இந்தக் கடியாபட்டிக்கு அழைத்து வந்தார்கள்.

தலைமையாசிரியர் ஓர் அதிசயப் பிராணியைப் பார்ப்பது போலவே என்னைப் பார்த்தார்.

"இதுவரைக்கும் தமிழ்நாட்டுக்கே நீ வந்ததில்லையா?" அவர் கேட்டார்.

'இல்லை' என்று தலையாட்டினேன்.

பொன் ராசன்

''உனக்குத் தமிழ் பேச வருமா?'' அவர் கேட்டார்.

''உம்,'' என்றேன் ஒற்றைச் சொல்லில்.

''பரோடா ஸ்கூல்களிலே என்ன 'என்ன மொழிகள் கத்துத் தர்றாக?'' என்று கேட்டார் நேராக என்னையே பார்த்து.

''குஜராத்தி, இந்தி, இங்கிலீஷ், இந்த மூணும் சொல்லித் தர்றாங்க,'' என்றேன்.


''பின்னே, தமிழ் எப்படித் தெரியும் உனக்கு?'' அவர் விடவில்லை.

எனக்குக் கூச்சம் தெளிந்து விட்டது. ''நாட்டு மொழி குஜராத்தியானாலும் வீட்டிலே அம்மா அப்பா தமிழ்தான் பேசுவாங்க. அத்தோடு எனக்கு விவரம் தெரிஞ்ச நாளிலிருந்தே என் அம்மா, தமிழ் படிக்க, எழுதச் சொல்லித் தந்திட்டு வர்றாங்க.''

''ஓ குட், குட்,'' என்று சொல்லிவிட்டு, ''இப்போ, தாய்த் தமிழ் நாட்டைப் பார்க்கறதுக்குன்னே வந்திருக்கே இல்லே?'' என்று கேட்டார்.

''ஒரு கல்யாணத்துக்கு வந்தோம்.





அப்படியே ஊரையெல்லாம் பார்க்க ணும்.''

கடிகாரத்தைப் பார்த்தார் தலைமையாசிரியர். மதியம் முதல் பாட வேளை முடியப் போகும் நேரம் போலும்.

''உங்களைப் பார்த்ததிலே ரொம்ப ரொம்பச் சந்தோஷம். ராமு, முடியுமான மட்டும் எல்லாத்தையும் இந்தத் தம்பிகளுக்குக் காட்டி விளக்கம் சொல்லு,'' என்று சொல்லிக் கொண்டே தாம் பாடம் நடத்த வேண்டிய வகுப்புக்குச் சென்று விட்டார்.

பள்ளியை ஒரு ரவுண்ட் சுற்றிப் பார்த்து விட்டு வெளியே வந்தோம்.

பள்ளியை விட்டு வெளியே வந்த போதே எங்களை வரவேற்க ஒரு பெரிய அம்மா காத்திருந்தார்கள்.

''மீனியாச்சி,'' என்று ராமு அறிமுகப்படுத்தினார்.

வற்புறுத்தி எங்களை அவர்கள் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார் அந்த அம்மா.

பொதுவாக எந்த நேரமும் விருந்தினர்களுக்காக, எப்போதுமே டிபன் தயாராக வைத்திருப்பார்கள் போலும்.

சுவையான பிஸ்கட், கொஞ்சம் வறுத்த கடலைப் பருப்பு பரிமாறப் பெற்றன.

வழக்கப்படியான விசாரிப்புக்கள் முடிந்த பின்பு, ''என்ன புதிய தம்பி, இந்த வட்டாரம் உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டார்.

''ரொம்ம்ம்ப,'' என்றேன். ''நிஜமாவே இந்தப் பகுதியிலே எதைப் பார்த்தாலும் புதுசாவும், புதுமையாகவும் இருக்குங்க,'' என்றேன்.

''என்ன அப்படி புதுமையா உங்களுக்குத் தோணுது?'' என்றார் அந்த அம்மாள்.

''உங்க பழக்க வழக்கங்களிலே நிறைஞ்ச பண்பாடு தெரியுது. இந்தப் பக்கத்து வீடுகளிலே பெரும் பகுதி அரண்மனைகள் போல இருக்கு. அப்புறம்....'' என்று நான் சொல்லத் தொடங்கவும், ராமு குறுக்கிட்டார்.

''நேரமாச்சு, நாலரைக் காருக்குப் புறப்பட வேணாமா?'' என்று அவசரப்படுத்தினார்.

அந்த அம்மாள் முகத்திலே ஒரு பரபரப்பு. ''இப்பவே ராயவரம் போகணுமா? நாளைக்குப் போகலாமே தம்பி'' என்றார் கொஞ்சம் கவலையோடு

''இல்லே ஆயா, சாயந்தரமே வீட்டுக்கு வந்திடறதா சொல்லிட்டு வந்திருக்கறோம். எதிர்பார்த்திட்டிருப்பாங்க,'' என்றான் பிரபு.

''புதுக்கோட்டைக்கு வந்திருக்கற சர்க்கசிலேயிருந்து நேத்து ராத்திரி ஒரு யானை வெகுண்டு ஓடிடுச்சாம். அது ராயவரம் காட்டுப் பக்கம் வந்திருக்குன்னு ஊரிலே சொல்லிக்கிறாங்க,'' என்று அந்த அம்மா கலங்கினார்.


''நாங்கள்ளாம் கார்லேதானே போறோம்... யானை வராது. வந்தாலும் எங்களை ஒண்ணும் பண்ணிடாது,'' என்று ராமு சமாதானப் படுத்திய பின், நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம்.

என் மனத்துக்குள் மெள்ள யானை புகுந்து கொண்டது.

பஸ் நிலையத்துக்கு வந்தோம். நாலரைக்கு வரவேண்டிய கார் கொஞ்சம் முன்னாலேயே வந்து போய் விட்டதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

அடுத்த கார் ஏழரைக்குத்தானாம்.

அதுவரை காத்திருப்பதா? இல்லை, அந்த அம்மாள் வீட்டிற்கே திரும்புவதா? கொஞ்ச நேரம் மந்திராலோசனை பண்ணினோம்.



''அந்தக் காலத்திலே நித்தம் ராய வரத்திலேயிருந்து நடந்து வந்துதான் கடியாபட்டிப் பள்ளிக் கூடத்திலே படிச்சாங்களாம். இப்ப இந்த ஒரு நாள். ஒருவேளை நாம நடக்கக் கூடாதா? பொழுது விழறதுக்குள்ளே ஊரு போயிடலாமே!'' என்று ராமு சொல்ல, நாங்களும் சரி என்றோம்.

இருந்தாலும் எனக்கு மனசுக்குள் பக் பக்தான். அருகிலிருந்த கடைக்கு, தண்ணீர் குடிக்கப் பேரவது போல் போய், ''சர்க்கஸ் யானை தப்பிச் சிட்டு வந்துட்டுதாமே, நிஜந்தானா?'' என்று கடைக்காரரை விசாரித்தேன்.

என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''ஆமா அப்புச்சி, ராத்திரி அது இரை போட வந்தவனைத் தூக்கி விசிறிக் காலுக்கடியிலே போட்டு மிதிச்சித் தேச்சிட்டு இந்த ராயவரம் காட்டுப் பக்கம்தான் வந் திருச்சாம்,'' என்றார் அவர்.

என் மனசுக்குள் புகுந்திருந்த யானை இப்போது அங்கே சர்க்கஸ் ஆடியது!

அடங்கி இருக்கும் வரை யானை செல்லச் சேவகன். வெறி பிடித்து விட்டால் அது மிக மோசமான எதிரி! இல்லையா?

பேசாமல் அந்தப் பெரிய வீட்டி லேயே தங்கியிருந்து விட்டுக் காலை யில், ராயவரம் போகலாம் என்று நான் சொல்ல வருவதற்குள் இரு வரும் என்னைத் தள்ளிக் கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டார்கள்.

''கொஞ்சம் எட்டி நடை போடுங்க, வெளிச்சத்தோட வீடு போய்ச் சேர்ந் திடலாம்,'' என்று ராமு சொல்ல, பிரபு என் கையைப் பிடித்து இழுத் துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

அதற்கு மேலும் நான் தயங்கினால் பயந்தாங்கொள்ளி பட்டம் வந்து சேரும் எனக்கு. நான் அதை ஏற்கத் தயாராயில்லை, துணிந்து நடந்தேன்.

மனசுக்குள்ளிருந்த பயத்தை அமுக்குவதற்காக, ''பிரபு, பிரபு ஒரு பாட்டுப் பாடு. அலுப்புத் தெரியாமல் நடக்கலாம்,'' என்று கெஞ்சினேன்.

அவன் ஒன்றும் பிகு பண்ணிக் கொள்ளவில்லை.

''சத்தி மிக்க தெய்வம் எங்கள்
முத்து மாரியம்மா
சகலருக்கும் வரம் தருவாள்
முத்து மாரியம்மா..''


என்று மிக மெதுவாக, ஆனால் உள் ளார்ந்த பக்தியோடு பாடினான்.

பாட்டு முடிந்தது. வேறு ஏதேதோ பேசிக்கொண்டு கொஞ்ச தூரம் நடந் தோம்.

இருந்தும் மனசுக்குள் அந்த உறுத் தல் நெருட, ''இப்போ, இங்கே, அந்த மத யானை வந்தால் என்ன பண்ணும்?'' என்று நான் கேட்டேன். என் பயம் எனக்கு!

''உன்னைத் தூக்கி விர்ருனு வீசும். நீ போயி பரோட்டாவிலே விழுவே,'' என்றான் பிரபு.

இப்படி அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே ராமு, ''அதோ... அதே யானை!'' என்று சொல்லிக் கொண்டே என்னை மரத்





தின் மேல் ஏற்றி விட்டார். அடுத்தது பிரபு, பிறகு ராமு.

மூன்று பேருமே அந்த மரத்தின் நடுப்பகுதி வரை ஏறி ஒரு கிளையில் பம்மிக் கொண்டோம்.

நெஞ்சுள் திக்.... திக்..... திக்.....!

மெள்ளத் தலையை நிமிர்த்திப் பார்த்த பிரபு, ''யானை இங்கே, இந்த மரத்துப் பக்கம் தான் வருது.'' என்றான்.

ராமு அதைப் பார்த்து விட்டு, ''யானைக்கு மதம் பிடிச்சிருக்கலை,'' என்றார்.

''எப்படித் தெரியும்?'' என் சந்தேகத்தைக் கேட்டேன்.

''ஜோசியம் தெரியும்,'' என்றார் ராமு.

அந்த யானை மெதுவாக, கம்பீரமாக, ராஜநடை போட்டு, நாங்கள் இருந்த மரத்தடிக்கே வந்து நின்றது.

''மதம் பிடிச்சிருந்தா இது இவ்வளவு மெதுவா, பைய நடந்து வராதில்லே அண்ணா?'' என்று பிரபு சொல்லிக் கொண்டிருந்த போதே, ராமு மரத்திலிருந்து தழைதனைப் பறித்து யானைக்குப் போட்டார்.

யானை அவுக், அவுக் என்று தின்றதைப் பார்த்ததும் எனக்கும் தெம்பு வந்தது. பிரபுவும் நானும் கூடப் பறித்து யானைக்குப் போட்டோம்.

''ராயவரம் போவோமா?'' என்று ராமு கேட்டார்.

''எப்படிப் போவது?'' என்று நான் விழித்தேன்.

அடிக்கிளையில் இறங்கி சறுக்கி, யானையின் மேலே இறங்கினார் ராமு. ராமுவைத் தொடர்ந்து பிரபு...

இந்த இரண்டு பேரும் யானையின் மேல் ஏறிப் போய்விட்டால் நான் மட்டும் மரத்தின் மேலேயே இருந்து விட முடியுமா என்ன?

நெஞ்சுக்குள்ளே மூண்ட பயம் முற்றாக நீங்கிவிடவில்லை என்றாலும், நானும் அந்த யானையின் மேலே இறங்கினேன்.

ஏற்கனவே, யானை ஏறிப் பழக்கமிருந்ததோ, என்னவோ, ராமு தேர்ந்த பாகனைப் போல, அதன் தலைக்கு மேல்புறமாக நகர்ந்து உட்கார்ந்து கழுத்தின் இருபுறமும் கால்களைப் போட்டு, காதுகளுக்கு அடியில் என்னவோ செய்ய யானை டங் டங் கென்று நடக்க ஆரம்பித்தது.

ராமுவுக்கு ஒட்டினாற்போல் பிரபு. அவனுக்கு அடுத்து நான்.

''ஆமா, இதுக்கு நிஜமாவே மதம் பிடிச்சிருக்கலையா?'' என்று இன்னும் என் நெஞ்சுள் குடைந்த சந்தேகத்தைப் பிரபுவிடம் கேட்டேன்.

அவன், ''மதம் பிடிச்சிருந்தா இப்படி ஆ....றலா, கம்பீரமா நடந்து வருமா?'' என்று திரும்பிக் கேட்டான்.

எனக்கென்ன தெரியும் யானைகளைப் பற்றி?

யானை பாதை சேர்ந்து, ராயவரம் நோக்கி நடக்க ஆரம்பித்தது.

என்னை இதுவரைக்கும் ஆட்டிய பயம் அறவே பறந்து விட மனத்துள் குஷி பிறந்தது.

''அண்ணாமலை அண்ணாமலை
அண்ணாந்து பார்த்தான்....
ஆனை மேலே இருந்து கொண்டே
அண்ணாந்து பார்த்தான்,''
என்று பாட ஆரம்பித்தேன்.

பிரபு, ''ஏய், ஒரிஜினல் பாட்டை உல்டா பண்ணாதே'' என்று சிரித்துக் கொண்டே திரும்பினான், திரும்பியகணமே, ''ஹை... பின்னாலே சர்க்கஸ் வேன் வருது,'' என்று வீச்சிட்டான்.

நான், ராமு இருவருமே பின்புறம் திரும்பினோம்.

கொஞ்சம் தொலையில், விளம்பரத் தட்டிகள் கட்டிய வேன் வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

அந்த வேன் அவசரப்படவில்லை. யானையின் நடைவேகத்துக்கு ஏற்ப மெதுவாக, பின்னாலேயே வந்து கொண்டிருந்தது.

''இது யாரையோ தூக்கிப் போட்டு மிதிச்சு, துவைச்சுட்டதுன்னதெல்லாம் பொய்தானோ?'' என்று நான் கேட்டேன்.

அப்படித்தான் தோணுது,'' என்றான் பிரபு.

அப்போது யானை, ராயவரம் முத்து மாரியம்மன் கோயிலுக்கு வந்து நின்றது.

நாங்கள் வரும் முன்னே கோயிலுக்கு முன் ஏகப்பட்ட கூட்டம் வந்து சேர்ந்து விட்டது.

மெதுவாகப் பின் சரிந்து, உட்கார்ந்த யானையிலிருந்து ராமு, பிரபு, நான் மூன்று பேரும் குதித்து இறங்கினோம்.

எங்களைத் தொடர்ந்து வந்த வேன், பஸ் ஸ்டாப் தகரக் கொட்டகைக்கு முன் வந்து நிற்க, அதிலிருந்து ஒரு பெரியவர் இறங்கி எங்களை நோக்கி வந்தார்.

வந்தவர் நேரே ராமுவிடம் வந்து, அவர் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

முக்கால் மலையாளமும், கால் தமிழுமாக அவர் சொன்னது இது தான். யானைகளைப் பராமரிக்க நியமிக்கப்பட்டவன், அவற்றுக்கு ஒழுங்காக இரை போடாமல் பச்சரிசி, வெல்லம் எல்லாம் வாடிக்கையாகத் திருடிக் கொண்டே வந்திருக்கிறான். அதனாலே, சர்க்கசிலிருந்த எல்லா யானைகளுக்குமே அவன் மேலே கோபம். நேற்றும் இதேபோல, போதுவான அளவு தராமல் அவன் ஏமாற்ற, அந்த ராஜா அவனை லேசாகச் சீண்டியிருக்கிறது. அது பொறுக்காத அவன் முரட்டுத்தனமாக இதை அடித்து விட, இது கோபித்துக் கொண்டு வந்து விட்டதாம்!


''தைரியமாகக் கொண்டு வந்திட்டீங்க, ரொம்பத் தாங்க்ஸ். வாங்க, இப்படியே வேன்லே புதுக்கோட்டை போகலாம். அங்கே சாப்பிட்டுட்டு, சர்க்கஸ் பார்த்திட்டுத் திரும்பலாம். பத்திரமாய்க் கார்லேயே அனுப்பி வைக்கிறேன்,'' என்றார் பெரியவர்.

எனக்குச் சர்க்கஸ் மிக மிகப் பிடிக்கும். அதிலும் கோபித்துக் கொண்டு வந்த இந்தக் குழந்தை என்ன செய்கிறது என்று பார்க்க ஆவல்.

பிரபுவைப் பார்த்தேன். அவன் ராமுவைப் பார்த்தான்.

அதே நேரம் அம்மன்கோயில் பூசாரி அங்கே வந்தார். அவரிடம் சொல்லி, கற்பூரத் தட்டையும், கோயில் மணியையும், வாங்கி யானையின் முன் வைத்தார் அந்தப் பெரியவர்.

அந்த யானை, தேர்ந்த பூசாரியைப் போல அம்மனுக்கு ஆரத்தி காட்டி கண கண என மணி அடித்தது!



பயணத்துக்கு ஒரு பட்டியல்

இந்தக் கோடை விடுமுறையில் ஏற்கெனவே உல்லாசப் பயணம் போனவர்கள் அனுபவித்திருப்பார்கள். உல்லாச அனுபவம் அல்ல. போன இடத்தில் அதை மறந்து விட்டோம்; இது விட்டுப் போயிற்று என்று நொந்து கொண்டிருப்பீர்களே, அந்த அனுபவத்தைச் சொல்கிறேன்.

அதனால்தான் இனிச் செல்பவர்களுக்காவது உதவும்படியாய், பயணத்தின் போது என்னென்ன பொருள்கள் எடுத்துப் போகவேண்டும் என்று பட்டியல் போட்டுத் தரும் பாடல் ஒன்றை இங்கே தருகிறேன்:

சீப்புக் கண்ணாடி ஆடை
  சிறுகத்தி கூந்தல் எண்ணெய்
சோப்புப் பாட்டரி விளக்கு
  தூக்கும் கூஜாதாள் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை
  செருப்புக் கோவணம் படுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய்
  கைக்கொள்க யாத்தி ரைக்கே!

இதிலே சில பழைய வார்த்தைகளுக்குக் காலத்தையொட்டிப் பொருள் கொள்ளலாம். சிறுகத்தி — ரேஸர் செட். தூக்கும் கூஜா — வாட்டர் பேக். கவிகை — குடை. கோவணம் — ஜட்டி. காப்பிட்ட பெட்டி — பூட்டுப் போட்ட பெட்டி.

பயணம் புறப்படும் முன் ஒருமுறை இந்தப் பாட்டைச் சொல்லி, 'எல்லாம் எடுத்தாயிற்றா?' என்று பெரியவர்களைச் சரிபார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள். அப்படியே அசந்து போய் உங்களைப் பாராட்டுவார்கள்!

அதுசரி, இந்தப் பாட்டை எழுதியவர் யார் என்று சொல்லவில்லையே! இவருக்கு இப்போது நூற்றாண்டு விழா கொண்டாடுகிறார்களே — பாரதிதாசன்!

— பெரிய பையன்.

சித்திரப் புதிர் — 37

விடை:

1. இரண்டும் சமம்.
2. முதலை,
3. ஸ்ரீலங்கா,
4. (ஆ) சிங்கப்பூர்,
5. (அ) நேபாளம்.

மழலைகளின் கவிஞருக்கு

கோகு லத்தில் பாடி வந்த
குயில் பறந்தது;
குழந்தை களின் நெஞ்ச மெல்லாம்
துயர் சுரந்தது;
பாகு போன்ற பாட்டுப் பாடக்
கவிஞர் இன்றிலை;
பாச முற்ற எங்கள் அண்ணன்
பார்ப்ப தற்கிலை.

எளிமை இனிமை ஆழம் யாவும்
இணைந்து வந்ததே
எங்கள் வள்ளி யப்பா சொன்ன
ஏற்ற மாம் கவி
தெளிவும் திடமும் சிந்த னைக்குத்
தேனைப் போன்றது
திரும்பத் திரும்பச் சொல்லிப்
பழகத் தித்திப் பானது.

பெரிய வர்க்குப் பாடும் போது
பிழைகள் தோன்றலாம்;
பேசி அதையும் நியாயம் ஆக்கிப்
பெருமை கொள்ளலாம்.
சிறிய பிள்ளை கேட்கும் கேள்வி
சிந்த னைவெள்ளம்
தெரிந்து பாடும் குழந்தைக் கவிஞர்
திறமை பெரியது.

— மதி ஒளி.

மழலை மொழி கொஞ்சுகின்ற
வண்ணத் தமிழ்ப் பாடல்
எழுதி எழுதிக் குழந்தைகளை
இன்பமூட்டி வாழ்ந்தார்!

குழந்தை எழுத்தாளருக்குச்
சங்கம் ஒன்று கூட்டி
குழந்தைகளின் இலக்கியத்தைக்
குன்று போல் வளர்த்தார்!

பழுத்த எழுத்தாளருக்குப்
பரிசளித்து வாழ்த்தி
அழகு மிக்க புத்தகங்கள்
அச்சில் வரச் செய்தார்!

ஒழுக்கம் உயர் அன்புவளர்ந்
தோங்கிடவே வாழ்ந்த
மழலைகளின் கவிஞர் அழ
வள்ளியப்பா வாழ்க!

— குழந்தைக் கவிஞர் வளர்த்த
தங்கமணி



மலர் வளையங்கள்

கோகுலத்திலே கண்ணனைக் காணோம்
குழந்தைகள் தேடி நடந்தார்கள்;
போகும் வழியெலாம் சோகம் நிறைந்ததால்
பொறுமை இழந்து அலைந்தார்கள்.

கண்ணன் குழலே ஒலிக்க மறந்ததால்
கன்றுகள் மேய்ந்திட வரவில்லை.
வண்ணப் பூக்கள் வாடி நின்றதால்,
வருவோர் அதனைத் தொடவில்லை.

வீட்டுக் குழந்தைகள் சாப்பிடவில்லை;
விளையாட்டுக்கும் மனம் இல்லை.
பாட்டுச் சுவடிகள் படுத்து விட்டதால்
பாலர் குரலே எழவில்லை.

குழந்தைக் கவிஞர் பிரிந்த தினத்தில்
குழலைக் கண்ணன் பிறந்தானாம்.
குழலைக் கண்ணன் மறைந்து போனதால்
குழந்தைகள் மகிழ்ச்சி இழந்தனராம்.

பழைய மகிழ்ச்சி நிலைத்திடவும்
பாடல் மறுபடி ஒலித்திடவும்
குழந்தைக் கண்ணா வருவாயா?
குழந்தைக் கவிஞரைத் தருவாயா?

— இளையவன்

கேளுங்கள் சொல்லப்படும்!

கே: மூங்கில் என்பது புல் வகையைச் சேர்ந்ததா, மர வகையைச் சேர்ந்ததா?

ப: ஏதோ சயன்ஸ் வாத்தியார் டெஸ்ட் பண்ணுகிற மாதிரியிருக்கிறதே, கேள்வி. பரவாயில்லை. மாணவன் நிலையிலிருந்தே பதில் சொல்கிறேனே! ஒற்றை விதையிலைத் தாவரங்களிலே 'கிராமினியி' என்னும் புல் குடும்பத்திலே, 'பாம்புசியி' என்னும் சில புல் வகைகள் மூங்கில்கள் எனப்படும். இந்தப் பதிலுக்கு நூற்றுக்கு நூறு மார்க் தரணும் சார்! இன்னும் கொஞ்சம் அசத்தட்டுமா? இவற்றிலே 30 சாதிகளும், 550 இனங்களும் உண்டு. மேலும்... என்ன, போதுமா? நிறுத்திக்கறேன்.

கே: எல்லாக் கடிகாரங்களும் 10 மணி 10 நிமிடம் காட்டுவது போலவே விளம்பரம் செய்கிறார்களே, இதற்குக் குறிப்பான காரணம் ஏதாவது உண்டா?

ப: எல்லாம் ஒரு கவர்ச்சிதான்! 10 மணி 10 நிமிடம் காட்டும் போது — ஒரு பறவை பறப்பது போல் கடிகார முட்கள் நிற்கின்றனவே — அந்த நேர்த்தி, வேறு எந்த நேரத்தைக்காட்டும்போதும்இருப்பதில்லை. உலகப் பெரும் விளம்பர நிறுவனங்கள் எல்லாம் ஒரு மனதாய் ஒப்புக் கொண்ட உண்மை இது. இது விளம்பர யுகம் தம்பி. முதலில் கண்ணைக் கவர்ந்தால்தான் அப்புறம் காசைக் கவரலாம்!

கே: கவாஸ்கர் முதன் முதலாக விளையாடிய மாட்ச் எது? எந்த அணியுடன்? எத்தனை ரன்கள்?

ப: காவஸ்கர் மட்டை பிடிக்க ஆரம்பித்த நாளில்தெரு ஆட்டமாய்க்கூட எத்தனையோ மாட்ச் ஆடியிருக்கலாம். சுயசரித்திரச் சான்றோடு அவர் ஆடிய முதல் மாட்ச் என்று பார்த்தால் —

சின்ன அண்ணன்

பள்ளிப் பருவத்தில் அவர் ஆடிய ஹாரிஸ் ஷீல்டு மாட்ச்தான். அந்தக் கிரிக்கெட் மாட்ச்சில் ரிக்கே என்பவருக்கு அம்மை போட்டு அவர் வராததால், பத்தாவது ஆட்டக்காரராய் இருந்த கவாஸ்கரை விளையாட விட்டார்களாம். ஏதோ ஒப்புக்குச் சப்பாணியாய் இருப்பார் என்று நினைத்தால், மனிதர் அவுட்டாகாமல் முப்பது ரன்கள் எடுத்து அசத்தி விட்டாராம்! சாதனை தானே? செய்தித் தாளில் அந்த மாட்ச் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க ஆசை ஆசையாய்ப் பிரித்தால்... தன் பெயர் முழுசாய் இல்லாமல், ஜி. சுனில் என்று மட்டும் வந்திருக்கக் கண்டு, அப்படியே நொந்து போய் விட்டாராம், பாவம்!



* என். வித்யாலட்சுமி, தியாகராஜபுரம்.

கே: குழந்தைகளுக்கு ஒரு வயது நிரம்பாமல் இருக்கும் போது கண்ணடி காட்டக் கூடாதாமே? கண்ணாடியில் முகம் பார்த்தால் அவை ஊமையாகி விடுமாமே? உண்மையா?

ப: இதற்கு விஞ்ஞான ரீதியான ஆதாரம் இருப்பதாய்த் தெரியவில்லை. அதற்காக உடனே, 'பகுத்தறிவு ஓங்குக! பஞ்சாங்கங்கள் ஒழிக!' என்று கோஷம் எழுப்பிக் கொடி பிடிக்கத் தேவையில்லை. பெரியவர்கள் விஞ்ஞானத்தை ஏற்கத் தயாராகிற வரைக்கும், அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டுச் சரிசரி என்று பணிந்து போவது தான் அவர்களுக்கு நாம் செலுத்தும் மரியாதை — இந்த நாட்டுப் பண்பாடு. அதனால் நமக்குப் பெரிய நட்டம் ஒன்றும் ஏற்பட்டு விடப் போவதில்லையே!

* இரா. மணிகண்டன், சென்னை — 88.

கே: கிரிக்கெட் விளையாட்டைக் கண்டு பிடித்தவர் யார்? நம் நாட்டுக்கு எப்பொழுது வந்தது?

ப: நம் நாட்டுக் கபடி விளையாட்டைக் கண்டு பிடித்தவர் யார் என்றால் பதில் சொல்ல முடியுமோ? அப்படித்தான் கிரிக்கெட்டும். இந்த விளையாட்டுக்கு ஆடத் துவங்கிய காலத்தையும் திட்டவட்டமாய்ச் சொல்வதற்கில்லை. 1722 — ஆம் ஆண்டு வாக்கில் ஸ்காட்லாந்தில் பூனை — நாய் விளையாட்டு என்று ஒன்று பிரபலமாக இருந்தது. அதுதான் கிரிக்கெட்டுக்கு முன்னோடி என்கிறார்கள். 1787 — இல் கிரிக்கெட் விளையாட்டு ஓர் ஒழுங்குமுறை ஏற்படுத்தி இங்கிலாந்தில் ஹாம்பிங்டன் கிளப் லார்டுகள் புகழேணிக்குக் கொண்டு வந்தார்கள். அப்புறம் அந்த வெள்ளைக்காரர்கள் (கிழக்கிந்தியக் கம்பெனி) இந்தியாவுக்குள் நுழைந்த போது அவர்களுடனே கிரிக்கெட்டும் நுழைந்தது. முதன் முதலாகக் கல்கத்தாவில் 1792 — ஆம் ஆண்டு கி. இ. கம்பெனி அங்கத்தினர்கள் கிரிக்கெட் கிளப் நிறுவி, முறையாகக் கிரிக்கெட் ஆட ஆரம்பித்தார்கள்!

* க. சீனிவாச பாஸ்கர், வந்தவாசி.

கே: மனிதனுக்கு வால் உண்டாம். அவன் தாயின் வயிற்றில் இருக்கும்போது சிறு வால் ஒன்று இருக்குமாம். குழந்தை வளர அது மறைந்து விடுமாம். ஆமா?

ப: நமது தந்தை தாய் மரபு மந்தியும் கடுவனும்தான் என்பது இந்த நாள்வரை மறுக்கமுடியாத உண்மைதான். அதற்கு ஆதாரமாய் மனித உடலில் வால் இருக்கிறது என்பதும் உண்மை. அந்த வால் கருவில் நீண்டிருந்து பிறகு உருவாகி வளர வளரக் குறைவதாய்ச் சொல்வதுதான் ரீல். நமது முதுகுத் தண்டின் கீழ் முனையிலே இரு சிறு எலும்புகள் நீட்டிக் கொண்டிருக்கும். அவற்றுக்குக் காக்சிக்ஸ் (coccyx) என்று பெயர். நல்லவேளை, மனுஷன் வாலை ஒட்டக் கத்தரித்தாயிற்று! இல்லாவிட்டால் எங்கெங்கே தொங்கிக் கொண்டு எப்படியெல்லாம் ஊஞ்சலாடியிருப்பானோ!





குழந்தைகளைச் சிரிக்கவைத்த கோணங்கி நடிகர்.....

ஜானகிமணாளன்

இங்கிலாந்தில், லண்டன் நகரில், ஒரு சிறிய கலையரங்கம். நல்ல கூட்டம். மேடையில் ஒரு பெண்மணி. இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். திடீரென்று குரலில் கோளாறு. பிசிறு தட்டியது. கனைத்துக் கொண்டாள். உடனே இருமல். தொண்டையில் புகைச்சல். மீண்டும் பாட முயன்றாள், முடியவில்லை.

அவ்வளவுதான்! கூட்டத்தினரிடம் பொறுமையில்லை. ஒரே கூச்சல் — குழப்பம், அதைத் தொடர்ந்து, அவளை நோக்கிச் சரமாரியாக! அழுகிய முட்டைகள், தக்காளிப் பழங்கள்....!

அவள் கூனிக் குறுகிப் போய்த் திரைக்குப் பின்னால் ஓடி ஒளிந்து கொண்டாள். கூட்டத்தினரின் ஆவேசம் எல்லைமீறியது. 'உடனே டிக்கெட் பணத்தை வாபஸ்செய் என்ற கூச்சல்!

நிகழ்ச்சி அமைப்பாளர்களின் நிலைமை தர்ம சங்கடமாகியது. செய்வதறியாமல் தவித்தனர். அப்போது அவர்களுக்கு ஒரு திடீர் யோசனை. சட்டென்று ஒருவர் மேடையேறினார். கூட்டத்தினரைப் பார்த்து, 'அமைதி... அமைதி....' என்று கையசைத்து விட்டு உள்ளே ஓடினார்.

திரும்பி வரும் போது, அவரது கை விரல்களைப் பற்றிக் கொண்டு ஒரு சிறுவன், ஐந்தாறு வயது இருக்கும். மேடையின் மையத்தில் வந்து நின்றான். அச்சிறுவன்,' "ஹலோ.... அமைதி!'' என்று, கைகளை உயர்த்திக் காட்டினான்.

உடனே கூட்டத்தில் அமைதி. சட்டென்று அப்போது பிரபலமடைந்திருந்த ஒரு பாடலின் வரிகளைப் பாடத் தொடங்கினான். கூட்டத்தினருக்கு ஒன்றும் புரியவில்லை. சிறுவன் இரண்டு அடிகளைத் தான் பாடியிருப்பான். கரவொலி விண்ணைப் பிளந்தது.

சற்று முன்பு அழுகிய முட்டைகளையும் அழுகிய தக்காளிப் பழங்களையும் வீசியடித்த அதே கூட்டம், இப்போது மேடையை நோக்கி நாணயங்களை வாரியிறைக்கத்

தொடங்கியது!

சிறுவன் உடனே பாட்டை நிறுத்தினான். மேடை முழுதும் நாணயங்கள் சிதறிக் கிடந்தன. சிறுவன் கூட்டத்தினரைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கையசைத்தான். கரவொலி அதிகரித்தது. 'அமைதி..... அமைதி' என்பது போல், அமர்க்களமாகக் கையசைத்து விட்டு உரத்த குரலில், ''தயவு செய்து என்னை எல்லாரும் மன்னிக்க வேண்டும்....'' எனக் கூறி நிறுத்தினான்.

அவன் என்ன பேசப்போகிறனோ என்று எல்லாரும் ஆவலுடன் காத்திருந்தனர். பயங்கர அமைதி.

அச்சிறுவன், ''முதலில் உங்கள்



அனைவரது அனுமதியுடன்'' என்று சுற்றிலும் ஒரு தடவை பார்த்து விட்டு, ''இவற்றைப் பொறுக்கிக் கொள்கிறேன்.....'' என்றவாறு சிதறிக்கிடந்த சில்லறைக்காசுகளைப் பொறுக்கலானான்.

அவ்வளவுதான். சிறுவனின் நகைச்சுவை உணர்வை ரசித்த கூட்டத்தினர், முன்பை விட, மேலும் அதிகமாகக் கைதட்டி ஆரவாரம் புரிந்தனர். மகிழ்ச்சியில் திளைத்த சிலர், மீண்டும் நாணயங்களை மேடைய்ய நோக்கி எறிந்தனர். சிறுவன் அவற்றையும் அமைதியாகப் பொறுக்கிக் கொண்டான். பிறகு, மீண்டும் மேடையின் மையத்துக்கு வந்து முழுப் பாட்டையும் பாடினான்.

அத்துடன் நிற்கவில்லை. முன்பு அந்தப் பெண்மணி பாடிய அதே பாட்டைப் பாடியதோடு அந்தப் பாடலின் எந்த அடியில் — எப்படி அந்தப் பெண்மணிக்குக் குரல் தடுமாற்றம் ஏற்பட்டதோ, அதே போன்று தடுமாறி நடித்தும் காட்டினான். கூட்டத்தில் மீண்டும் கோலாகலம்.

திரை மறைவில் நின்ற சிறுவனின் தாய் பூரித்துப் போனாள். புளகாங்கிதமடைந்தாள். தன்னை மறந்தாள். தாவி ஓடிவந்து, நடு மேடையிலேயே தன் மகனை வாரியெடுத்து முத்தமாரி பொழிந்தாள். அதைக் கண்டதும், கூட்டத்தினரிடம் பரபரப்பு. திகைத்துப் போனார்கள். காரணம் என்ன தெரியுமா? அச்சிறுவனின் தாய் வேறு யாருமில்லை. சற்று முன்பு குரல் தடுமாறி, அழுகல் முட்டையால் அடி வாங்கிக் கொண்டு உள்ளே ஓடி ஒளிந்து கொண்டாளே, அதே பாடகி தான்!

அந்தச் சிறுவன் யார்? பிற்காலத்தில், தன் கோணங்கி நடிப்பால், கோடிக்கணக்கான குழந்தைகளைச் சிரிக்க வைத்துத் திரையுலகில் ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றுத் திகழ்ந்த நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் தான்!

சார்லி சாப்ளினின் முழுப் பெயர் சார்லஸ் ஸ்பென்சர் சாப்ளின். லண்டன் நகரம். வால்வொர்த் என்ற பகுதியின் ஈஸ்ட் லேன். ஏழைகள் வாழும் புறநகர்ப் பகுதி. அங்கு ஓர் ஏழைக் குடும்பத்தில் 1889 ஏப்ரல் 16 ஆம் நாள் இரவு 8 மணிக்குச் சார்லி சாப்ளின் பிறந்தார்.

அவரது தந்தை ஒரு பாடகர். அத்துடன் ஒரு குடிகாரர். எனவே, அடிக்கடி தாய்க்கும் தந்தைக்கும் சண்டை. சார்லியின் தாய், அவரை வளர்க்க அரும்பாடு பட்டார். அவளும் ஒரு பாடகிதான். மேடையேறிப் பாடித் தன் இரு குழந்தைகளையும் வளர்த்தாள். சாப்ளினுக்குச் சிறுவயது முதலே, பிறரிடம் அன்பும் பரிவும் மிகுதி. பிற உயிர்களின் துன்பத்தைக்



கண்டு துடிப்பார். உதாரணத்துக்கு ஒரு சம்பவம்:

அவர் வசித்த தெருவின் கோடியில் ஒரு கசாப்புக்கடை. அங்கு தினசரி ஆடுகளைக் கொன்று, துண்டு துண்டாக்கி விற்பார்கள். எப்போது பார்த்தாலும் கடைக்கு முன்னால் ஏழெட்டு ஆடுகள் கட்டிக் கிடக்கும். அவற்றில் ஓர் ஆட்டுக்குட்டி அங்கிருந்து தப்பியோடி விட்டது. கடைக்காரர் துரத்திச் சென்று பிடித்து விட்டார். தரதர வென்று கடைக்கு இழுத்துவந்தார். ஆட்டுக்குட்டி, 'மே... மே...! என்று பரிதாபமாகக் கத்தியது.

சாப்ளின் அதைப் பார்த்தார். பாவமாக இருந்தது. ஓடிப் போய்த் தன் தாயாரைக் கட்டியணைத்துக் கொண்டு, ''அதைக் கொன்று விடுவார்களா அம்மா.... கொன்று விடுவார்களா அம்மா....?'' என்று புலம்பினார். கண்களில் நீர் தாரை தாரையாகக் கொட்டியது.

தாயிடம் கொள்ளைப் பிரியம் கொண்டிருந்தார் சார்லி. பாவம், அம்மாவால் அவருக்குத்தான் எப்படிப்பட்ட சோதனை! அவருடைய தாயாரை மனநோய் பிடித்தது. பலவித வைத்தியத்திலும் பலனில்லை. கடைசியில் மனநோய் மருத்துவமனையில் சேர்க்கும்படி ஆயிற்று. பலவித சிரமங்களுக்கிடையே, இரவு பகலாக அயராது உழைத்துச் சம்பாதித்துத் தன்னைக் காப்பாற்றிய தாய்க்கு இப்படி ஒரு நிலைமை வந்துவிட்டதே என்று வருந்திக் கண்ணீர் விட்டு அழுதார்.

1908. அவருக்கு 20 வயது. ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்தார். அதனுடன் அமெரிக்கா சென்றார். அங்கு பல இடங்களுக்குச் சுற்றியலைந்து நாடகங்களில் நடித்தார். அவரது புகழ் நாடு முழுதும் பரவியது. மக்கள் அவரை ஒரு தலைசிறந்த நகைச்சுவை நடிகராக மதிக்கத் தொடங்கினர். அந்நாட்டில் மேக் சென்னெக் என்று ஒருவர். திரைப்படத் தயாரிப்பாளர். 'கீஸ்டோன்' என்ற திரைப்பட நிறுவனம் நடத்தி வந்தார். அது திரைப்படம் கண்டு பிடிக்கப்பட்ட துவக்க காலம். படங்களில் பேச்சு இருக்காது. ஊமைப் படங்கள். அவர் பல சிறுசிறு படங்களைத் தயாரித்து வெளியிட்டு வந்தார். அவருக்குச் சாப்ளினின் திறமை பற்றிய செய்தி எட்டியது. உடனே அவர் சாப்ளினை அழைத்துப் பேசினார். தன்னுடைய கம்பெனியில் சேர்த்துவிட வற்புறுத்தினார்.

சாப்ளின் 1914 ஆம் ஆண்டு அதில் சேர்ந்தார். வாரச் சம்பளம் 150 டாலர். அப்போதெல்லாம் அவர் வெறும் நடிகர் மட்டும்தான். திரையில் முதன் முதல் அவருக்குத் தரப்பட்ட வேடம் எது தெரியுமா? பத்திரிகை நிருபர். அதைச் சரியாகச் செய்தும் பாத்திரம் எடுபடவில்லை. எனவே, சாப்ளின் தனது தோற்றத்துக்கும் திறமைக்கும் ஏற்ற பாத்திரமாகத் தானே படைத்து நடிக்க முயன்றார். அதில் வெற்றியும் பெற்றார்.

தனது 25 ஆவது வயதில் அவர் அத்தகைய ஒரு பாத்திரத்தை உருவாக்கிவிட்டார். கோமாளித்தனமான பாத்திரம். மற்றவர்களின் ஆசாபாசங்களுக்கு உட்பட்டு, அவர்களுக்காக அப்பாவித்தனமாக நடக்கும் குள்ள மனிதனின் பாத்திரம். அதற்கு ஏற்ற உடைகளை, அவரே ஆர்டர் கொடுத்துத் தைத்துக் கொண்டார். தொள தொள கால் சட்டை. பிடிப்பான கோட், அளவு சிறிய தொப்பி. நீள அகலமான பூட்ஸ். வயதைக் கூட்டிக் காட்டும் ஃப்ரெஞ்ச் பாணி மீசை டூத் பிரஷ் போல இருக்கும். பார்த்தாலே சிரிப்பு வரும். கையில் வாக்கிங் ஸ்டிக். இந்த வேடத்தில் அவர் சக்கை போடு போட்டார்.

அந்தக் கம்பெனியில் ஓர் இயக்குனர் பெண். நல்ல அழகி. மிஸ் மேபல் நார்மண்ட் என்று பெயர். கம்பெனி முதலாளி சென்னெக்கின் காதலி. அங்கு அவள் வைத்ததுதான் சட்டம்.

சிரி சிரி கூ.....



"என் மனைவிக்குத் தேன் கொட்டிட்டுது! அரை மணியிலே உயிர் போயிடுச்சு!"

"அடப் பாவமே! தேனுக்கு அவ்வளவு விஷமா?"

"செத்தது தேன் தான்யா....!"

"அதோ போறாரே! அவர்கிட்ட எல்லோரும் போயி ஒட்டிக்கிறாங்களே! ஏன்?"

"அவர்தான் 'பசை' யுள்ள ஆசாமியாச்சே...!"

"அந்த சர்க்கஸ் கம்பெனி முதலாளி ரொம்ப மோசம்!"

"ஏன்...?"

"சர்க்கஸ் மிருகங்களுக்குப் பொது மக்கள் போடற தின்பண்டங்களையெல்லாம் இவரே தின்னுடறாரு...!"

சார்லி சாப்ளின் மிகுந்த சாது. சாது மிரண்டால் காடு கொள்ளாது என் பார்களே.... அப்படியாகி விட்டது. ஆம். சார்லி அவளை எதிர்த்து விட்டார். ஏன் தெரியுமா?


அவள் அடிக்கடி சாப்ளினை, "நான் என்ன சொல்கிறேனோ, அதைக் கேட்கவேண்டும். எப்படிச் சொல்லுகிறேனோ, அப்படித் தான் நடிக்க வேண்டும்," என்று கட்டாயப் படுத்தினாள்.

துவக்கத்தில் சாப்ளின் பணிந்து போனார். பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா? அந்த எல்லையை மீறி விட்டார். நேராக சென்னெக்கிடம் போனார். "அவள் என்னை அடக்கி ஒடுக்குகிறாள்; அவள் சொன்னபடியெல்லாம் கேட்க நான் என்ன பொம்மையா? இனி முடியாது. அவளுடைய அடக்கு முறையிலிருந்து எனக்கு விடுதலை வேண்டும். இல்லாவிட்டால் நான் கம்பெனியிலிருந்து விலகி லண்டன் போய்விடுவேன்," என்று உறுதியாகச் சொன்னார்.

முதலாளி சற்று நேரம் யோசித்தார். சாப்ளினை இழக்க அவர் மனம் இடம் தரவில்லை. 'சார்லி தன் விருப்பம் போல் நடக்கட்டும் — நடிக்கட்டும்' என்று முழு சுதந்திரமும் கொடுத்து விட்டார். இது சாப்ளினுக்கு வெற்றி. எனினும், அவர் சிறிதும் கர்வம் கொள்ளவில்லை. தொடர்ந்து பல படங்களில் நடித்து முடித்துக் கொடுத்தார். 1914 முதல் நான்கு ஆண்டுகளில் அக்கம்பெனிக்காக 50 படங்களில் நடித்தார். எல்லாம் இரண்டிரண்டு ரீல்கள் கொண்ட சிறு சிறு ஊமைப் படங்கள்.

அவரது புகழ் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. வருமானமும் பன்மடங்காகப் பெருகியது. இருந்த போதிலும், அவர் தமது இயல்பான எளிய வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவில்லை. மேக்கப் அறைக்குள் நுழையும் வரையில் அவரிடம் எந்த நகைச்சுவைக் கற்பனையும் இருக்காது. அதன் பிறகு, திடீரென்று எண்ணம் உதிக்கும். உடனே அதை நடித்து விடுவார். அவரிடம், பிறரைச் சிரிக்க வைக்க எத்தனை திறமை இருந்ததோ, அதே அளவு திறமை பிறரை அழ வைப்பதிலும் இருந்தது.

'நியூ ஜானிடர்' என்ற ஒரு படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.



"உண்மைக்கும்,பொய்க்கும் என்ன வித்தியாசம்?"
"ஒரேயொரு எழுத்து தான், சார்..!"
"எப்படி?"
"Real—ன்னா உண்மை. Reel—ன்னா பொய்!"

"ஒரே ஒரு மார்க்குல என் பையன் பெயிலாகிட்டான்..!"
"அடப் பாவமே!"
"வயித்தெரிச்சலைக் கிளப்பாதீர். அவன் எடுத்ததே ஒரு மார்க்கு தான்யா...!"

பார்க்க முடியாத படம் எது? — 'கலப்படம்'
வரிசையாய் உள்ள பூ எது? — 'ரோ' ஜாப் பூ.
படுக்க வசதியுள்ள ஊர் எது? — பம்'பாய்'.
வழி காட்டும் கிழங்கு எது? — பீட்'ரூட்'

— வி. சுந்தரராமன்.

ஆபீஸ் மானேஜர் அவரை வேலையிலிருந்து தள்ளிவிடுகிறார். கதையம்சம் இப்படி... பெரிய குடும்பம்... சமாளிக்க முடியாத வரவு செலவு. மானேஜரிடம் கெஞ்சுகிறார், 'என் மீது கருணை காட்டுங்கள். என்னை வேலையை விட்டு நீக்கி விடாதீர்கள்' என்று தம் குடும்ப நிலையை எடுத்துக் கூறிக் கெஞ்ச வேண்டும். அப்படியே தத்ரூபமாகக் கெஞ்சி நடித்தார்.

அப்போது ஒரு மூத்த நடிகை — டோராதி டேஷ்ரன் போர்ட் என்று பெயர் — நடித்து முடித்த சார்லி, அவள் பக்கம் திரும்பினார். அவள் பிழியப் பிழிய அழுது கொண்டிருந்தாள். கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர். அவள் சொன்னாள்: 'நீ வேடிக்கையாகப் பேசுவதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதோடு நீ என்னை அழவும் வைத்து விட்டாய். நீ வலுவூட்டிவிட்டாய்,' எனப் புகழ்ந்தாள்.

நாளாக ஆக, சார்லி சாப்ளினின் வருமானம் பல மில்லியன் டாலர்கள் கணக்கில் கூடியது. அப்போது அவர் ஹாலிவுட் நடிகரில் சொந்தமாகப் பல ஸ்டூடியோக்களைக் கட்டினார். ஏராளமான படங்களைத் தயாரித்து வெளியிட்டார். கோல்டு ரஷ், சிடி லைட்ஸ், த கிட், மாடர்ன் டைம்ஸ், லைம் லைட் போன்றவை சில.

1939 — இல் 'த கிரேட் டிக்டேட்டர்' என்ற ஒரு படத்தைத் தயாரித்தார். உலகப் புகழ்பெற்ற படம், ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் பற்றியது. அவரை அதில் கிண்டல் செய்திருந்தார். பல ஆண்டுகள் தொடர்ந்து ஓடியது.

புகழின் உச்சக் கட்டம். எனினும் அவர் படைத்த கதாபாத்திரக் குண வெளிப்பாடுகள், உலகுக்கு அவரை ஒரு கம்யூனிஸ்ட்டாகக் காட்டின. அமெரிக்கா கம்யூனிச எதிர்ப்பு நாடு. பார்த்துக் கொண்டிருக்குமா?

ஒரு சமயம் சார்லி தமது திரைப்





படக் கணக்கு வழக்கு சம்பந்தமாக ஐரோப்பா சென்றிருந்தார். உடனே அமெரிக்கா என்ன செய்தது, தெரியுமா? அவர் மீண்டும் அமெரிக்கா திரும்ப, அனுமதி வழங்க மறுத்து விட்டது. எனவே சாப்ளின் தொடர்ந்து ஐரோப்பாவிலேயே வசிக்கத் தொடங்கினார்.

அங்கேயே 20 வயதுப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டார். ஊனா ஓனீல் என்று பெயர். மூன்றாவது மனைவி. அவளுடன் சுவிட்சர்லாந்தில் நிரந்தரமாகத் தங்கி விட்டார். அங்கு ஒரு பெரிய வீட்டைக் கட்டிக் கொண்டார். குழந்தை குட்டிகளோடும் பேரன் பேத்திகளோடும் ஆனந்தமாக வாழ்ந்தார். ஊனாவுக்கும் கூட நிறையக் குழந்தைகள் பிறந்தன.

காலப்போக்கில் அமெரிக்க உறவு சீரடைந்தது. எனவே, சார்லி சாப்ளின் ஒரு தடவை அமெரிக்கா சென்று வந்தார். அப்போதும் அங்கு சில படங்களைத் தயாரித்தார். பிறகு மீண்டும் சுவிட்சர்லாந்துக்கே திரும்பி விட்டார்.

அன்றைய உலகப் பெருந் தலைவர்களை எல்லாம் சார்லி சாப்ளின் சந்தித்துள்ளார். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன், இங்கிலாந்துப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், நாடக மேதை பெர்னார்ட்ஷா, அகிம்சாமூர்த்தி நமது தேசத் தந்தை காந்திஜி, ஆசிய ஜோதி நேருஜி ஆகியோர்.

காந்திஜி லண்டன் போயிருந்த போது, சாப்ளின் அவரை லண்டன், ஈஸ்ட் இண்டியா டாக் ரோடில் ஓர் ஏழ்மைச் சூழலில் உள்ள சாதாரண வீடு ஒன்றில் சந்தித்தார். காந்திஜியின் அப்போதைய லண்டன் விஜயம் தோல்வி கண்டது. அதுபற்றிச் சாப்ளின், 'நான் காந்திஜியின் கொள்கைகளை மிகவும் மதிக்கிறேன். அவை மிகமிக உயர்வானவை. காந்திஜி லண்டன் விஜயம் மேற்கொண்டது தப்பு,' என்றார்.

சாப்ளின் நேருஜியைச் சந்தித்த போது, அன்னை இந்திரா காந்தியும் அவருடன் இருந்தார்.

1972 — அப்போது சார்லி சாப்ளினுக்கு 83 வயது. அவருக்கு அமெரிக்கா 'ஆஸ்கார் விருது' — திரைப் படத்துக்கான உயர்ந்த விருது வழங்கியது. அது, 'என் நாட்டுக்குள் வராதே' என்று முன்பு தடை விதித்ததற்குப் பிராயச்சித்தமாக அமைந்தது. அதன் பிறகு 1977 — ஆம் ஆண்டு. டிசம்பர் 24 — ஆம் நாள். கிறிஸ்துமஸ் தினம். சுவிட்சர்லாந்தில் தமது வீட்டில், உற்றார் உறவினர் தன்னைச் சூழ்ந்து நிற்க, அவர் உயிர் துறந்தார். அன்றுடன் ஒரு மாபெரும் மனிதாபிமானம் மிக்க நடிகரின் வாழ்க்கை முடிந்து விட்டது.

குழந்தைகளே! பெரும் தலைவர்களின் நூற்றாண்டுகளை நாம் ஏன் கொண்டாடுகிறோம்? அவர்கள் நமக்குச் செய்த சேவைகளை எண்ணிப் பார்க்கவும், அவர்கள் காட்டிய பாதையில் பயணம் மேற்கொள்ளவும்தான் இல்லையா? அப்படிப் பார்த்தால், சார்லி சாப்ளினின் நூற்றாண்டில் நாம்என்ன செய்யவேண்டும்? அவரது பாதையைக் கடைப்பிடிப்பதுதான். அவரது லட்சியங்களை நிறைவேற்றுவதுதான். அந்த லட்சியம் என்ன?

'மனித வாழ்வு இனிமையானது. சதா துக்கப்பட்டு அதைப் பயன் படுத்திக் கொள்ளாமல், எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்,' என்று அவர் விரும்பினார்.

எனவே, குழந்தைகளே, அந்தக் கோணங்கி நடிகர் காட்டிய வழியில் சதா சிரித்து மகிழுங்கள். அது ஒன்று தான் அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலி! இல்லையா?

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்



பூதலூர் முத்து

10

காலை வழிபாட்டுக் கூட்டம்.

தலைமை ஆசிரியர் தமிழன்பன் உற்சாகத்தோடு வந்து நின்றார்.

"நம் பள்ளியில் சிறப்பாக இயங்கி வரும் 'அறிவியல்' கழகம் ஒரு சுற்றுலாவை ஏற்பாடு செய்கிறது. கல்வராயன் மலைக்குச் செல்கிறோம். சேர விரும்புகிறவர்கள் அரவிந்தனிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள். சென்று வந்ததும் அது பற்றிக் கட்டுரை எழுதும்படி கட்டாயப்படுத்த மாட்டோம். தம் எண்ணங்களை ஆர்வத்தோடு வெளிப்படுத்த விரும்புகிறவர்கள் வண்ணப் படமாகத் தீட்டலாம்; வளமான கவிதையாக வடிக்கலாம். ஒரு கடிதமாகக் கூட எழுதலாம். எதற்கும் தடையில்லை. அது அவரவர் விருப்பம்! இயல்பான உங்கள் திறமைகளை வளர்க்கவும் பாராட்டவும் நாங்கள் இங்கே முனைப்போடு நிற்கிறோம்."

அவருடைய அந்த அறிவிப்பு மாணவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

அறிவியல் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் முடிந்து அரவிந்தன் வெளியே வந்தான். உண்வு இடைவேளை. அவனும் நண்பர்களும் திடலில் இருந்த வேப்ப மரத்தடியில் அமர்ந்தார்கள்.

"அரவிந்தன், இந்தச் சுற்றுலாவில் நமக்கு என்ன பயன் கிடைக்கும்?" முகம்மது அலி கேட்டான்.

"இயற்கைச் சூழல் நமக்கு எத்தனையோ நன்மைகளை அளித்து வருகிறது. அதைப் பாடத்தில் படிப்பதோடு நின்றுவிடாமல் நேரிலும் சென்று கண்டு உணர்வதற்கு இந்தச் சுற்றுலா பயன்படும். இயற்கைச் சூழல் அழிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகளை நாம் நன்கு அறிந்து கொள்ளவும் இது உதவும்" என்றான் அவன்.

உடனே பகத், "உயர்ந்து நிற்கும் மலை... கொட்டும் அருவி இவையெல்லாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்!" என்றான்.

உள்ளத்தில் அந்தக் காட்சிகளை அவன் கற்பனை செய்கிறான் என்பதை அவனுடைய மலர்ந்த கண்கள்

வெளிப்படுத்தின.

''இந்தச் சுற்றுலாவுக்குப் போய் வந்த பின்னால், மரங்களை அன்போடு வளர்க்க வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் வந்து விடும்,'' என்றான் ராமு.

அரவிந்தன், ''அப்படி வளர்ப்பவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி! நம் பள்ளியில் ஒரு மரக்கன்றை நட்டு அதை இரண்டாண்டுகள் கவனித்து வளர்க்கின்ற ஒவ்வொருவருக்கும் 'இயற்கை நண்பன்' என்ற பட்டம் பொறிக்கப் பெற்ற பதக்கம் தரப் போகிறார்கள். அதோடு பள்ளிச் சீருடையும் அளிக்கப் போகிறார்கள்,'' என்றான்.

அங்கு வந்த மாணவர்கள் அதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

''நம் தலைமையாசிரியர் இதைப் போல் நிறையத் திட்டங்கள் வைத்திருக்கிறார். அதைச் செயல்படுத்தவும் முனைந்து ஈடுபடுகிறார். ஆசிரியர்கள் அவருக்கு உறுதுணையாக இருப்பதைப் போல நாமும் இருக்க வேண்டும். மாணவர்களால் அவருடைய மன அமைதி கெடக் கூடாது; பள்ளியின் பெயர் பாழ்படக் கூடாது.''

அரவிந்தன் சொன்னதைக் கேட்ட ராமு, ''ஒற்றுமையாகக் காட்சியளிப்பதே சிலருக்குக் கண்களை உறுத்துகிறதே... என்ன செய்வது?'' என்று கேட்டான்.

''நாம் நம் உழைப்பால் முன்னேறுகிறோம்; நல்ல பெயர் பெறுகிறோம். அதைக் கண்டு பொறாமைப்படுகிறார்கள். சோம்பலில் வாழ்பவர்க்கு அது சுலபமாக இருக்கிறது. அவர்களும் உழைத்து முன்னேறத் தொடங்கிவிட்டால் இந்தப் பொறாமை உணர்ச்சி ஓடிவிடும்'' என்றான் பீட்டர்.

''ஒற்றுமைக்குத் தடையாக உள்ள இந்தப் பொறாமையை, காழ்ப்புணர்ச்சியை நாம் பாடுபட்டு நீக்க வேண்டும்,'' என்றான் அரவிந்தன்.

''தவறைச் செய்துவிட்டுப் பழியை நம்மீது போடுகிறார்கள். அதையும் நாம் முயன்று போக்க வேண்டும்.''

முகம்மது அலி உணர்ச்சியோடு சொன்னான். அவனுடைய உள்ளத் துடிப்பு எல்லோருக்கும் விளங்கியது.

''விரைவில் போக்கி விடுவோம். கவலைப்படாதே.''

நண்பர்கள் ஒன்றாகக் குரல் கொடுத்தார்கள்.

சுற்றுலாவில் சேர விரும்பிய மாணவர்கள் அரவிந்தனிடம் வந்து பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருந்தார்கள்.

பிற்பகலில் பள்ளிக்கு வந்த வேலப்பன் அறிவிப்புப் பலகையில் சுற்றுலா பற்றிய விவரத்தைப் படித்தான். அதில் கலந்து கொள்ள விரும்பினான். ஆனால் அரவிந்தனிடம் பெயரைக் கொடுக்க அவனுக்கு விருப்பமில்லை.

'அரவிந்தனை விட்டால் பள்ளிக் கூடத்தில் வேறு ஆளே இல்லையா? அவனை ஒரேயடியாகத்தான் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுகிறார்கள்!'' எனப் பொருமினான்.

அரவிந்தனிடம் போய் நிற்காமல் சுற்றுலாவில் சேர வேண்டும். அதற்கு



என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

காலையில் அவனுடைய தந்தையும் ஆசைத்தம்பியின் தந்தையும் பள்ளிக்கு வந்துவிட்டுப் போன விஷயத்தைப் பணியாள் ஒருவன் அவனிடம் கூறினான். அச்செய்தி அவனைப் பரபரப்புக்கு உள்ளாக்கியது.

ஆசைத்தம்பியைப் பற்றி விவரம் அறிய அவனுடைய வீட்டுக்குப் போனால் வீராசாமி பிடித்துக் கொள்வார். தம் மகன் கெடுவதற்கு அவன் தான் காரணம் என்று பழி போடுவார். வீட்டுக்குப் போனால் தந்தை பிடித்துக் கொள்வார். கோபத்தில் ஏதாவது செய்து விடுவார். என்ன செய்வது என்று யோசித்தான்.

அந்தச் சமயத்தில் செல்வராசுவின் கண்ணில் பட்டாலும் தொல்லை என்று உணர்ந்து கடைத்தெருவைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

பள்ளியிலிருந்து வந்த விமலானந்தம் கடைக்குப் போகாமல் வேலப்பனின் வருகைக்காக வீட்டிலேயே காத்திருந்தார்.



பள்ளிக்கூடம் விட்டு மூன்று மணி நேரமாகியும் அவனைக் காணவில்லை.

வேலப்பனைப் பற்றி நினைத்த ஆண்டாளின் இதயம் வேதனைக்குள்ளாகியது.

''அவன் பாடப் புத்தகத்தைப் படித்து வெகு நாள்களாகி விட்டன. ஒரு வேலையில் இருப்பவன் கூட இவ்வளவு தாமதமாக வர மாட்டான். என்னால் இயன்ற அளவு சொல்லிப் பார்த்து விட்டேன். இதற்கெல்லாம் ஒரு முடிவை நீங்கள்தான் எடுக்க வேண்டும்.''

அவள் சொன்னது அவருடைய காதில் விழுந்தது. ஆனால் பதில் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தார்.

அவர் அப்படி இருந்தால் மிகுந்த கோபத்தில் இருக்கிறார் என்று பொருள்!

வாயில் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது.

விமலானந்தம் வரிந்து கட்டிக் கொண்டு எழுந்தார். வேலப்பன் வரவில்லை. அவருடைய உறவுக்கார இளைஞர் மணிவாசகம் அங்கே நின்று கொண்டிருந்தார். கோபத்தை மறைத்துக் கொண்டு அவரை வரவேற்றார்.

''வாருங்கள் மணிவாசகம்! பார்த்து வெகு நாளாயிற்றே!''

''ஆமாம் மாமா. கல்லூரி விடுதியில் தங்கிப் படித்ததால் அடிக்கடி ஊருக்கு வரவில்லை. படிப்பு முடிந்து விட்டது. பாரதி மேல்நிலைப் பள்ளியில் வேலை கிடைத்துள்ளது. நாளை பணியில் சேர வேண்டும்.''

அந்தச் செய்தி அவருடைய உள்ளத்தில் இனம் புரியாத மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

'வேலப்பனைப் பற்றித் தீவிரமாக நினைக்கத் தொடங்கிய நேரத்தில் மணிவாசகம் வந்திருக்கிறாரே! பாரதி பள்ளியில் அவர் இருப்பது நமக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும். இனிமேல் மனச்சுமை இறங்கிய மாதிரிதான். தலைமை ஆசிரியர் நம்மை அடிக்கடி கூப்பிடும் நிலை வராது; அவர் கவனித்துக் கொள்வார்.' விமலானந்தம் கற்ப

னைக் கடலில் கனவுத் தோணியை ஓட்டிக் கொண்டிருந்தார்.

வாசலில் காலடியோசை கேட்டு நிமிர்ந்தார். வேலப்பன் தோளில் புத்தகப் பையோடு நின்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்க்க எரிச்சலாக இருந்தது. சிரமப்பட்டுக் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

'மணிவாசகத்தின் முன்னால் அவனைத் திட்டினால் நம் திட்டமெல்லாம் வீணாகி விடும். பயல் பிழைத்துப் போகட்டும்' என்று நினைத்தார்.

வேலப்பனும் மிகவும் அமைதியாக இருந்தான்.

விமலானந்தம் உள்ளே வந்தார். ஆண்டாள் அவரிடம், ''தம்பி மணிவாசகத்திடம் வேலப்பனைப் பற்றிய உண்மைகளைக் கூறுங்கள். எப்படியும் திருத்திக் கொண்டு வந்து விடுவார். நம் மகள் தமிழ்ச் செல்விதான் படிக்க இயலாமல் போய் விட்டது. இவனாவது ஒழுங்காகப் படித்து முன்னேறட்டும்'' என்றாள்.

''ஆண்டாள்! அவரிடம் இப்போது உண்மையைச் சொன்னால் காரியம் கெட்டு விடும். பரமபத விளையாட்டில் பாம்பு கடித்துக் கீழே இறங்குவது போல் இறங்கியிருக்கிறோம். மணிவாசகம் என்ற ஏணியைப் பிடித்துக் கொண்டு மறுபடி மேலே ஏறுவோம். வேலப்பன் பற்றிய விஷயத்தை இனிமேலும் மூடி மறைக்க நான் விரும்பவில்லை. ஆனால் இப்போது வேறு வழியின்றி அதே வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த ஒருமுறை மட்டும் பொறுத்துக் கொள். அவனோடு சேர்ந்து நானும் திருந்தி விடுகிறேன்.''

அவருடைய சொற்களில் ஆண்டாளுக்கு ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டது.

காலை நேரம். மணிவாசகமும் வேலப்பனும் பள்ளியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

வேலப்பனுடைய உள்ளத்தில் இனந்தெரியாத மகிழ்ச்சி தாண்டவமாடியது.

'பள்ளியில் இனிமேல் அரவிந்தனின் கொட்டத்தை அடக்கி விடலாம். சமயம் வாய்க்கும்போதெல்லாம் அவனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் மணிவாசகத்திடம் சொல்லி ஒரு வெறுப்பை வளர்த்து விடலாம். அப்படிச் செய்யாவிட்டால் அவரும் அரவிந்தனைப் பாராட்டத் தொடங்கி விடுவார்.'

''என்ன வேலப்பா, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாய் போலிருக்கிறதே!''

மணிவாசகத்தின் குரலைக் கேட்டு அவன் விழித்தான்.

''அறிவியல் கழகச் சுற்றுலாவில் நான் சேர வேண்டும். அதற்கு நீங்கள் உதவ வேண்டும்'' என்றான்.

''பள்ளிக்குச் சென்று பணியில் சேர்ந்தவுடன் முதல் வேலை உன்னுடைய கோரிக்கையைக் கவனிப்பது தான்.''

அவர் சொன்னதைக் கேட்டு அவன் மகிழ்ச்சியடைந்தான்.

பணம் கட்டப் போகும்போது ஆசைத் தம்பிக்கும் சேர்த்துக் கட்டுமாறு சொல்லி விடலாம் என்று நினைத்துக் கொண்டான்.

தலைமை ஆசிரியர், துணைத் தலைமை ஆசிரியர் வளவனையும் அரவிந்தனையும் அறைக்கு அழைத்தார்.

''இந்தச் சுற்றுலாவில் வேலப்பனையும், ஆசைத்தம்பியையும் அழைத்

''அந்த ஹோட்டல்ல அல்வா வைச்சுத் தர்ற பிளேட்டையும் இலவசமாத் தர்றாங்களாமே....!''

''ஆமாம். பிளேட்டை விட்டு அல்வாவை எடுக்க முடியலையாம். அதனால் இந்த ஏற்பாடாம்!''

— ஏ. ஆர். வீரராகவன் (2,118).



துச் செல்வது பற்றிய என் கருத்தை உங்களிடம் கூற விரும்புகிறேன்'' என்றார்.

வளவனும் அரவிந்தனும் அவருடைய எண்ணத்தை அறிய மிகுந்த ஆவலாக இருந்தார்கள்.

''பள்ளி மாணவர்கள் அனைவரும் நம்முடைய கண்மணிகள். அவர்களுடைய முகத்தில் தூசு இருந்தால் துடைத்து விட வேண்டியது நம்முடைய பொறுப்பு; கண்ணில் துரும்பு இருந்தால் எடுத்து விட வேண்டியது நம்முடைய கடமை. இந்தச் சுற்றுலாவில் பலரோடும் மனம் விட்டுப் பழகுகின்ற வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படும். உள்ளம் பண்படும். பள்ளி என்ற தோட்டத்தில் நாம் பூவாக இருக்கலாமே தவிர முள்ளாக இருக்கக் கூடாது என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும்.''

அவருடைய கருத்து அவர்களை மகிழ வைத்தது; நெஞ்சை நெகிழ வைத்தது.

'அவர்களுடைய செயல்கள் சந்தேகத்தை உண்டாக்கியபோதும் இவ்வளவு பெருந்தன்மையாக நடந்து கொள்கிறாரே! எப்படிப்பட்ட உயர்ந்த மனிதர் அவர்!'

அவர் சொன்ன மற்றொரு கருத்தும் புதுமையாக இருந்தது.

''இந்தச் சுற்றுலாவில் இருபத்தைந்து மாணவிகள் கலந்து கொள்கிறார்கள். அவர்கள் விரும்புகிற ஒரு பெண்ணை அழைத்து வரலாம். அவள் தோழியாகவோ உறவுப் பெண்ணாகவோ — ஏன், வீட்டு வேலைக்காரச் சிறுமியாகவோ கூட இருக்கலாம். பள்ளியில் படிக்கிறவர்களுக்குக் கிடைக்கும் சில வாய்ப்புகள், கல்வி பயில வாய்ப்பில்லாத மற்றவர்க்கும் கிடைக்கட்டும் என்பது என் ஆசை!''

எந்தத் திட்டமும் சமூகப் பயன்பாடு உடையதாக இருக்க வேண்டும் என்று அவருடைய உள்ளம் விழைந்தது. அது அவருடைய செயல்களில் வெளிப்பட்டது.

வளவன் அந்தத் திட்டத்தை, சுற்றுலாவில் பங்கேற்கும் மாணவிகளிடம் தெரிவித்தார். அதைக் கேட்ட அவர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்கள்.



மணிவாசகம், வேலப்பனுடைய ஆசையை நிறைவேற்றத் தலைமை ஆசிரியரின் அறைக்குச் சென்றார்.


''மணிவாசகம்! நீங்கள் பணியில் சேர்ந்த உடனேயே ஒரு சுற்றுலாவில் பங்கேற்கிறீர்கள். நீங்கள் உயிரியல் ஆசிரியர். உங்களால் எங்களுக்கு மிகுந்த பயன் ஏற்படும். சுற்றுலாவுக்கு வருகிற மாணவர்களின் பட்டியல் இதோ! இதைத் துணைத் தலைமை ஆசிரியர் வளவனிடம் கொடுங்கள். மாணவிகளின் பட்டியலை விரைவில் தருகிறேன். சுற்றுலா தொடர்பான ஏற்பாடுகளை அவருடன் சேர்ந்து கவனியுங்கள்.''

அவருடைய சொற்கள் அவருக்கு ஊக்கமளித்தன.

பணியில் சேர்ந்தவுடனே பாராட்டி வாழ்த்திய அவருடைய செயல் மணிவாசகத்தை மிகவும் கவர்ந்து விட்டது. மனிதரிடையே அன்பையும் நம்பிக்கையையும் வளர்க்கும் மாபெரும் மனிதர் அவர் என்பதை உணர்ந்து விட்டார்.

வேலப்பனை இந்தச் சுற்றுலாவில் சேர்க்க வேண்டும். ஆனால் பட்டியலைக் கையில் கொடுத்திருக்கிற இந்த நேரத்தில் அவரிடம் அதைச்

கப்சிப் சிரிப்



சொல்ல முடியாதே... சொல்வது அவ்வளவு நன்றாக இருக்காதே என்று எண்ணினார்.

வளவனின் அனுமதியோடு அந்தப் பட்டியலைப் பார்த்தார்.

முதலாவது இடத்தில் வேலப்பனின் பெயர் இருந்தது. அதைத் தொடர்ந்து ஆசைத்தம்பி, அரவிந்தன், பகத் என்று பெயர்கள்!

மணிவாசகம் அதை எதிர்பார்க்கவில்லை. 'இந்த விந்தை எப்படி நடந்தது?' என்று வியந்தார்.

''முதலில் உள்ள பத்துப் பேருக்கான . தொகையைத் தலைமை ஆசிரியரே கட்டி விட்டார்'' என்று வளவன் கூறியது அதைவிட விந்தையாக இருந்தது.

'அவனுடைய வேண்டுகோள் நிறைவேறி விட்ட செய்தியை வேலப்பனிடம் தெரிவிக்க வேண்டும்.'

அவர் ஆர்வத்தோடு நடந்தார்.

வளவன் அன்றைக்கு வந்த அஞ்சல்களைத் தலைமை ஆசிரியரின் பார்வைக்கு வைத்திருந்தார்.

தம் பெயருக்கு வந்தவற்றைப் பிரித்துப் படித்தார் தமிழன்பன்.

ஒரு கடிதம் வித்தியாசமானதாக இருந்தது:

''பாரதி பள்ளியில் சுற்றுலா செல்வதறிந்து மிகவும் மகிழ்ச்சி. இந்தச் சுற்றுலா நல்ல முறையில் அமைய வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள். அப்படியானால் வேலப்பனை இதில் சேர்க்க வேண்டாம். இது என் அன்பு வேண்டுகோள். அவனைச் சேர்த்தால் வீண் தொல்லைகள் வரும். தொல்லையை ஏன் விலை கொடுத்து வாங்க வேண்டும்?''

வழக்கமாக எச்சரிக்கைக் கடிதங்கள் 'மொட்டை'யாக வரும். ஆனால் அந்தக் கடிதத்தின் கீழே பெயரும் முகவரியும் தெளிவாக எழுதப்பட்டிருந்தன:

செல்வராசு, கோமதி நியூஸ் ஏஜன்சி, பாரதி வீதி, புதுவை.

அது அவருக்கு வியப்பாக இருந்தது.

'ஒருவேளை, இந்தக் கருத்தை எழுத விரும்பியவன் அந்தப் பையனுடைய பெயரையும் முகவரியையும் பயன்படுத்தியிருக்கிறானோ!''

அப்படியிருக்க வழியில்லை என்பதைக் கடிதத்தில் இருந்த ரப்பர் முத்திரை உணர்த்தியது. 'பள்ளியின் மீது கொண்ட உண்மையான அக்கறையின் காரணமாகத்தான் செல்வராசு இப்படி எழுதியிருக்கிறான்! எனவே, அவனுடைய வேண்டுகோளை அவசியம் பரிசீலனை செய்ய வேண்டும்.'

வளவனை அறைக்கு வருமாறு அழைத்தார். அந்தக் கடிதத்தை அவரிடம் காட்டினார்.

வேலப்பனையும் ஆசைத்தம்பியையும் சுற்றுலாவில் சேர்த்துக் கொண்ட செய்தியை அவர்களிடம் அவர் ஏற்கெனவே தெரிவித்து விட்டார். அவர்களும் ஓடியாடிச் சுற்றுலா வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'இந்த நேரத்தில் இப்படி ஒரு கடிதம் வந்திருக்கிறதே... சுற்றுலா நல்ல முறையில் அமைய வேண்டுமே...'


வளவன் கவலையோடு சிந்தித்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி.முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

இனிக்கும் இலக்கணம்



உற்சாகமூட்டிடும் நியூட்ரின் மில்க் பிஸ்கெட்டுகள்
இருக்கும் போது ஆனந்தத்திற்குக் குறைவேது!
வீட்டுப் பாடங்கள் கூட இனி ஜோராய் இனிக்கும்.
பால் புரதத்துடன் கூடிய மொறு மொறு
பிஸ்கெட்டுகள். உள்ளங்கவர் மழலைச் செல்வங்கள்
நாளும் சுவைத்து மகிழ்ந்திட.



பால் நலம்.
சுவை வளம்.

Mudra:Blr:NB:177:89:TAM